Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

AXSHAYA CONSTRUCTION JAFFNA
கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடு
களைத் திருத்துதல், குளியலறை கட்டுதல்
Plumbing, Electrical, Painting
அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும்
குறித்த காலத்திலும் செய்து
கொடுக்கப்படும்.
தொடர்புக்கு: 0776679564
(C/3690)

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 01 ஞாயிற்றுக்கிழமை (15.06.2014) பக்கங்கள் 20 ஓசை – 257

## கொள்ளையர்கள் தாக்குதல்; சுதுமலையில் பெண் மரணம்



(யாழ்ப்பாணம்)

சுதுமலை வடக்குப்பகுதியில் வீடொன்றில் கொள்ளையடிக்கச்சென்ற திருடர்கள் குழு அங்கு பெண்ணொருவரைக் கொலை செய்து விட்டு மற்றுமொரு பெண்ணை அடித்துக்காயப்படுத்திவிட்டு அங்கிருந்து தங்கநகைகள், பணம் உட்பட்ட பொருட்களை கொள்ளையடித்துச்சென்றுள்ளது.

சுதுமலை வடக்கு மானிப்பாய் பகுதியில் நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் குமாரலிங்கம் பத்மாவதி (வயது-56) என்பவர் உயிரிழந்ததுடன் நடராசா -தெய்வானை (வயது-60) என்பவர் காயமடைந்தார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய

19 ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போன மாணவன் நேற்று முன்தினம் வீடுதிரும்பினான்



வவுனியா நகரப் பகுதியில் வைத்து கடந்த மாதம் 27ஆம் திகதி காணாமற்போனதாகக்கூறப்படும் கல்மடு கிராமத்தைச் சேர்ந்த மகாலிங்கம் ரஜீவன் என்ற மாணவன் நேற்று முன்தினம் இரவு வீடு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மாணவன் கடந்த 27ஆம் திகதி வவுனியா பகுதியில் மரக்கறி விற்பனை செய்வதற்காக சென்றிருந்தபோது காணாமற் போயுள்ளார்.

இதனையடுத்து மனித உரிமை ஆணைக் குழு மற்றும் வவுனியா பொலிஸ் என்பவற்றுக்கு மாணவனது பெற்றோர்கள் முறைப்பாடு மேற்கொண்டிருந்தனர்.

இந் நிலையில் நேற்று முன்தினம் இரவு கைகள் கட்டப்பட்ட நிலையில் இனந்தெரியாதோரால் குறித்த மாணவன் அவரது வீட்டிற்கு அருகாமையில் கொண்டு வந்து விடப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, குறித்த மாணவனை

19 ஆம் பக்கம் பார்க்க

# இருபது வருடங்களுக்கு பின்னர் கிளி.இல் விவசாயபீடம் ஆரம்பம்



## அமைச்சர் டக்ளஸின் முயற்சிக்கு பலன்

(கிளிநொச்சி)

அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவின் தீவிரமான முயற்சியின் பலனாக இருபது வருடங்களுக்குப் பின்னர் மீளவும் நேற்றையதினம் யாழ். பல்கலைக்கழக விவசாயபீடம் கிளிநொச்சியில் ஆரம்பமானது.

1990 ஆம் ஆண்டு டிசம்பர் 03 ஆம் திகதி கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட யாழ். பல்கலைகழகத்தின் விவசாய பீடம் யுத்தம் காரணமாக யாழ்ப்பாணத்திற்கு இடம்பெயர்ந்து சென்றது. தொடர்ந்து அது யாழ்ப்பாணத்திலேயே இயங்கி வந்தது. இந்த நிலையில் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் 567 ஏக்கர் நிலத்தில் யாழ் பல்கலைகழகத்தின் விவசாய மற்றும் பொறியியல் பீடங்கள் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் மேற்கொள்ளப்பட்டு கடந்த பெப்ரவரி மாதம் பொறியியல் பீட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இன்று விவசாய பீடமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப்பீடங்களின் செயற்பாட்டிற்காக இந்திய மற்றும் இலங்கை அரசின் 700 மில்லியன்

19 ஆம் பக்கம் பார்க்க

### தமிழரசுக்கட்சியின் யாப்பின்
## ஆங்கில மொழி பெயர்ப்பை சமர்ப்பிக்குமாறு உத்தரவு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாப்பின் ஆங்கில மொழி பெயர்ப்பை சமர்ப்பிக்குமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கட்சியின் கொள்கைப் பிரகடனத்தில் செய்யப்பட்ட சில திருத்தங்கள் நாட்டின் ஐக்கியத்தை பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கட்சியின் மூல யாப்பு மற்றும் கொள்கைப் பிரடகனத்திருத்தம் ஆகியனவற்றை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் அதன் ஆங்கில மொழி பெயர்ப்புக்களை சமர்ப்பிக்குமாறும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கே.டி. சந்திரசோம என்பவரினால் உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுதொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமஷ்டி மற்றும் இணையாட்சி என்னும் இரண்டு பதங்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா.விசாரணைக்குழுவிற்கு கட்சி பேதமின்றி எதிர்ப்பு
### தயான்ஜயதிலக ஆலோசனை

ஐ.நா. மனித உரிமைகள் விசாரணைக்கு கட்சி பேதமின்றி எதிர்ப்பை வெளியிட வேண்டும் என ஜெனிவாவுக்கான முன்னாள் வதிவிடப் பிரதிநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார். மனித உரிமை அலுவலக அதிகாரிகள் இலங்கை வர முயற்சித்தால், அதற்கு இடமளிக்கப் படமாட்டாது என அவர்களுக்கு நன்றாகத் தெரியும். விசாரணைக் குழுவிற்கு இலங்கை வர அனுமதித்தால், இன்னல்களுக்கு முகங்கொடுக்க நேரிடும். ஏனெனில் அவர்கள் சகல இராணுவ முகாமிற்கும் விஜயம் செய்வதுடன் விரும்பிய இராணுவ அதிகாரிகளுடனும் உரையாடுவர். எனவே, கட்சி பேதமின்றி சகலரும், சர்வதேச விசாரணைக்கு எதிர்ப்பினை வெளியிட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## 400இற்கும் மேற்பட்ட கடாக்கள் கவுணாவத்தையில் வெட்டிச்சரிப்பு



பலத்த பொலிஸ் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பரிசோதகர்களின் அனுமதியுடன் கீரிமலை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலய வேள்வி நேற்று அதிகாலை நடைபெற்றது. இந்த வேள்வியில் 400இற்கும் மேற்பட்ட கடாக்களும் 150இற்கும் மேற்பட்ட

19 ஆம் பக்கம் பார்க்க

## கூவர் கலையரங்கம் மருத்துவபீடத்தில் திறப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கூவர் கலையரங்கம் நேற்று பிற்பகல் திறந்து வைக்கப்பட்டது.

மருத்துவ பீடாதிபதி பாலகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அமைச்சர்களான டக்ளஸ்தேவானந்தா, எஸ்.பி.திஸாநாயக்கா ஆகியோர் அரங்கை

19 ஆம் பக்கம் பார்க்க

## விசாரணைக்குழுவின் முதல் கூட்டம் அடுத்தமாதம் ஜெனிவாவில்

ஐ.நா. மனிதஉரிமை ஆணையாளர் பணியகத்தினால் நியமிக்கப்பட்டுள்ள இலங்கை குறித்த விசாரணைக்குழுவின் முதலாவது கூட்டம் அடுத்த மாதம் ஜெனிவாவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் பேச்சாளர் ருபேட் கொல்வில், தெரிவித்துள்ளதாவது விசாரணைக் குழுவுக்கு ஆலோசனையையும் உதவியையும் வழங்குவதற்கு மூத்த நிபுணர்களின் சிறிய குழுவொன்

19 ஆம் பக்கம் பார்க்க

உள்ளே
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்

## INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional procurement Cornmittee Teaching Hospital, Jaffna invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| Work Service Details | Non refundable deposit(Rs) (bid fee) | Security Deposit (Rs) | Validity period of bid security (Days) | Approximate Direct cost of the work (Rs.in.million) | Minium ICTAD grade |
|---|---|---|---|---|---|
| Aluminium partition in JICA buildings stores | 500.00 | 7,000.00 | 90 | 0.31 | C 10 |
| Renovation of Toilets in ward No. 07 &08 | 500.00 | 36,000.00 | 90 | 1.7 | C9 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure

2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and

Shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction , Training and Development (ICTAD).

3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna, during office Hours. if necessary.

4. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested

Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and Receipt for the cash payment for the bid fee from 17.06.2014 up to 24.06.2014 during office

Hours. The payment Shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.

5. Sealed bids shall be delivered to the address below at before 15.00 hrs on 25.06.2014,late

Bides will be rejected bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders, representatives who choose to attend.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
16.06.2014. (C/3710)


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

**நியத்த ஜய**
உத்தியோகபூர்வ முடிவு

| | |
|---|---|
| வெற்றி வாரம் - | 264 |
| திகதி - | 2014.06.13 |
| வர்ணம் - | நீலம் |

வெற்றி இலக்கங்கள் — ஆங்கில எழுத்து

09 15 21 43 V

பரிசுத் தொகை ரூபா. 21,211,320/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | - | - |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 05 | 250,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 177 | 177,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 294 | 294,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 7860 | 471,600/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4079 | 163,160/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 102481 | 2,049,620/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 14843 | 296,860/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 21,211,320/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 3,702,240/- |

எதிர்வரும் செவ்வாய்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 21,411,360/-

2014.06.17ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk
(C/3698)


# உள்ளூராட்சி வார நிகழ்வுகள் நாளை முதல் ஆரம்பம்

வடமாகாணத்தில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளிலும் நாளை திங்கட்கிழமை முதல் உள்ளூராட்சி வாரம் ஆரம்பமாகவுள்ளது.

மாநகரசபை, நகரசபை, பிரதேச சபையென 34 சபைகளிலும் 2014 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி வார நிகழ்வுகள் சபைகளின் தலைவர் செயலாளர் தலைமையில் 7 நாட்களுக்கு இடம்பெறவுள்ளன.

முதலாம் நாள் நடமாடும் சேவைகள் தினம், இரண்டாம் நாள் வருமான மேம்பாட்டுத் தினம், மூன்றாம் நாள் சுகாதாரம் துப்புரவேற்பாட்டுத் தினம், நான்காம் நாள் மக்கள் பயன்பாட்டு தினம், ஐந்தாம் நாள் மரம் நாட்டு தினம், ஆறாம் நாள் கல்வி, நூலக அபிவிருத்தி தினம், ஏழாம் நாள் விருதுகள் பரிசில்கள் வழங்கும் தினம்

மேற்படி உள்ளூராட்சி வார செயற்பாடுகள் குறித்த திகதியில் ஆரம்பித்து செயற்பாட்டு விபரங்களை உரிய அமைச்சிற்கு அறிக்கையிடுமாறு வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கேட்டுள்ளார்.

இதேவேளை மேற்படி உள்ளூராட்சி வாரச்செயற்பாடுகள் நாடு தழுவிய உள்ளூராட்சி சபைகளிலும் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

மேற்படி உள்ளூராட்சி வாரம் ஜீன் 16 முதல் 22 வரை இடம்பெறும். (92)

# பொலிஸ் உத்தியோகத்தரையும் விட்டுவைக்காத காதல் தகராறு

தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் ஐயாத்துரை நிர்மலன் (வயது 30) என்ற பொலிஸாரே அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, காதல் விவகாரத்தில் காதலியுடன் தகராறு காரணமாக நேற்று இரவு மருந்து குடித்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

குறித்த நபர் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (25)

# இன்றைய நிகழ்வுகள்

## மாதாந்த பொதுக்கூட்டம்

சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்க சாவகச்சேரி பிராந்திய சபையின் மாதாந்த பொதுக் கூட்டம் இன்று இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு சபைத்தலைவர் கா.கஜேந்திரன் தலைமையில் இக் கூட்டம் இடம்பெறும்.

இப்பிராந்திய சபை மாதாந்த பொதுக்கூட்டத்தில் சங்க நிர்வாக சபை உறுப்பினர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்.வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று இடம்பெறுகின்றது.

நாவலர் வீதியிலுள்ள சைவ சமய அபிவிருத்திக் கழக அறிவகத்தில் காலை 10.30 மணிக்கு இப்பொதுக் கூட்டம் இடம்பெறுவதுடன் புதிய நிர்வாகத்தெரிவும் இடம்பெறும்.

## திருநாள் திருப்பலிப் பூசை

மானிப்பாய் அந்தோனியார் ஆலய திருநாள் திருப்பலி பு,சை. இன்று காலை 5 மணிக்கு நடைபெறும்.

தொடர்ந்து திருவிழா திருப்பலிப்பூசை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு திருச்சொரூப பவனியும் வழமை போன்று நடைபெறும் என ஆலயப் பங்குத் தந்தை அறிவித்துள்ளார். (66)

## கிரிக்கெட் போட்டி

(சாவகச்சேரி)

கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குமரன் வி.க நடாத்தும் யோகேஸ்வரன் நிசாந்தன் நினைவு கிரிக்கெட் போட்டி இன்று பி.ப. 2.30 மணிக்கு கைதடிகுமரநகர் மத்தி விளையாட்டுகழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அணிக்கு 6பேர் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இப்போட்டியில் கைதடி குமரன் சுப்பிரிங்கிங்கை எதிர்த்து மட்டுவில் கண்ணகை மோதவுள்ளது. (11)

## கலந்துரையாடல்

யாழ். சர்வதேச மார்க்சிய குழுவின் ஜனாதிபதித் தேர்தலும் பொது வேட்பாளர் தெரிவும் தொடர்பிலான கலந்துரையாடல் இன்று இடம்பெறுகின்றது.

D.C.M தனியார் கல்வி நிறுவனத்தில் இன்று மாலை 4 மணிக்கு ஏ.சி. ஜோர்ஜ் தலைமையில் இடம்பெறும் இக் கலந்துரையாடலில் சொ.சிவபாலன் ஆரம்ப உரை நிகழ்த்துகிறார். இதில் ஆர்வலர்களைக் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## குறும்பட வெளியீடு

சாவகச்சேரி எஸ்.ஏ.நிலானின் 'ஆழி' குறும்பட வெளியீடு இன்று இடம்பெறுகின்றது.

மாலை 3 மணிக்கு சாவகச்சேரி தபால் நிலைய வீதியிலுள்ள பாலா திரையரங்கில் இக் குறும்பட வெளியீடு இடம்பெறவுள்ளது. (11)


# சிறு விளம்பரங்கள்

## காணி விற்பனைக்கு

முல்லைத்தீவு, வள்ளிபுனம் பழைய பாரதி இல்லத்திற்கு முன்பாகவுள்ள 1 3.:.4 ஏக்கர் தென்னங்காணி சிறிய வீடு கிணறுடன் விற்பனைக்குண்டு

தொடர்பு-0776388611, 0777503918 (C/3709)

□ □ □ □ □

## வேலைவாய்ப்பு

நிரந்தரமான தொழில், நிரந்தரமான சம்பளத்துடன் 24,000.00 - 38,000.00 வரை வருகை தரும் தினமே சேர்த்துக்கொள்ளப்படுவர். (உற்பத்தி பொதியிடல், மேற்பார்வையாளர்) சாப்பாடு, தங்குமிட வசதியுண்டு. 18 - 55 வரையான ஆண், பெண்களும், குழுக்களாகவும் இணைந்து கொள்ளலாம். தொ.பே-0710854068.

□ □ □ □ □

விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர். பெக்கிங் 18 - 55 வரையான ஆண். பெண் தேவை. சம்பளம் 18,000.00-35,000.00 வரை. தங்குமிடம், உணவு, பயிற்சி வழங்கப்படும். வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள். தொ.பே-0775964299 (R/348)

□ □ □ □ □

## டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3395)

# எம்மை நெறிப்படுத்தி வாழ கம்பராமாயணம் வழிகாட்டுகின்றது

## ஓய்வு பெற்ற நீதியரசர் விஸ்வநாதன் தெரிவிப்பு

(யாழ்.நிருபர்)

கம்பனுடைய இராமாயன கதாபாத்திரங்கள் காலம் காலமாக எம்மை நெறிப்படுத்தி சீரான வாழ்வு வாழ வழிகாட்டியாக நிற்கின்றன. இன்றைய இளைய தலைமுறையினர் கம்பராமாயணத்தைக்கற்று அதில் உள்ள ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்ற முன்வரவேண்டும்.

இவ்வாறு அகில இலங்கைக் கம்பன்கழகம் யாழ்ப்பாணத்தில் நடத்திய கம்பன்விழாவில் தொடக்கவுரை நிகழ்த்திய கொழும்பு கம்பன் கழக பெருந்தலைவர் ஓய்வுபெற்ற நீதியரசர் ஜெ.விஸ்வநாதன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை' நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் கம்பன் விழாவை ஆரம்பித்து தொடக்கவுரை நிகழ்த்திய நீதியரசர் விஸ்வநாதன் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாணத்தில் முன்னர் பெரிய அளவில் கம்புன் விழாக்கள் நடைபெற்று வந்தன. நல்லூர் வீதியில் அழகான பந்தல் அமைத்து நடைபெற்ற இவ்விழாக்களில் பெருந்திரளான மக்கள் கலந்துகொள்வார்கள். 1995 இடம்பெயர்வுக்குப் பின்னர் பல வருட இடைவெளியில் மீண்டும் கடந்த இரண்டு ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தில் கம்பன் விழா களை கட்டத் தொடங்கிவிட்டது.

நாடகங்கள் மற்றும் கதைகள் ஊடாக சொல்லப்படும் அறநெறி, தர்மம் என்பன சாதாரண மக்கள் மனங்களிலும் இலகுவாகப் பதிந்து விடுகிறது. நாடகத்தைப் பார்க்கின்ற ரசிகர்களும் கதைகளை வாசிக்கின்ற வாசகர்களும் கதைகளை வாசிக்கின்ற வாசகர்களும் கதாபாத்திரங்களின் உணர்வுகளுடன் ஒன்றிவிடுவர். தாமும் அவர்களைப் போல தர்மத்தைக் கடைப்பிடித்து ஒழுக்கசீலர்களாக வாழ விரும்புவர். எனவே நாமும் கம்பனின் படைப்பில் மூழ்கி எமது வாழ்வினை அறநெறியில் வளர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இராம நாடகக் கீர்த்தனை என்ற நூலும் 2013 யாழ்ப்பாணக் கம்பன் விழா இறுவட்டும் வெளியிடப்பட்டது. முதற்பிரதிகளை முறையே கரிகணன் பிறிண்டேஸ் முகாமைத்துவப் பணிப்பாளர் சி.ராஜ்குமார், வைத்திய கலாநிதி வெ.சுதர்சன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். தமிழக அறிஞர் புலவர் மா.இராமலிங்கம் தலைமையில் "தேசம்காத்த தேவி" என்னும் விருதுக்குப் பொருத்தமானவள் கோசலையே! சுமித்திரையே! தாரையே! என்னும் பொருளில் இலக்கிய ஆணைக்குழு இடம்பெற்றது. ரி.ரெங்கராஜா, வி.அசோக்குமாரன், இ.ஜெயராஜ் ஆகியோர் வாதிட்டனர். (10)

# வறுமைப்பட்ட 2 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கும் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

வறுமைக் கோட்டிற்குட்பட்ட இரு குடும்பங்களிற்கு வடமாகாண ஆளுநர் ஜீஏ.சந்திரசிறியினால் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கமைய கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் தரம் 8 இல் கல்வி பயிலும் கஜலட்சி என்ற மாணவி பாடசாலைக்கு நீண்டதூரம் நடந்து சென்றே கல்வி பயில்வதாகவும் துவிச்சக்கரவண்டியை வழங்குமாறும் வடமாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இக் கோரிக்கையின் பிரகாரம் அம் மாணவியையும் பெற்றோரையும் அழைத்து ஆளுநரால் துவிச்சக்கர வண்டி வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு யாழ்ப்பாணம் காட்டுக்கந்தோர் பகுதியைச் சேர்ந்த யாளினி என்ற குடும்பப் பெண் யாருடைய உதவியுமின்றி நீண்டதூரம் நடந்து சென்று தனது பிள்ளையை பாடசாலையில் சேர்ப்பதாகவும் வீட்டின் மேல் கூரை சேதமடைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியதையடுத்து அவருக்கு துவிச்சக்கர வண்டி, தகரம் என்பன ஆளுநரால் வழங்கப்பட்டது.

உதவிப் பொருட்கள் வழங்கும் நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலர் இ.இளங்கோவன், கணக்காளர் சஜித் சாந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். இவ்விரு குடும்பங்களும் ஆளுநருக்கு நன்றி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# வைகாசிப்பெருவிழா



(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் நடத்திய வைகாசிப் பெருவிழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆச்சிரம மண்டபத்தில் எஸ். அ ணகிரிநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஆசியுரையை நல்லை திருஞான சம்பந்த ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும் வாழ்த்துரையை மக்கள் வங்கியின் இளைப்பாறிய பிராந்திய முகாமையாளர் சி.பத்மநாதனும் தொடக்கவுரையை அடியார்க்கு அமுதூட்டும் அண்ணலார் கு.சிவபாலனும் நிகழ்த்தினர். கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் 'நெஞ்சக் கனகல்' என்ற பொருளில் சிறப்புரையாற்றினார். தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. குகத்திரு சு.மோகனதாஸ் சுவாமிகள் நிறைவுரையாற்றினார். (63,48)

# யாழ்ப்பாணத்தாரின் கறள் பிடிச்ச கதைகள்...




உலகத்திலேயே யாழ்ப்பாணத்தார் ஒரு விசித்திரமான ஆட்கள்தான். எதையெல்லாம் எப்பிடி எடுப்பினம் எண்டு சொல்லேலாது.

எந்தநேரத்தில் எப்பிடி இருப்பினம் எண்டு தெரியாது. அப்படி –

ஒரு நூதனமான பேர்வழியள்.

பழைய வீடுகளை இடிச்சுப் புதுப் பாஷனில் காசைச் செலவழிச்சுக் கட்டுகினம்.

வேலியை வெட்டி எறிஞ்சுபோட்டு மதிலை எழுப்புகினம்.

வேலியில்லையெண்டால் ஆட்டுக்குக் குழையில்லை. ஆட்டுக்குக் குழையில்லையெண்டால் வீட்டில் ஆடில்லை. ஆடில்லையெண்டால் ஆட்டு வளர்ப்பில்லை. ஆட்டு வளர்ப்பில்லையெண்டால் யாழ்ப்பாணத்து வாழ்க்கையிலையும் யாழ்ப்பாணப் பண்பாட்டிலையும் நிச்சயமாக ஒறுவாய்தான் விழும்.

அப்படி ஒறுவாய் விழுந்தாலும் பறவாயில்லை. நாங்கள் மதிலைத்தான் கட்டுவம். வேலியை வெட்டுவம் என்று ஒரு கூட்டம் எழும்பி நிற்குது.

என்ன செய்யிறது, கையில காசு கனத்தால் இந்தமாதிரித்தான் சிந்தனை ஓடும்.

கலியாணப் பந்தல்களின்ர காலம் போய், திருமண மண்டபங்களின் காலம் வந்திருக்கு.

பந்தல்காலத்தில் லாண்ட்மாஸ்ரர்காரனுக்கு உழைப்பிருந்தது. பந்தல் காரனுக்குத் தொழிலிருந்தது. பந்தலைப் போடுகின்றனுக்கு வேலையிருந்தது. இப்பிடி ஊரில பல பேர் ஒரு கல்யாணத்தால் வாழ்ந்தினம், பிழைச்சினம்.

இப்ப?

திருமண மண்டபங்களால் பெரும் முதலாளிமார்தான் கொடிகட்டிப் பறக்கினம். கோடிக்கு மேல கோடி சேருது. பணத்துக்கு மேல பணம் புரளுது.

ஒரு கலியாணத்தைச் செய்யிறதுக்கே மண்டபக் காசு ஒரு பிள்ளை சீதனத்துக்குச் சமம். என்ன செய்யிறது? காலம் அப்பிடி மாறி எங்களின்ர காலில் சுருக்குக் கயிற்றைப் போட்டிருக்கு.

பொங்கல், திருவிழா, கலியாணம், பிறந்தநாள் எண்டால் பத்தாயிரம் பதினையாயிரம் முப்பதினாயிரம் நாற்பதினாயிரம் எண்ட றேஞ்சில உடுப்பெடுக்கிறார்கள்.

கன பேர் இப்ப தங்கட வீடுகளில சமைக்கிறதில்லை. இதுக்குப் பஞ்சிக்குணம் ஒரு காரணமெண்டால், பாஷன் இன்னொரு காரணம்.

சமைக்கிற நேரத்தில தொடர் நாடகம் பாக்கலாம் எண்டு ஒரு கணக்கு.

மற்றது, ரெஸ்ரோரண்ட்டில சாப்பிட்டால்தான் வாய்க்கு ருசி எண்ட நினைப்பு.

சில இடங்களில, வீடுகளுக்கே சாப்பாட்டைக் கொண்டு வந்து கொடுக்கிற அளவுக்கு வளர்ந்திருக்கு ரெஸ்ரோரண்ட் கலாசாரம்.

இது மட்டுமா? பெடியள் எண்டால் 'பியர்' அடிக்கத் தான் வேணும் எண்ட மாதிரி ஒரு எண்ணம் இளைய தலைமுறையிட்ட வளர்ந்திருக்கு.

'பியர்' அடிக்கத் தெரியாதவனெல்லாம் இளந்தாரியா என்று கேட்கிறார்கள்.

நாகரீகம் மாறினால் நாமும் மாறத்தான் வேணும்.

உலகம் உருண்டால் நாங்களும் உருளத்தான் வேணும்.

எல்லாத்தையும் விடக் கையில காசு தாராளமாகப் புழங்கினால் நெஞ்சில ஆசை தானா முளைக்கும். ஆசைக்குக் கரையுமில்லை, அணையுமில்லை.

எண்டபடியால் என்னவெல்லாம் மனசில தோன்றுதோ அதையெல்லாம் செய்யவேணும் போலிருக்கு.

அப்பிடித்தான் இப்ப யாழ்ப்பாணமும், யாழ்ப்பாணத்தின்ர போக்குமிருக்கு.

முந்தினமாதிரி இப்ப தோட்டத்தில நிக்கிற ஆட்கள் குறைவு. எல்லாம் ரோட்டில திரியினம். வீட்டுக்கு நாலு மோட்டச் சைக்கிள் நிற்குது.

கடலில இறங்கிறதுக்குக் கனபேருக்குப் பஞ்சி. அதால ரின் மீனில கறி வைக்கிறம். ரின் மீனிலதான் குழம்பும் கொதிக்குது.

கடலால் சூழப்பட்ட யாழ்ப்பாணக் குடாநாடு மீன் விலையால் தவிக்குது.

இப்பிடி ஆயிரம் கறள் பிடிச்ச கதைகள் இருக்கு. இதையெல்லாம் வைச்சுக் கொண்டுதான் எங்கள் தங்கம் சிவசிவாவும், யாழ்ப்பாண மாகாண சபையும் யாழ்ப்பாணத்துச் சமூகச் சிற்பிகளும் இருக்கினம். இதெல்லாத்துக்கும் தோதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் இருக்கு.

கோவிந்தா?

இல்லத்தில் இணக்கமுடன் வாழ்ந்தால், அது தாய்நாட்டில் சட்டத்தை மதிக்கத் தூண்டும். - சீனப் பழமொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவில்!

இன்று தந்தையர் தினம். ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்தில் வரும் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமை தந்தையருக்கான தினமாக உலகமெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது.

"மரியாதை செலுத்த விரும்பும் போது பெற்றோர் இறந்துவிட்டனர்" என்று ஜப்பானியக் கவிதைவரி ஒன்று உண்டு. நம்மில் பலருக்கு பெற்றவர்களின் எண்ணங்களையும் கண்டிப்புகளையும் சரியான அர்த்தத்தில் விளங்கிக்கொள்ள ஒரு பக்குவ காலம் தேவைப்படுகிறது.

குறைந்தபட்சம் நமக்கும் பிள்ளைகள் என்று வந்த காலத்தின் பிறகு, நமது பெற்றோர் பற்றிய கணிப்பும் நம்மிடம் கூடுதல் வெளிச்சம் பெறுகிறது.

ஃப்ரெய்ட் சொல்லியபடியே பெரும்பாலான தந்தை – மகன் உறவு நெருடல்களுடன் கூடியதுதான். பெண் பிள்ளைகளுக்கு தந்தையே அன்புநிறைந்த ஒரு ஆளுமையாக, மாற்றுப்பால் உலகின் மாதிரியுருவாகத் தோற்றம் பெறுவதும் காணக்கிடைக்கிற ஒன்றுதான்.

தந்தையோடு எல்லாமும் போய்விட்டதாக வருத்தப்படும் பாரி மகளிரின் நெஞ்சைக் கனக்க வைக்கும் சோகத்தை இலக்கியமாய் அறிகிறோம்.

பொறுப்புகளைப் புறக்கணித்து வாழ்கிற தந்தை, தாயைச் சமஉரிமைகளோடு மதிக்காத தந்தை பிள்ளைகளால் மதிக்கப்பட முடியாதவனாகிறான்.

தந்தைக்குப் பிறகு குடும்பத்தின் தலைமைப் பொறுப்புக்குக் காத்திருக்கும் பிள்ளையின் அந்தரங்க உணர்விலும் தந்தைக்கெதிரான எண்ணங்கள் உருவாகிவிடுவதை உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

"தந்தையின் மரணத்தை விரும்பாதவர் யார்?" என்ற கேள்வியை கரமசோவ் சகோதரர்கள் நாவலில் டொஸ்ரோயெவ்ஸ்கி எழுப்புகிறார்.

எல்லாமிருந்தாலும், தன்னுடைய இடத்தில் பிள்ளையையும், தன்னை அப்பாவாகவும் வைத்துப் பார்க்கிற அந்தக் காலம் வருகையில், எந்தப் பிள்ளைக்கும் அப்பா பற்றிய புரிதல் நிகழ்கிற கணமாகி விடுகிறது. கவிஞர் ஒருவர் எழுதுகிறார்:

"அப்பாவை வெறுத்து வந்திருக்கிறேன் நான். குடும்பத்தைக் கவனியாமல் இருந்தவர் என்று வசைகள் சொல்லியிருக்கிறேன். சண்டை போட்டு வீட்டை விட்டு ஓடிப் போயிருக்கிறேன். ஆனால் யோசிக்கும் வேளையில்... எல்லாவிதத்திலும் அப்பாவைப் போலத்தான் நானும் இருக்கிறேன். விவரம் தெரிந்த பிறகு என் பிள்ளைகளும் என்னை வெறுக்கலாம். நிச்சயம் என்னால் தாங்கிக்கொள்ள முடியாது அப்போது" என்று தன் பதற்றத்தைப் பதிவு செய்கிறார்.

இந்த பதற்றத்தையும் சோகத்தையும் சிறுவயதிலேயே உணரக் கிடைக்கிறது பாரதிக்கு. "தந்தை போயினன், பாழ்மிடி சூழ்ந்தது, தரணி மீதினில் அஞ்சலென்பாரிலர்" என்று தன் சுயசரிதையில் சிந்தை நோகிறான் அவன்.

பிள்ளைகள் எவ்விதமாய் உணர்ந்தாலும் தந்தையர் எப்போதும் பிள்ளைகளை வெறுக்க முடியாதவர்களாகவேதான் இருப்பர். சோகங்களில் எல்லாம் தலையாயது புத்திர சோகம்தான் என்றறிகிறோம். அது பிள்ளைகளின் மீது பிரவகிக்கும் கட்டுக் கடங்காத பேரன்பினால் நேர்வது.

"பேரன்பு கொண்டோரில் யாரிங்கே பிழைத்து நின்றார்" என்று அறிய நேரும் சோகம் எல்லாவற்றிலும் கொடியதுதான்.

தந்தையரின் அன்பையும் அக்கறைகளையும் உணர்ந்து கொள்ள பிள்ளைகள் சிலருக்கு குறிப்பிட்டளவு காலமெடுக்கலாம். அந்தப் புரிதல் நேரும் காலத்தை விரைவுபடுத்தவும், தந்தையரைப் போற்றுவது நம்மை நாமே போற்றுவதும், நம்முடைய வாழ்வின் விழுமியங்களைச் சரிசெய்து கொள்வதுமே என்பதை உணர்த்தவும் இத்தகைய தினங்கள் உதவும்.

அன்பைப் பகிரும் மற்றுமொரு விசேட வாய்ப்பாகக் கருதி – தந்தையர் தின வாழ்த்துக்கள்! - ஆசிரியர்

# அதிகாரம் பகிரப்பட்டால் இனப்பிரச்சினைக்கு தீர்வு சாத்தியம்

## நீதி அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

அதிகாரப் பகிர்வின் ஊடாகவே இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வைக் காணலாம். பல்வேறு விதமான தீர்வுத் திட்டங்கள் அவ்வப்போது முன்வைக்கப்பட்டு வருகின்றபோதிலும், உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு வெளிநாடுகளினால் தீர்வுகளைக் காண முடியாது என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இலங்கைக்கான கொரிய குடியரசுத் தூதுவர் வொன் சாம் சாங்க், அமைச்சர் ஹக்கீமை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனைக் கூறினார்.

இந்தச் சந்திப்பின்போது, தென்கொரியத் தூதுவருடன் தென்கொரியத் தூதரகத்தின் கவுன்சிலர் செல்வி ஜி இயுன் ப்யோ, நீதியமைச்சின் செயலாளர் திருமதி கமலினி டி சில்வா, அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ரஹ்மத் மன்சூர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அமைச்சர் ஹக்கீம் மேலும் குறிப்பிடுகையில், பெரும்பான்மையானோரின் முடிவுகளை ஏற்றுக்கொள்ளக் கூடிய பிரித்தானியாவின் வெஸ்டமின்ஸ்டர் மாதிரியிலான நாடாளுமன்ற முறைமையே இலங்கையில் நடைமுறையில் இருந்து வருகிறது.

இங்கு இலங்கையில் உரிய காலத்தில் தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன. பல கட்சி ஜனநாயகம் நிலவி வரும் இந்நாட்டில் ஒவ்வொரு கட்சியும் தத்தமது அபிப்பிராயங்களையும், நிலைப்பாட்டையும் முன்வைப்பதற்கு முழுமையான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கூட்டரசாங்கத்தில் பல கட்சிகள் அங்கத்துவம் வகிக்கின்றன. முன்னர் காலனித்துவ நாடுகளாக இருந்து பின்னர் சுதந்திரமடைந்த போதிலும் அவ்வாறான பல நாடுகளில் சாதிப்பிரச்சினை காணப்படவே செய்கின்றது.

இலங்கையில் இனப்பிரச்சினையை பொறுத்த வரை தமது அரசியல் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக வன்முறையின் பால் நாட்டம் செலுத்திய அமைப்புகள் இருந்தன.

இனப்பிரச்சினையானது நாட்டுக்குள் இனங்களுக்கிடையில் துருவப்படுத்தலை அதிகரிக்கச் செய்துள்ளது. உங்களது நாடான கொரியாவில் யுத்தம் நாட்டை இருவேறாக பிரித்துவிட்டது. இலங்கையில் சில பொது அரசியல் ரீதியான தகராறுகள் தோன்றிய போதிலும் கூட, ஒரு போதும் இந்த நாடு இராணுவ ஆட்சியின் கீழ் இருக்கவில்லை.

ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட நாடாகவே இந்நாடு தொடர்ந்தும் இருந்து வருகிறது. ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் சரியான அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்படுவதன் ஊடாகவே இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வைக் காணலாம். என்றும் அவர் தெரிவித்தார்.

## பொது பலசேனா மீது சட்ட நடவடிக்கை ஏன் இல்லை? சட்டத்தரணிகள் சங்கம் கேள்வி

பொதுபலசேனா அமைப்பினர் தொடர்பில் சட்டத்துறையினர் பொறுப்பற்ற நிலையில் இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பொதுபல சேனா அமைப்பினால் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பில், சட்டத்துறையினர் உரிய முறையில் செயற்படாமை குறித்து நீதிபதிகளின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸார் சட்டத்தை உரிய முறையில் பயன்படுத்தவில்லை என குறித்த சங்கத்தின் செயலாளர் அஜித் பத்திரண கூறினார்.

பொதுபல சேனா சில சந்தர்ப்பங்களில் பிற மதங்களை அவமதிக்கும் செயலில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நடமாடும் ஆயுர்வேத மருத்துவசேவை

(யாழ்ப்பாணம்)

மாகாண சுதேச மருந்துத் திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட நடமாடும் மருத்துவப் பிரிவினால் புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் நடமாடும் ஆயுர்வேத மருத்துவ சேவை கடந்த செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் ஆரம்பிக்கப்பட்டது.

வாரத்தில் இரு நாட்களில் இச்சேவை இடம்பெற்று வருகின்றது.

பிரதி செவ்வாய்க்கிழமை, சனிக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை இந்த நடமாடும் சேவை இடம்பெற்று வருகின்றது. புதுக்குடியிருப்பு பிரதேச மக்கள் இதன் மூலம் பயன் பெறலாம் என வடமாகாண சுதேச மருததுவத்திணைக்கள மாகாண ஆணையாளர் டாக்டர் திருமதி சி.துரைரட்ணம் அறிவித்துள்ளார்.

## டெங்கு தாக்கம் நாடு முழுவதும் அதிகரிப்பு

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 13,740 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த மாதத்தில் மாத்திரம் 956 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் தொற்று நோய் ஒழிப்பு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அவர்களில் 464 பேர் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர்.

இதேவேளை, வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் அதிகமான ஐயாயிரத்து 244 பேர் கொழும்பு மாவட்டத்தில் டெங்கு நோயால் பாதிக்கபட்டுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் இரண்டாயிரத்து 103 பேரும் களுத்துறையில் 934 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

## தெற்கில் வலுக்கிறது முறுகல்; பொலிஸார் மீது குவியும் கண்டனம்

(கொழும்பு)

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள கொழும்பின் புறநகர்ப் பகுதியான அளுத்கமையில பொலிஸார் வித்தியாசமான சட்டத்தை அமுல் படுத்துவதாக பொதுபலசேனா குற்றம் சுமத்தியுள்ளது.

தானசாலையில் வைத்து பௌத்த பிக்கு ஒருவர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அளுத்கமையில் உள்ள பொலிஸ் அதிகாரிகளில் பலர் பள்ளிவாசல்களின் பக்கமே செயற்படுகின்றனர்.

எனவே தாக்குதலுக்கு உள்ளான பௌத்த பிக்குவை அமைதியாக இருக்குமாறு அவர்கள் கேட்டுக்கொண்டதாக பொதுபலசேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை பொதுபல சேனாவினர் தம்மை தாக்கும் வரை அங்கு சில முஸ்லிம்கள் காத்திருந்ததாக தேரர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம் பாரிய நாடகம் ஒன்றை அரங்கேற்றுவதற்கு முஸ்லிம்கள் தயாராக இருந்ததாகவும் தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில் பள்ளிவாசல்களுக்கு ஆதரவாக செயற்படும் பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஞானசார தேரர் எச்சரிக்கை விடுத்தார்.

இதற்கிடையில் பௌத்த பிக்கு ஒருவரின் மீது தாக்குதல் நடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள முஸ்லிம் இளைஞர் தாம் பிக்குவை தாக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

எனினும் கடுமையான வார்த்தை பிரயோகங்களை தாம் பிக்குவிடம் வெளியிட்டதாக அவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

இதனையடுத்தே பௌத்த பிக்கு பொய்யான முறைப்பாட்டை பொலிஸில் மேற்கொண்டுள்ளதாக குறித்த இளைஞர் தெரிவித்துள்ளார்.

# மாகாண சபையை முடக்குவது அரசியல் தீர்வைத் தவிர்க்கவே



தேர்தல் பிரசாரத்தின்போது ஏகப்பட்ட வாக்குறுதிகளை அளித்து மக்களின் வாக்குகளைப் பெற்றார்கள். இவர்கள் ஏதோ பெரிதாகச் செய்யப் போகின்றார்கள் என்ற எதிர்பார்ப்புடன் மக்களும் வாக்குகளை அளித்துப் பெரிய வெற்றியை ஈட்டிக் கொடுத்தார்கள். மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் ஒன்றைக்கூட நிறைவேற்றுவதற்கு இன்று வரை முயற்சிக்கவில்லை. புலம்பெயர் அமைப்புகளின் விருப்பத்துக்கு அமையக்கூட்டமைப்புத் தலைமை அரசியல் தீர்வைத் தவிர்த்து வருகின்றது. அதற்காகத் தான் மாகாண சபையையும் செயற்படாமல் வைத்திருக்கின்றார்கள் போலும். மாகாண சபையைச் செயற்படுத்தினால் அரசியல் தீர்வுக்கு அடித்தளம் போடுவதாகப் புலம் பெயர் அமைப்புகள் கருதலாம் என்ற அச்சமா?

மாகாண சபை செயற்படுவதற்கு ஆளுநரும் பிரதம செயலாளரும் தடையாக இருக்கின்றார்கள் என்று எழுந்தமானத்துக்குக் குற்றஞ்சாட்டுவதில் அர்த்தமில்லை. குற்றச் சாட்டுக்களை ஆதாரபூர்வமாக முன்வைக்க வேண்டும் என்பது உச்ச நீதிமன்ற நீதியரசராக இருந்தவருக்குத் தெரியாது போய்விட்டதா?

சங்கர சிவன்

இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தைத் தயாரிப்பதற்குக் கூட்டமைப்பு தமிழ் மக்களிட மிருந்து ஆலோசனைகளைக் கோரியிருக்கின்றது. முஸ்லிம் களுடன் இணைந்து செயற்படு வதற்கான பேச்சுவார்த்தைகளைக் கூட்டமைப்புத் தலைவர்கள் மேற்கொள்கின்றார்கள். இனப் பிரச்சினையின் தீர்வில் முஸ்லிம் களுக்கு அக்கறை இல்லை என்று முடிவு செய்துவிட்டார்களா?

ஆலோசனைகளுக்கான கூட்டமைப்பின் அழைப்பு இவர்கள் எப்படி மக்களை ஏமாற்றுகின்றார்கள் என்பதையும் உட்கட்சி முரண்பாட்டையும் வெளிப்படுத்துகின்றது. மக்களிட மிருந்து ஆலோசனைகளைப் பெற்று இனிமேல்தான் தீர்வுத் திட்டமொன்றைத் தயாரிக்கப் போகின்றார்கள். அரசாங்கத்திடம் ஏற்கனவே தீர்வுத் திட்டத்தைக் கையளித்திருப்பதாக இதுவரை கூறிவந்ததன் மூலம் தமிழ் மக்களை ஏமாற்றியிருக்கின்றார்கள்.

இரண்டு சந்தர்ப்பங்களில் சம்பந்தன் இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிக் கருத்துத் தெரிவித்திருக்கின்றார். ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து சமூகங்களும் ஏற்றுக்கொள்ளும் அதிகாரப் பகிர்வுக் கட்டமைப்பின் ஊடாக அரசியல் தீர்வைக் காண்பதே கூட்டமைப்பின் நிலைப் பாடு என்று கடந்த மே மாதத் தில் கூறினார். புலம்பெயர் அமைப்புகள் மீதான தடையை அரசாங்கம் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தபோதே இக்கருத்தை வெளியிட்டார். பெப்ரவரி மாதத் தில் சென்னை அடையாறில் உள்ள இந்திய - தெற்காசிய ஆய்வு மையத்தில் சிறப்புச் சொற் பொழிவு ஆற்றியபோது, இந்தியா வின் மாநிலங்களுக்கு என்ன அதிகாரங்கள் வழங்கப்பட்டுள் ளனவோ அத்தகைய அதிகாரங் களைத் தான் இலங்கையில் நாங்களும் எதிர்பார்க்கின்றோம் என்று சொன்னார்.

சம்பந்தனின் இக்கருத்துகளுக்குக் கூட்டமைப்புக்குள் உடன்பாடு இருக்கவில்லை. தனிநாட்டுக் கனவில் மிதக்கும் புலம்பெயர் அமைப்புகளின் விருப்பத்துக் கமைய அரசியல் தீர்வைத் தவிர்த்து வருகின்ற கூட்டமைப்புக் குள்ளிருந்து அரசியல் தீர்வுக்குச் சாதகமான குரல் ஒலிப்பது முரண்பாட்டை வளர்க்காமல் வேறென்ன செய்யும்? சம்பந் தனின் கருத்து தொடர்பாகக் கூட்டமைப்புக்குள் அதிருப்தி வெளிப்பட்டதாலேயே மக்களிட மிருந்து ஆலோசனை கோரும் முடிவு மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் இரண்டு வழிகளில் கூட்டமைப்பு அரசியல் தீர்வை தவிர்க்கலாம். தீர்வுத் திட்டத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கின்றோம் என்று அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் வரை கூறுவது ஒரு வழி. அரசியல் தீர்வுக்கு எதிராகக் கூடுதலான ஆலோசனைகள் வருவதற்கான ஏற்பாட்டைச் செய்வது மற்றைய வழி.

கூட்டமைப்பு என்னதான் தந்திரங்களைப் பின்பற்றினாலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வாகவே அமைய முடியும் என்பது தான் யதார்த்தம். இத் தீர்வை அடைவதற்கு இரண்டு முன்தேவைகள் இருக்கின்றன. ஒன்று கட்டங் கட்டமாகவே அரசியல் தீர்வை அடைய முடியு மென்பதால் அந்த நகர்வுக்குத் தேவையான கட்டமைப்பு. பதின் மூன்றாவது திருத்தம் அரசியல மைப்பில் ஓர் அங்கமாக இருப்பதால் மாகாண சபையிலிருந்து அந்த நகர்வை ஆரம்பிப்பது தான் நடைமுறைச் சாத்தியமானது.

இரண்டாவது சர்வசன வாக்கெடுப்பில் சிங்கள மக்களின் ஆதரவு. மாகாண சபையிலிருந்து அரசியல் தீர்வை நோக்கிய நகர்வு கட்டங் கட்டமாக இடம்பெறும் போது அரசியலமைப்புத் திருத்தம் அவசியமாகும். சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெற்ற பின்னரே அரசியலமைப்புத் திருத்தம் நடைமுறைக்கு வர முடியும். சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெறுவதற்குக் ச னிசமான சிங்கள மக்களின் ஆதரவு அத்தியாவசியமானது. அதாவது முழுமையான அரசியல் தீர்வை அடைவதற்குச் சிங்கள மக்களின் ஆதரவும் முக்கியமானது. எனவே, அரசியல் தீர்வை அடைவதற்கு இவ்விரு முன் தேவைகளையும் உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடு தவிர்க்க முடியாததாகின்றது. இது பற்றிய எந்த முயற்சியிலும் கூட்டமைப்பு ஈடுபடாமலிருப்பது அரசியல் தீர்வில் அவர்களுக்கு அக்கறை இல்லை என்பதையே வெளிப்படுத்துகின்றது.

வடமாகாண சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் கூட்டமைப்பு அதை முறைப்படியாகச் செயற்படுத்துவதற்கு எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. ஏற்றுக்கொள்ள முடியாத நொண்டிக் காரணங்களைக் கூறி மாகாண சபையை முடக்குகின்றது. மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்தின்போது ஏகப்பட்ட வாக்குறுதிகளை அளித்து மக்களின் வாக்குகளைப் பெற்றார்கள். இவர்கள் ஏதோ பெரிதாகச் செய்யப் போகின்றார்கள் என்ற எதிர்பார்ப்புடன் மக்களும் வாக்குகளை அளித்துப் பெரிய வெற்றியை ஈட்டிக் கொடுத்தார் கள். மக்களுக்கு அளித்த வாக்குறுதி களில் ஒன்றைக்கூட நிறைவேற்றுவதற்கு இன்று வரை முயற்சிக்கவில்லை. புலம்பெயர் அமைப்புகளின் விருப்பத் துக்கு அமையக் கூட்டமைப்புத் தலைமை அரசியல் தீர்வைத் தவிர்த்து வருகின்றது. அதற்காகத் தான் மாகாண சபையையும் செயற்படாமல் வைத்திருக்கின் றார்கள் போலும். மாகாண சபையைச் செயற்படுத்தினால் அரசியல் தீர்வுக்கு அடித்தளம் போடுவதாகப் புலம் பெயர் அமைப்புகள் கருதலாம் என்ற அச்சமா?

மாகாண சபைத் தேர்தலின் போது மக்களுக்கு ஏராளம் வாக்குறுதிகளை அள்ளிக் கொட்டியவர் சி.வி. விக்னேஸ் வரன். உச்ச நீதிமன்ற நீதிய ரசராக இருந்தவர் என்பதால் இவரின் வாக்குறுதிகளை மக்கள் முழுக்க முழுக்க நம்பினார்கள். முதலமைச்சராகப் பதவியேற்றதும் நொண்டிக் காரணங்களைக் கூறி மாகாண சபையை முடக்கி வைத்திருப்ப வரும் இவர்தான்.

மாகாண சபையைச் செயற்படுத்தாமலிருப்பதற்கு முதலமைச்சர் அவ்வப்போது கூறும் காரணங்களுள் இரண்டு காரணங்கள் பிரதானமானவை. அரசாங்கம் தேவையான அதிகாரங்களைத் தரவில்லை என்பது ஒரு காரணம். மாகாண சபையைச் செயற்படுத்துவதற்கு ஆளுநரும் பிரதம செயலாளரும் தடையாக இருக்கின்றார்கள் என்பது மற்றைய காரணம்.

பதின்மூன்றாவது திருத்தத்தில் மாகாண சபைக்கு முப்பத்தேழு விடயங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த முப்பத்தேழு விடயங்களையும் மாகாண சபைக்கு விடாமல் அரசாங்கம் முடக்கி வைத் திருக்கின்றது என்று முதலமைச்சர் கூறுகின்றாரா? பதின்மூன்றாவது திருத் தத்தில் சொல்லப்பட்டவற்றுள் காணி அதிகாரமும் பொலிஸ் அதிகாரமும் தான் இதுவரை எந்தவொரு மாகாண சபைக்கும் வழங்கப்படவில்லை. இவ்விரு விடயங்களையும் தவிர மற்றைய விடயங்கள் தொடர்பாக மாகாண சபை நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும். நிதி வசதி இல்லை என்றும் கூற முடியாது. மற்றைய மாகாண சபைகளிலும் பார்க்க மிகக் கூடுதலான நிதியை அரசாங்கம் வடமாகாண சபைக்கு ஒதுக்கியிருக்கின்றது. மாகாண சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பாக மக்களுக்கு நன்மை தரக்கூடிய எத்தனையோ நடவடிக்கைகளை எடுக்க முடியும். ஆனால், முதலமைச்சர் எதுவும் செய்யாமல் விதண்டாவாதம் பேசு கின்றார். தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்கும் அலுவலகத்துக்கும் பெருந்தொகை வாடகைப் பணம் செலுத்துவதற்கும் சொந்தத் தேவை களுக்காக யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையே விமானப் பயணம் மேற்கொள்வதற்கும் ஜனாதி- பதியிடம் அனுமதி பெறுவதில் காட்டிய அக்கறையை மாகாண சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட ஓரிரு விடயங்களிலாவது நடவடிக்கை எடுப்பதற்குக் காட்டலாமே.

மாகாண சபை செயற்படுவதற்கு ஆளுநரும் பிரதம செயலாளரும் தடையாக இருக்கின்றார்கள் என்று எழுந்தமானத்துக்குக் குற்றஞ்சாட்டுவதில் அர்த்தமில்லை. குற்றச் சாட்டுக்களை ஆதாரபூர்வமாக முன்வைக்க வேண்டும் என்பது உச்ச நீதிமன்ற நீதியரசராக இருந்தவருக்குத் தெரியாது போய் விட்டதா? மாகாண சபையின் அதி காரத்துக்கு உட்பட்ட எந்த விடயத்தில் மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய என்ன நடவடிக்கை எடுக்கும்போது ஆளுநரும் பிரதம செயலாளரும் தடையாகச் செயற்பட்டார்கள் என்று குறிப்பாகக் கூறவேண்டும். முதலமைச்சர் அப்படிக் கூறுவதில்லை. புதருக்குக் கல் எறிவது போல எழுந்தமானத்துக்குச் சொல்வதில் உண்மை இருப்பதாகக் கருத முடியாது.

இனப்பிரச்சினையின் தீர்வுக்கு வெளியாரின் தலையீடு கூடாது என்றும் கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்றும் பெரிதாகப் பேசிக்கொண்டு தேர்தல் களத்துக்கு வந்த விக்னேஸ்வரன் இப்போது கூட்டமைப்பின் நீரோட்டத்தோடு சேர்ந்து ஓடுகின்றார். அப்படி ஓடினால் தான் பதவியில் நீடிக்க முடியும் என்று கருதுகின்றார். அதனால் மாகாண சபையை முடக்குவதற்கான (தப்புக்) காரணங்களை மற்றவர்களிலும் பார்க்கத் தீவிரமாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்.

பெரும் பிரயத்தனப்பட்டு மாகாண சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றிய வர்கள் ஏன் அதைச் செயற்படுத்தாம லிருக்கின்றார்கள் என்ற கேள்வி சாதாரண தமிழ் மக்களிடம் எழுவதற்கு இடமுண்டு. இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு வருவதை எப்படியாவது தடுக்க வேண்டும் என்ற புலம் பெயர் அமைப்புகளின் விருப்பத்துக்கு அமை- வாகவே கூட்டமைப்பு செயற்படு கின்றது. வேறொரு கட்சி மாகாண சபையின் நிர்வாகத்தை ஏற்றால் அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம் எனக் கருதிய கூட்டமைப்பு அதைத் தடுப்பதற்காகவே மாகாண சபையைக் கைப்பற்றியது. அந்த நோக்கத்தை இப்போதே நிறைவேற்றுகின்றது.

# பொலிவியாவில் மகிந்தவுக்கு செங்கம்பள வரவேற்பு



ஜி - 77 நாடுகளின் 50 ஆவது அரச தலைவர்களது மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பொலிவியா சென்றடைந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு பொலிவியாவின் விரு விரு சர்வதேச விமான நிலையத்தில் பெரும் வரவேற்பளிக்கப்பட்டது.

பொலிவியா செனட் தலைவர் யூஜின் ரொஜாஸ் ஜனாதிபதியை வரவேற்றார். ஜனாதிபதிக்கு விமான நிலையத்தில் செங்கம்பள வரவேற்பும் இராணுவ அணிவகுப்பு மரியாதையும் வழங்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் ஒன்றிணைந்து ஜி-77 அரச தலைவர்களது மாநாட்டை பொலிவியாவில் நடத்துகின்றன. இன்றும் நாளையும் இடம்பெறவுள்ள இம் மாநாட்டில் இந்தியா, சீனா உள்ளிட்ட 133 நாடுகளின் அரச தலைவர்கள் பங்குகொள்கின்றனர்.

இம்மாநாட்டில் நாளை ஜனாதிபதி உரையாற்ற உள்ளதாக ஜனாதிபதியின் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும், ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கும் இந்த மாநாட்டில் வைத்து பொலிவியாவின் உயர் அரச விருது ஒன்று வழங்கப்படவுள்ளது.

'சமாதானத்துக்கும், ஜனநாயகத்துக்கும் வழங்கிய பங்களிப்புக்காக இந்த விருது வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# அரசின் மனப்பாங்கை மாற்ற ஐ.நா.வின் முயற்சி தொடர்கிறது



(ஜெனிவா)

யுத்தத்துக்குப் பிந்திய இலங்கையின் பொறுப்புடமைக் கொள்கையை மறுசீரமைத்து அரசின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஐ.நா.சபை தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது.

சர்வதேச சமூகத்துடன் இலங்கை அரசாங்கம் ஒத்துழைத்து செயற்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் கோரியுள்ளார்.

நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது, பான் கீ மூனின் உதவிப் பேச்சாளர் ்பர்ஹான் ஹக் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணைகளை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மறுத்து வருகிறது. இது தொடர்பில் செய்தியாளர் சந்திப்பின் போது வினவப்பட்டிருந்தது.

இதற்கு உதவிப் பேச்சாளர் உடனடியாக பதில் வழங்காத போதும், பின்னர் இந்தக் கேள்வியை எழுப்பி இருந்த இன்னர் சிட்டி பிரஸ் ஊடகத்துக்கு அதற்கான பதிலை அனுப்பி வைத்திருந்தார்.

இதில், இலங்கையின் மறுசீரமைப்பு மற்றும் பொறுப்புடமையை சீர்படுத்தும் நோக்கில், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் மேற்கொண்டு வரும் செயற்பாடுகளை 'பான் கீ மூன் வரவேற்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த யுத்தம் தொடர்பான இந்த செயற்பாடுகள் இலகுவானதல்ல. எனவே சர்வதேச சமூகத்துடன் இலங்கை அரசாங்கம் ஒத்துழைத்து செயறபட வேண்டும்.

இதற்காக இலங்கையில் மனித உரிமைகளை உள்ளடக்கியதாகவும், மதிப்பளிக்கக் கூடியதாகவுமான உள்நாட்டு செயற்பாடுகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என்று பான் கீ மூன் வலியுறுத்தி இருப்பதாக, அவரது உதவிப் பேச்சாளர் ்பர்ஹான ஹக் தெரிவித்துள்ளார்.

# புலிகள் விவகாரத்தில் நெதர்லாந்தின் பிடி இறுகுகிறது

(கொழும்பு)

நெதர்லாந்தில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் 5 பேருக்கு 16 வருட தண்டனை விதிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

நெதர்லாந்து ஹேக் நகரிலுள்ள உள்ளூர் நீதிமன்றம் ஒன்றில், குற்றம் சுமத்தப்பட்டுள்ள 5 விடுதலைப்புலி ஆதரவாளர்களுக்கும் 10 முதல் 16 வருடங்கள் வரையான சிறைத்தண்டனை விதிக்கப்படவேண்டும் என்று அரசதரப்பு சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்தனர்.

இவர்கள் 2003 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மேற்கொண்ட குற்றங்களுக்காகவே இந்தத் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கோரியுள்ளனர்.

குறித்த ஐந்து பேரும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக கூட்டங்களை நடத்தினர். தமிழீழத்துக்கு ஆதரவாக நாட்டுக்கு வெளியே பிரசாரங்களை மேற்கொண்டனர்.

போரின் காரணமாக உயிருக்கு பயந்து நெதர்லாந்தில் தஞ்சமடைந்துள்ள தமிழர்கள் மத்தியில் குறித்த ஐந்து பேரும் விடுதலைப் புலிகளுக்காக நிதி சேகரித்தனர் என்றும் சட்டத்தரணிகள் குற்றம் சுமத்தினர்.

குறித்த ஐந்து பேருக்கும் நெதர்லாந்து நீதிமன்றம் 2 முதல் 6 வருட சிறைத்தண்டனையை விதித்தபோதே அரசதரப்பில் இந்தக் காரணங்கள் கூறப்பட்டு தண்டனை அதிகரிப்பு கோரப்பட்டுள்ளது.

# அநாதரவான சிறுவர்கள் மீட்பு

பதுளை கந்தேகெதர சாரணியா தோட்டத்தில் வீடொன்றில் பாதுகாப்பற்ற முறையில் இருந்த ஐந்து சிறார்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளனர்.

இரண்டு சிறுவர்களும் மூன்று சிறுமிகளுமே இவ்வாறு நேறறுமுன்தினம் மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஏழு வயது , ஐந்து வயது, மூன்று வயது, இரண்டு வயது மற்றும் ஒன்றரை வயது சிறார்களே பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். பொலிஸாரால் மீட்கப்பட்ட சிறார்கள் பதுளை நீதிவான் நீதமன்றத்தில் ஆஜர்படுத்தியதை அடுத்து பதுளை சிறுவர் இல்லம் மற்றும் பண்டாரவளை சுஜாதா சிறுவர் இல்லம் ஆகியவற்றில் பொறுப்பளிக்கப் பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பதுளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சந்திரிக்காவுக்கு இப்போது கெட்ட காலம் நல்லகாலம் பிறந்தவுடன் அரசியலில் குதிப்பார்



சோதிடரீதியாகத் தமக்குக் காலம் கூடாது எனக் கருதி அதனைத் தவிர்ப்பதற்காகக் கடந்த இரண்டு மாதங்களாக வெளிநாடுகளில் தங்கியிருக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் 29 ஆம் திகதி நாடு திரும்புகிறார்.

அதற்குப் பின்னர் தமது அரசியல் வாழ்வு மிகப்பிரகாசமானதாகவும் வலுவானதாகவும் இருக்கும் என்ற சோதிடக் கணிப்பில் நம்பிக்கை கொண்டுள்ள அவர், நாடு திரும்பியதும் மீண்டும் தீவிர அரசியலில் குதிப்பார் என்று கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன. விரைவில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகப் போட்டியிடுவதில் அவர் ஆர்வம் கொண்டிருக்கிறார் என்றும் கூறப்படுகிறது.

# விசாரணைக்குழுவுக்கு மேலதிகமாக ஐ.நா.பகுப்பாய்வுக்குழு நியமனம்

இலங்கை தொடர்பான ஐ.நா. விசாரணைக்குழுவுக்கு மேலதிகமாக பகுப்பாய்வுக்குழு ஒன்றையும் அமைக்க ஐ.நா.சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதேவேளை, இலங்கையில் இடம்பெற்றது தொடர்பான குற்றச்சாட்டுகள் குறிதத விசாரணைகளை ஒருங்கிணைப்பதற்கான அதிகாரியாக, சன்ட்ரா பெய்டாஸ் நியமிக்கப்பட்டுள்ளதாக, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் பேச்சாளர் ருபேட் கொல்வில் உறுதிப்படுத்தியுள்ளார். அல்ஜசீரா தொலைக்காட்சிக்கு அளித்த செவ்வியில் அவர, இந்த விசா ரணைக் குழுவில், 12 பேர் இடம் பெறுவர் என்றும், அதில், இரணடு தடயவியல் நிபுணர்கள், சட்ட ஆலோசகர், பாலின நிபுணர், மற்றும் விசாரணையாளர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். விசாரணைக் குழுவுடன் இணைந்ததாக, நிபுணர்களைக் கொண்ட இரண்டாவது குழுவொன்றும் நிய மிக்கப்படவுள்ளதாகவும், விசாரணைகளை சுதந்திரமான முறையில அது பகுப்பாய்வு செய்யும் எனறும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்தக் குழுவின் உறுப்பினர்கள் இன்னமும் அதிகாரபூர்வமான நியமிக்கப்படவில்லை. என்றும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியக பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். அதேவேளை, அல்ஜசீராவிடம் பேசிய ஜெனிவாவுக்கான இலங்கை பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க, ஐ.நா. விசாரணையை இலங்கை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்று தெரிவித்துளளார். விசாரணைக் குழுவின் இணைப்பாளராக சன்ட்ரா பெய்டாஸ் நியமிக்கப் பட்டுள்ளது குறித்து கருத்து எதையும் தெரிவிக்கவும் அவர் மறுத்துவிட்டார.

# ஆசிரியர்களின் ஆளுமை விருத்தி யுனஸ்கோவுடன் ஒப்பந்தம்



தென்னாசிய ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியினை மேம்படுத்தல் தொடர்பான ஒப்பந்தத்தில் ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பு (யுனெஸ்கோ) வின் இயக்குநர் ஜெனரல் இரினா பொகோவா மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் அனுர திஸாநாயக்க ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

யுனெஸ்கோவினால் பிராந்திய ரீதியாக ஆசிரியர்களுக்கான ஆளுமை அபிவிருத்தித் திட்டத்தினை மேற்கொள்வது இதுவே முதல் தடவையாகும்.

இத்திட்டத்தின் மூலம் தெற்காசிய ஆசிரியர்கள் நன்மையடைவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்ஒப்பந்தம் அமைச்சர் ரி.பி.ஏக்கநாயக்க, கலை கலாசார அமைச்சர் கலாநிதி கருணாரத்ன ஹங்கவத்த, பிரான்ஸுக்கான இலங்கைத்தூதுவரும் யுனெஸ்கோவிற்கான நிரந்தரப் பிரதிநிதியும் ஆப்கானிஸ்தானுக்கான இலங்கைத்தூதுவருமாகிய கஸிம் பஸிலி, பா்கிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவர் ஹலிப் இக்பால், துருக் கிக்கான இலங்கைத் தூதுவர் ஹுசைன் அவ்னி பொறசலி, பங்களாதேஷின் துணை நிரந்தர பிரதிநிதி பஹானா அகமட் மற்றும் நேபாளத்தின் துணை நிரந்தரப் பிரதிநிதி ராம் பாபு டாகால், இந்திய தூதுவர் ருஜிர கம்போஜ் ஆகியோரினால் கையெழுத்திடப்பட்டது.

இலங்கையின் முதலாவது யுனெஸ்கோ பிரிவு II ஆசிரியர்களுக்கான தென்னாசிய மத்திய நிலைய மாநாடு கடந்த செவ்வாய் பாரிஸில் நடைபெறுகிறது

இலவசக்கல்வியிலும் உயர் கல்வி வளர்ச்சி வீதத்திலும் மற்றைய நாடுகளுடன் ஒப்பிடும் போது முன்னிலையில் உள்ள இலங்கை நாடு இவ்வேலைத் திட்டத்தின் மூலம் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளில் சர்வதேச ரீதியில் இன்னொரு மைல்கல்லினை அடையும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை.

இவ்வேலைத்திட்டமானது 2002 இல் இடம்பெற்ற யுனெஸ்கோவின் 36 ஆவது மாநாட்டின் போது ஆப்கானிஸ்தான், பூட்டான், அல்ஜீரியா, கம்பேடியா, எகிப்து, கென்யா, ஜப்பான், மலேசியா, மங்கோலியா, பொலி வியா, கியூபா, கொரியா, குவைத, ஈரான், ஈராக், லெபனான், ஆகிய பல நாடுகளின் ஆதரவுடன் எடுக்கப்பட்டது.

இறுதியாக 2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற நிர்வாகக் குழு கூட்டத்தொடரில் செயல் முறைக்கு கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# வேலணையில் புதிய சந்தைக்கட்டடம்

# அடிக்கல் நாட்டினார் உதயன் எம்.பி.



(வேலணை)

வேலணைப்பிரதேசத்தில் பிரதேச பொதுச்சந்தை மற்றும் உடற்பயிற்சி நிலையம் என்பனவற்றிக்கான அடிக்கல்லினை ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினரும் தீவக ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) அண்மையில் நாட்டிவைத்தார்.

மேற்படி பொதுச்சந்தையானது கிராம எழுச்சித்திட்டத்தின் கீழ் 14 மில்லியன் ரூபாய் செலவிலும் உடற்பயிற்சி நிலையமானது 11 மில்லியன் ரூபாய் செலவிலும் அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வேலணைப்பிரதேசசபைத் தவிசாளர் சிவராசாவின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட திட்டப் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொன்றக்ரஸ் ஜக்சில், பிரதேசெயலர் திருமதி சதீசன் மஞ்சுளாதேவி மற்றும் வேலணை உதவித்திட்டப் பணிப்பாளர், கிராம அலுவலகர்கள் பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருட்டு நகை கொள்வனவு வர்த்தகருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் உள்ள பிரபல நகைக்கடை உரிமையாளரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.பி.விமலசேன தெரிவித்தார்.

யாழ்.தலைமைப் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் வாராந்த பத்திரிகையாளர் சந்திப்பு இடம்பெற்று இதன் போது யாழ்.நகரப் பகுதியில் உள்ள பிரபல நகைக்கடை உரிமையாளர் கைது செய்யப் பட்டுள்ளரா என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினார்கள் அதற்குப்பதிலளிக்கையிலே இதனைத் தெரிவித்தார்.

யாழ்.அரியாலைப் பகுதியில் 72 வயது மதிக்கத்தக்க வயோதிப் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டிருந்தார். அதன் போது, பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர் யாழ்.கொட்டடி மற்றும் அரியாலை பகுதியைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

மேலும் வயோதிப மாதுவின் வீட்டில் திருடப்பட்ட இடத்தில் இருந்து நபர் ஒருவரின் கைவிரல் அடையாளம் பெறப்பட்ட பின்னர் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது மேற்படி 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருடப்பட்ட நகைகளை யாழ்.கஸ்தூரியார் வீதியில் உள்ள பிரபல நகைக்கடை உரிமையாளருக்கு 28 1/2 பவுண் நகைகளை விற்பனை செய்துள்ளனர்.

அதனடிப்படையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபரை நேற்று முன்தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியுலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். என அவர் மேலும் தெரிவித்தார். (25)

## முரசின் இன்றைய பலன்

(15.06.2014 ஞாயிற்றுக்கிழமை)



ஜய வருஷம் ஆனி மாதம் 01 ஆம் திகதி.

துதியை / திருதியை.

பூராட நட்சத்திரம் மு.ப. 11.02 வரை. பின் உத்தராடம்.

இராகு காலம 04.23 -05.53 வரை. சுபநேரம 08.53 -10.23வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பிரச்சினையை பூதாகரமாக்காது முளையிலே கிள்ளி எறிந்ததால் முரண்பாடு அற்றுப்போதல். வாகன யோகங்கிட்ட காப்புறுதி மூலம் கடன் பெறுதல். |
| ரிஷபம் | கணக்குப்பதிவு செய்ததில் ஒழுங்கீனத்தால வாழ்க்கை யாளருடன் முரண்பாடு ஏற்படல். நோயின உபாதையால் பணியைக்கைவிட்டு ஓய்வு பெறும் எண்ணம். |
| மிதுனம் | அசாதாரணவேகத்தினால் விபத்து ஏற்படும் கட்டம் மயிரிழையில் தப்புதல். மொழிப்பிரச்சினை தீர்ந்ததால் விரும்பியவரைச் சென்றடைய ஆயத்தமாதல். |
| கடகம் | அனுபவசாலிகளின் ஆலோசனைகளைக் கேட்டதால் காரியசித்தி ஏற்பட்டு நட்டம் விலகிவிடல். சுபகாரியச் செலவுக்காக ஆபரணத்தை அடகுவைத்து பணம்பெற ஆலோசித்தல். |
| சிம்மம் | வெளிக்கிட்ட பயணம் இயந்திரக்கோளாறு நிமிர்த்தம் தடைப்பட்டுவிடல். விண்ணப்பம் செய்திருந்த பதவி செல்வாக்கின்மையால் கிடைக்காத துயரினால் வாட்ட மடைதல். |
| கன்னி | ஏற்படுத்தப்பட்ட புதிய முயற்சியில் ஏற்பட்ட சிக்கல் மறைந்துவிடல். விவாகம்சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்ந்து இழுபடுவதை எண்ணி மனத்துயர் அடைதல். |
| துலாம் | காலாவதித்திகதியை உன்னிப்பாகக்கவனித்ததால் மோசடி ஏற்படாமை. அவசரத்தில் முன்பின் யோசிக்காது செயலில் இறங்கிய பின் ஆபத்தை உணர்ந்து பின்வாங்குதல். |
| விருச்சிகம் | செய்தொழிலில் சீரின்மையால் மனக்குழப்பங்கள் அடுத்தவர்களுடன் வீண்வாக்கு வாதங்களும் கருத்து மோதலும் ஏற்படாது பக்குவமாகப் செயறபடுங்கள். |
| தனுசு | மனக்குழப்பம் நீங்கியதால் தெளிவான முடிவினை மேற் கொண்டதால் காரியச்சித்தி ஏற்படல். தம்பதியர் மனம்விட்டுப் பேசி எடுக்கும் முடிவுகள் குடும்பத்தில் கவின்நிலையைத் தக்கவை க்கும். |
| மகரம் | நிர்வாக சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவதில் களேபரம ஏற்பட்டுப்பின் சுமூகநிலையை அடைதல். கௌரவப் பதவி கிட்டுவதற்கு பிரமுகரைச் சந்தித்ததால் எண்ணியது முடிதல். |
| கும்பம் | வெளியு,ர் பயணத்தை பெற்றோரின் நலனுக்காக கைவிட்டுவிடல். நோயினால் தேக நலம் பாதிக்கப் படாமல் தேகப்பியாசத்தில் ஈடுபடல். |
| மீனம் | பட்டியல் சம்பந்தமான பிரச்சினைபற்றி எதிர்பார்த்த நிலுவை உரிய நேரத் தில் வந்த படியினால் தொடர்ந்தும் வர்த்தக முயற்சியைத் தொடர விரும்புதல். |

# அந்தோனியார் ஆலய திருவிழா மானிப்பாயில்

மானிப்பாய் புனித அந்தோனியார் திருத்தல நவநாள் ஆராதனையின் திருச்சொரூப பவனியும், திருப்பலி ஒப்புக் கொடுத்தலும் இடம்பெறவுள்ளது.

கடந்தவாரம் கொடியேற்றத்துடன் ஆரம்பமான நவநாள் ஆராதனைகளின் இறுதிநிகழ்வான திருச்சொரூப பவனியும் திருப்பலி ஒப்புக் கொடுக்கும் நிகழ்வும் இன்று காலை இடம் பெறவுள்ளது.

ஆலய பங்குத்தந்தை தலைமையில் விசேட திருப்பலி பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டு தொடர்ந்து திருச்சொரூப பவனி ஆலயத்திற்கு அருகிலுள்ள வீதிகளினூடாக இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்ப்ட்டுள்ளது. (48)



# குருப்பெயர்ச்சி பலாபலன்கள்

(13.06.2014 முதல் 04.07.2015 வரை)

## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)

**குறிக்கோளுடன் உழைத்திடும் தனுசு ராசிக்காரர்களே!**

இதுவரை குரு பகவான் ராசிக்கு 7 ஆம் இடத்தில் இருந்து நன்மை பல வழங்கிக் கொண்டிருந்தார். இதனால் சமூகத்தில் செல்வாக்கு உயர்ந்திருக்கும். நினைத்ததை நிறைவேற்றி வந்திருப்பீர்கள். புதிய வீடு, மனை, வாகனம் வாங்கி இருப்பீர்கள். தற்போது குரு 8ஆம் இடமான கடகத்திற்கு அடியெடுத்து வைத்திருக்கிறார்.

இது சிறப்பான இடம் அல்ல. 8இல் குரு பொதுவாக மன வேதனையும், நிலையற்ற தன்மையைக் கொடுப்பார். பொருளாதார சரிவை ஏற்படுத்துவார். தேவையற்ற பகைமையை உருவாக்குவார் என்பது ஜோதிட வாக்கு. ஆனால் இதனைக் கண்டு யாரும் பயப்படத் தேவையில்லை. குரு சாதகமற்ற நிலையில் இருந்தாலும் அவரது 7ஆம் பார்வை சாதகமாக அமைந்துள்ளது. இடையூறு வாழ்வில் குறுக்கிட்டாலும் குருவின் சுபமான பார்வை பலத்தால் விரைவில் நீங்கிவிடும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது. சீரான வசதி வாய்ப்பு இருக்கும்.

2014 நவம்பர்,டிசம்பர் மாதத்தில் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். எடுத்த புதிய முயற்சி வெற்றி அடையும். பண வரவு அதிகமாகும். உறவினர் வருகையும், அதனால் நன்மையும் உண்டாகும். சமூகத்தில் மதிப்பு அதிகரிக்கும். பெண்களால் சுகம் கிடைக்கும். அவர்களால் பொன், பொருள் சேரும். விருந்து விழா என சென்று மகிழ்வீர்கள். உச்சத்தில் இருக்கும் குருவின் பார்வை 5,7,9 ஆகிய மூன்றும் முறையே 2,4,12 ஆகிய மூன்று இடங்களில் பதிகிறது. இதனால் பற்றாக்குறை நீங்கி பொருளாதார வளம் சேரும். குடும்பத்தில் அமைதி நிலைத்திருக்கும். வீடு, வாகன வகையில் நன்மை உண்டாகும்.

**பணியாளர்கள்:**

பணியில் சிறப்பான பலனை எதிர்பார்க்க முடியாது. சக ஊழியர்களால் வேலைப்பளு அதிகரிக்கும். சம்பள உயர்வுக்கு தடையேதும் இல்லை. எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்காமல் போகலாம். மேல் அதிகாரிகளிடம் அனுசரித்து போகவும். சலுகைப்பயன் பெற கடின முயற்சி எடுக்க வேண்டியதிருக்கும். எது எப்படியானாலும் குருவின் பார்வையால் தடைகளை முறியடிக்க வாய்ப்புண்டு.

**பெண்கள்:**

குடும்ப வாழ்வில் ஓரளவு மகிழ்ச்சி உண்டாகும். குடும்பச் செலவுக்குத் தேவையான பணம் சீராக கிடைக்கும். கணவரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். உறவினர் வகையில் கருத்துவேறுபாடு ஏற்பட்டாலும் பாதிப்பு ஏதுமிருக்காது. வேலைக்கு செல்லும் பெண்கள் பணிச்சுமையால் சிரமப்பட நேரிடும். சகபணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கலைஞர்கள்:**

விடாமுயற்சி எடுத்தால் தான் புதிய ஒப்பந்தம் பெற முடியும். எதிர்பார்த்த வருமானம், பாராட்டு போன்றவை கிடைக்காமல் போகலாம். தொழில் ரீதியாக அவ்வப்போது நீண்ட தூரப் பயணம் மேற்கொள்ளலாம்.

**மாணவர்கள்:**

மாணவர்கள் இந்த கல்வியாண்டில் அக்கறையுடன் படிப்பது அவசியம். குருவின் பார்வையால் நன்மை உண்டாகும். முயற்சிக்கு தகுந்த பலன் கிடைக்காமல் போகாது. போட்டிகளில் வெற்றிபெற அதிக முயற்சி தேவைப்படும். பெற்றோர் கருத்துக்கு மதிப்பளிப்பது நன்மை தரும்.

**குரு அதிசார பலன்!**

குருபகவான் டிசம்பர் 3ஆம் திகதி பெற்று சிம்ம ராசிக்கு மாறுகிறார். 22 ஆம் திகதி வரை அதில் இருப்பார். இந்த அதிசாரம் காலத்தில் மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிலும் உற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள். நினைத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிக்கலாம். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும்.தொழிலில் இருந்த பின்னடைவு மறையும்.

**பரிகாரம்!**

இராமர் சந்நிதியில் தீபமேற்றி வழிபடுங்கள். பத்திரகாளி அம்மனுக்கு எலுமிச்சை பழ விளக்கு ஏற்றுங்கள். வியாழக்கிழமை சிவன் கோவிலுக்குச் சென்று வாருங்கள். தட்சிணாமூர்த்திக்கு மஞ்சள் நிற மலர் மாலை அணிவித்து வழிபாடு நடத்துங்கள்.

ஞாயிற்றுக்கிழமை ராகு காலத்தில் கால வைரவருக்கு அர்ச்சனை செய்யுங்கள். டிசம்பர் 16 முதல் சனிபகவானுக்கு அர்ச்சனை செய்யுங்கள். வசதி படைத்தவர்கள் கருப்பு நிற பசுவை தானம் செய்யலாம். கார கார கார கார காவல் ஊழி காவலன்போர போர போர போர போரில் நின்ற புண்ணியன்மார மார மார மார மரங்கள் ஏழும் எய்த ஸ்ரீராம ராம ராம ராம ராம என்னும் நாமமே. என்று துதிசெய்யுங்கள்.

# உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் திருவிழா



## சிலிர்த்தது சிலி

(குவயாபா)

உலகக் கிண்ணக் கால்பந்துத் தொடரின் அவுஸ்ரேலிய அணிக்கெதிரான லீக் போட்டியில் சிலி அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

20ஆவது உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டி பிரேசில் நாட்டில் நடைபெற்று வருகின்றது. இப்போட்டித் தொடரின் நான்காவது போட்டி இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை நடைபெற்றது.

இதில் சிலி, அவுஸ்ரேலிய அணிகள் மோதின. இரு அணிகளும் ஆரம்பம் முதலே கோல் போடும் எண்ணத்தில் பந்தின் மீது ஆதிக்கம் செலுத்தி வந்தன. ஆட்டம் ஆரம்பமாகி 12ஆவது நிமிடத்தில் சிலி நாட்டின் அலெக்சிஸ் அற்புதமாக ஒரு கோல் அடித்தார். அடுத்த இரண்டு நிமிடங்கள் கழித்து மீண்டும் ஒரு கோலை அடித்து அசத்தினார் சிலி அணியின் அதிரடி ஆட்டக்காரரான வால்டிவியா. ஆட்டத்தின் 17ஆவது நிமிடத்தில் சிலி அணிக்கு பெனால்டி கார்னர் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் அதைப் பயன்படுத்தி கோல் அடிக்க அந்த அணி தவறியது.

ஆட்டத்தின் 36ஆவது நிமிடத்தில் அவுஸ்ரேலிய வீரர் கேஹி அருமையாக தலையால் முட்டி சிலியின் கோல் காப்பாளரை ஏமாற்றி கோல் அடித்தார். ஆட்டத்தின் 45ஆவது நிமிடத்தில் சிலி அணிக்கு ஒரு ப்ரீ கிக் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் ப்ரீ கிக்கை பயன்படுத்தி கோல் அடிக்க தவறினார் அந்த அணியின் அலெக்சிஸ். இந்த உதையுடன் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு தரப்பும் கோல் அடிப்பதில் முனைப்புக் காட்டின. ஆனால் கோல் கம்பத்திற்கு மேலே தான் பந்துகள் சென்றன. நாற்பத்தி ஐந்து நிமிடங்களில் இரு அணிகளும் ஒரு கோல் கூட போடாமல் கோட்டை விட்டன. பின்னர் நான்கு நிமிடம் அதிகப்படியான நேரம் ஒதுக்கப்பட்டது. அதில் சிலியின் பாசேஜோர் ஒரு கோல் அடித்து தங்கள் அணியின் கோல் கணக்கை மூன்றாக உயர்த்தினார். இறுதியில் சிலி அணி அவுஸ்ரேலிய அணியை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக சிலியின் அலெக்சிஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## நடப்புச் சம்பியன் ஸ்பெயின் படுதோல்வி

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் நடப்புச் சம்பியன் ஸ்பெயின், நெதர்லாந்து அணியிடம் வரலாறு காணாத தோல்வியைத் தழுவியது.

20ஆவது உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டி பிரேசில் நாட்டில் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டித் தொடரின் மூன்றாவது ஆட்டம் இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை நடைபெற்றது. நடப்புச் சம்பியன் ஸ்பெயின் அணியும் நெதர்லாந்து அணியும் மோதின. ஆட்டம் ஆரம்பமாகி பத்தாவது நிமிடத்தில் ஸ்பெயினின் இனியெஸ்டா அடித்த பந்து நெதர்லாந்தின் கோல் எல்லைக்கு மேலே சென்றது. ஆரம்பம் முதலே பந்து ஸ்பெயினின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. இருந்தபோதும் கோல் போடும் மூன்று வாய்ப்புகளை ஆட்டம் தொடங்கிய 23 நிமிடங்களில் ஸ்பெயின் கோட்டைவிட்டது. ஆட்டத்தின் 26ஆவது நிமிடத்தில் முதல் மஞ்சள் அட்டை நெதர்லாந்து அணியின் கஸ்மேனுக்கு வழங்கப்பட்டது.

ஆட்டத்தின் 28ஆவது நிமிடத்தில் பெனால்டி கிக் வாய்ப்பு மூலம் டீகோ கோஸ்டா அடித்த பந்தை அலோன்சோ லாவகமாக கோல் அடித்து ஸ்பெயின் அணியின் கோல் கணக்கை ஆரம்பித்தார். ஸ்பெயின் அணி கோல் போட்டதும் நெதர்லாந்து அணி சுதாகரித்து விறுவிறுப்பாக ஆட ஆரம்பித்தது. ஆட்டத்தின் 33ஆவது நிமிடத்தில் நெதர்லாந்தின் ரோபன் பாஸ் செய்த பந்தை வென் பெர்சி கோலாக மாற்ற தவறினார்.

ஆட்டத்தின் 44ஆவது நிமிடத்தில் ஸ்பெயினின் இனியெஸ்டா அடித்த பந்தை சில்வா கோலாக மாற்றாமல் தவறவிட்டார். அடுத்த நிமிடத்தில் நெதர லாந்தின் வென் பெர்சி தலையால் முட்டி அருமையான கோல் அடித்து கோல் கணக்கை 1-1 என சமன் செய்தார். முதல் பாதி ஆட்டம் முடிந்த போது இதே நிலை தான் நீடித்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பித்த போது நெதர்லாந்து அணி வீரர்கள் ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ஆட்டத்தின் 53ஆவது நிமிடத்தில் நெதர்லாந்தின் ரொபென் அருமையான கோலை அடித்தார். இதன் மூலம் அந்த அணி 2-1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. மீண்டும் 58ஆவது நிமிடத்தில் ரொபென் பாஸ் செய்த பந்தை பெர்சி கோலாக மாற்றத்தவறினார். இந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்பெயின் அணி டீகோ கோஸ்டாவிற்கு பதிலாக பெர்ணான்டோ டோரசை களமிறக்கியது. ஆனால் மீண்டும் 66ஆவது நிமிடத்தில் ஸ்னீஜ்டர் ப்ரீ கிக் மூலம் கோல் அடித்து அசத்தினார். இதன் மூலம் நெதர்லாந்து அணி 3-1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

எனினும் 68ஆவது நிமிடத்தில் ஸ்பெனின் அணி வீரர் சில்வா அடித்த பந்து கோல் ஆன போதும் அவர் ஓப் சைட்டில் நின்றிருந்ததால் அது கோல் கணக்கில் சேர்க்கப்படவில்லை. ஆட்டத்தின் 70ஆவது நிமிடத்தில் நெதர்லாந்தின் பெர்சி அடித்த பந்தை ஸ்பெயினின் காசில்லாஸ் அருமையாக தடுத்து ஆடியதால் கோல் விழாமல் பார்த்துக்கொண்டார். மீண்டும் 72ஆவது நிமிடத்தில் காசில்லாஸை ஏமாற்றி பெர்சி அருமையான கோல் அடித்து தனது அணிக்கு நான்காவது கோலை பெற்றுக் கொடுத்தார்.

ஆட்டத்தின் 80ஆவது நிமிடத்தில் நெதர்லாந்து அணியின் ரொபென் மீண்டும் ஒரு கோல் அடித்தார். பின்னர் இரு தரப்பும் கோல் அடிக்கும் வாய்ப்பை தவறவிட்டனர். இறுதியில் நெதர்லாந்து அணி ஸ்பெயினை 5-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக நெதர்லாந்து அணியின் பெர்சி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதேவேளை, கடந்த 50 ஆண்டுகால ஸ்பெயின் கால் பந்து வரலாற்றில் இது போன்ற ஒரு தோல்வியை ஸ்பெயின் சந்தித்ததில்லை. 1963ஆம் ஆண்டு ஸ்காட்லாந்து அணியிடம் 6-2 என்ற கோல் கணக்கில் தோல்வியைத் தழுவிய பின்னர் இப்போது உலகக் கோப்பையில் இத்தகைய கோல் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் 1950ஆம் ஆண்டு பிரேசிலிடம் 6-1 என்றுதோல்வியைத்தழுவியிருந்தது ஸ்பெயின்.





## பாப்பரசரின் வாழ்த்து

உலகக் கிண்ணக் கால்பந்து தொடர் உலகின் ஒற்றுமைக்கு உதவும் என பரிசுத்த பாப்பரசர் முதலாம் பிரான்ஸிஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார். தொடரில் நிறவெறி தலைதூக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். திறமையை வெளிப்படுத்துவதில் மட்டுமே வீரர்களின் கவனம் இருக்க வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தினார். உலகமே எதிர்பார்த்திருந்த பீபாவின் 20 ஆவது உலகக்கிண்ண கால்பந்து தொடர் பிரேசிலில் நடைபெற்று வருகின்றது. இந்நிலையிலேயே பாப்பரசர் நேற்று முன்தினம் இக் கருத்து வெளியிட்டுள்ளார். மேலும் விளையாட்டு என்பது சமாதானத்தின் பாடசாலை எனவும் அதில் நாமெல்லாம் சமாதானத்தை கடைப்பிடிக்க கற்பிக்கப்படுகிறது எனவும் அவர் கூறினார்

## ரூனியின் இலக்கு

அணி வெற்றி பெற உதவுவேன். என்னுடைய முழு இலக்கும் அதுதான். என்னால் முடிந்தளவு அணிக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவேன். இத்தொடரில் அதிக கோல் அடிக்க விரும்புகிறேன். இளம் வீரர்களுக்கு உதவுவது முக்கியமானது. அவர்கள் சிறப்பாக செயற்படுவார்கள் என நம்புகிறேன். களத்தில் ஒருங்கிணைந்து செயற்படுவோம் என இங்கிலாந்து கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் ரூனி தெரிவித்துள்ளார்.

## நடுவர் மீது அதிருப்தி

பிரேசில் அணிக்கெதிரான ஆட்டத்தின் 70ஆவது நிமிடத்தில் குரோஷியாவின் டீஜன் லாரென், பிரெடை கீழே தள்ளி விட்டதாக, நடுவர் நிஷிமுரா பிரேசிலுக்கு பெனால்டி வாய்ப்பு வழங்கினார். இதை நெய்மர் கோலாக மாற்றினார். ஆனால், பிரேசிலுக்கு ஆதரவாக பெனால்டி வழங்கியதாக நடுவர் நிஷிமுரா மீது பல்வேறு தரப்பினர் குற்றம் சாட்டி வருகின்றனர்.

லாரென் பின்னால் இருந்து பிரெடியை தடுக்க முயன்றுள்ளார். பிரெடி தடுமாறி விடுகிறார். ஆனால், இது பெனால்டி கொடுக்க வேண்டிய அளவுக்கு பெரிய விடயம் அல்ல என குரோஷியாவுக்கு ஆதரவாக குரல் கொடுக்கின்றனர் சிலர்.

நிஷிமுரா தன் எல்லையை மீறி விட்டார். இந்த பெனால்டி நகைப்புக்குரியது என குரோஷியா பயிற்சியாளர் நிகோ கோவக் தெரிவித்தார். ஆனால், பிரேசில் பயிற்சியாளர் பெலிப் ஸ்காலரி நடுவரின் செயலை நியாயப்படுத்தி உள்ளார். “நான் 10 முறை பார்த்து விட்டேன். அது பெனால்டிதான். அதில் மாற்றுக் கருத்தே இல்லை. நடுவர் சரியாகத்தான் செயல்பட்டிருக்கிறார்” என்றார் ஸ்காலரி.

இருப்பினும், “நான் அவரைத் தொடவே இல்லை. ஆனால், நடுவர் பெனால்டி கொடுத்து விட்டார்” என லாரென் தன் செயலை நியாயப்படுத்தி உள்ளார்.

இதை ஆமோதித்துள்ள குரோஷியா பத்திரிகை ஒன்று உலகக் கோப்பை முதல் ஆட்டத்தில் நடுவர் மன்னிக்க முடியாத குற்றத்தை செய்து விட்டார். அவர் குரோஷியாவின் இதயத்தை கத்திமூலம் கிழித்து விட்டார் என வரிந்து கட்டி எழுதியுள்ளது.

## இன்றைய ஆட்டம்

கிரீஸ் எதிர் கொலம்பியா
இலங்கை நேரம் இரவு 9.30

உருகுவே எதிர் கோஸ்டாரிகா
இலங்கை நேரம் நள்ளிரவு 12.30

இத்தாலி எதிர் இங்கிலாந்து
இலங்கை நேரம் அதிகாலை 3.30

## கால்பந்துத் துளிகள்....

* பிரேசில் வந்திறங்கியதும் இரசிகர்கள் கொடுத்த வரவேற்பு மிகுந்த உற்சாகமளிக்கிறது. காயத்தால் ஏற்பட்ட வலி போன இடம் தெரியவில்லை. போர்த்துக்கல் அணிக்காக நிச்சயம் சாதிக்க வேண்டும் என்ற உத்வேகம் ஏற்பட்டுள்ளது என்று நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ தெரிவித்துள்ளார்.

* உலகக் கோப்பை கால்பந்து தொடரின் பிரதான சுற்றுக்கு முதல் முறையாக தகுதி பெற்றுள்ள போஸ்னியா ஹெர்சகோவா அணி தனது முதல் லீக் ஆட்டத்தில் இன்று ஆர்ஜென்ரீன அணியை எதிர்கொள்கிறது. இந்தப் போட்டியின்போது, ஆர்ஜென்ரீனா கப்டன் மெஸ்சியை முடக்கும் வகையில் எந்த வியூகமும் வகுக்கவில்லை. இதற்காக ஒரு வீரரின் உழைப்பை வீணடிப்பதை விட, எங்களின் இயல்பான தாக்குதல் ஆட்டத்தில் மட்டுமே கவனம் செலுத்த முடிவு செய்துள்ளோம் என்று போஸ்னியா பயிற்சியாளர் சேபட் சூசிக் தெரிவித்துள்ளார்.

* ஆரம்ப லீக் ஆட்டத்தின்போது டுவிட்டர் இணையதளத்தில் அதிகம் டுவீட் செய்யப்பட்ட வீரராக பிரேசிலின் நெய்மர் முதலிடம் பிடித்துள்ளார். சுமார் 1.2 கோடி இரசிகர்கள் நெய்மர் பற்றி தகவல் பதிந்துள்ளனர்.

* இங்கிலாந்து , இத்தாலி அணிகள் மோதும் லீக் ஆட்டம் நடைபெற உள்ள மனாஸ் மைதானம் உலகக் கோப்பை தரத்துக்கு இல்லை என்று கால்பந்து வீரர்களுக்கான சங்கம் குறை கூறியுள்ளது.

* உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியின் ஆரம்ப ஆட்டத்தில் பிரேசில் 3-1 என்ற கோல் கணக்கில் குரோஷியாவைத் தோற்கடித்தது. இந்த ஆட்டத்தை பற்றி பேஸ்புக் சமூக வலைத்தளத்தில் 5.8 கோடி கருத்துகள் பரிமாறப்பட்டுள்ளன. இது இந்த ஆண்டில் நடைபெற்ற ஆஸ்கார் விருது குறித்து பேஸ்புக்கில் கருத்துகளை பரிமாறியவர்களின் எண்ணிக்கையை விட 5 மடங்கு அதிகமாகும். பிரேசில் நாயகன் நெய்மார் அடித்த முதல் கோல் பற்றி தான் பெரும்பாலானோர் வர்ணித்துள்ளனர். இதே போல் சர்ச்சைக்கு மத்தியில் வழங்கப்பட்ட பெனால்டி குறித்தும் அதிகமாக விவாதிக்கப்பட்டிருக்கிறது.

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்து

# அராலி சரஸ்வதி, சுழிபுரம் விக்டோரியா சம்பியன்



அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்



சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி



அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மைலோக் கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டியில் அராலி சரஸ்வதி, சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மைலோக் கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டி கடந்த வாரம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. 14,16,18 ஆகிய வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் போட்டிகள் நடாத்தப்பட்டது.

14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணியும், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணி 12-01 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணியும் மோதின. யூனியன் கல்லூரி அணி 15-01 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணியும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணி 20-19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. மூன்றாமிடத்திற்கான போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும், அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணியும் மோதின. யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி 20-18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும், அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணியும் மோதின. இதில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணி 28-21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. மூன்றாமிடத்திற்கான போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும், கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதின. யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி 20-15 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

ஏனைய மாவட்டங்களுக்கான மைலோக் கிண்ணப் போட்டிகள் நிறைவடைந்தவுடன் மாகாணப் போட்டிகள் நடைபெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டி நிகழ்வுகள் யாழ். கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண் தயாளன் தலைமையில் நடைபெற்றது. (93)

## 36 ஓட்டங்களால் வென்றது மகாஜனக் கல்லூரி

(தெல்லிப்பளை)

பகீரதனின் அபாரமான பந்து வீச்சின் மூலம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி 36 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் தற்போது பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நடாத்தப்பட்டு வருகின்றது. இதில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மற்றும் யாழ். இந்துக் கல்லூரி அணிகளுக்கிடையிலான ஆட்டம் கடந்த வாரம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய மகாஜனக் கல்லூரி அணி 46.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எஸ். சர்மிலன் 38, ஜே.டிலோஜன் 26, ரி.தேனுஜன் 20, எம்.கமல்ராஜ் 17, ஜே.அனோஜன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் எஸ்.கலைச்செல்வன் மூன்று, வை.விதுசன் எம்.ஜனுசன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 193 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். இந்துக் கல்லூரி அணி பகீரதனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் யாழ். இந்துக் கல்லூரி அணி 45.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் வை. விதுசன் 22, கே. கிரித்திகணேஷ் 15, ஜே. சலுஜன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் எம். பகீரதன் 10 ஓவர்கள் வீசி, நான்கு ஓட்டமற்ற ஓவர்கள் அடங்கலாக 16 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களைச் சாய்த்து அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தார். மற்றும் அனோஜன், சர்மிலன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (48)

## இன்று மோதும் அணிகள்

(ஆனைக்கோட்டை)

வலிகாமம் கால்பந்தாட்ட லீக் அனுசரணையுடன் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகம் மற்றும் சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையம் இணைந்து நடாத்தும் மாபெரும் கால்பந்தாட்டப் போட்டி மகாத்மா விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்று வருகின்றது.

இன்றைய தினம் மூன்று போட்டிகள் நடைபெறவுள்ளது. இதில் அரியாலை ஐக்கியம் எதிர் புத்தூர் கலைமதி, பாடுமீன் பி எதிர் சென்ஸ்ரார், சென். தோமஸ் எதிர் புங்குடுதீவு நண்பர்கள் அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (48)

## இன்று முதல் போட்டி

(லண்டன்)

இந்தியா, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் ஆட்டம் இன்று டாக்காவில் நடைபெறவுள்ளது. இப்போட்டித் தொடரில் சுரேஷ் ரெய்னா தலைமையிலான இளம் இந்திய அணி பங்களாதேஷ் அணியை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை நிதான ஆட்டம்

(லண்டன்)

இங்கிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை நிதானமாக ஆடி வருகின்றது.

இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லோட்ஸில் நடைபெற்று வருகின்றது. முதல் இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 575 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை நிறுத்தியது. இதில் ரூத் ஆட்டமிழக்காது 200 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் இலங்கை அணி இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை ஒரு விக்கெட்டை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

# உலக கால்பந்தாட்ட விழா

## வெல்லப்போகும் அணி எது?



இகொர் டெனிசோவ்

எஸ். அன்ரனிப்பிள்ளை கிளீபேட்
தலைவர்: யாழ். கால்பந்தாட்ட லீக்



### ரஷ்யா சிறு பார்வை

ரஷ்யா நாட்டின் மக்கள் தொகை 14 ½ கோடி. ஆரம்பத்தில் சோவியத் யூனியன் எனவும் 1994இற்குப் பின்னர் ரஷ்யா எனவும் வழங்கப்படுகிறது. 1958 இலேயே முதன் முதலாக உலகக் கிண்ணத்திற்குத் தகுதி பெற்றது. 1966இல் நான்காம் இடத்தைப் பெற்றது. ரஷ்யா இதற்கு முன்னர் 1994, 2002இல் மட்டுமே உலகக் கிண்ணத்திற்குத் தகுதி பெற்றிருந்தது.

அடுத்த உலகக் கிண்ணப் போட்டி 2018 இல் ரஷ்யாவிலேயே நடைபெறும். உரமான, 30 வயது தடுக்கும் மத்திய கள வீரர், இகொர் டெனிசோவ் (Igor Denisov) அணியின் தலைவராவார்.

31 வயதுடைய முன்கள வீரர் அலெக்சான்டர் கெர்ஸகோவ் (Aleksander Kerzhakov) மற்றும் 23 வயதுடைய இடது கரை முன்கள வீரர் டெனிஸ் செரிஷெவ் (Denis Cheryshev) ஆகியோர் முக்கியமானவர்கள். 67 வயது இத்தாலியரான பெபியோ கபெல்லோ (Fabio Capello) பயிற்சியாளராவார்.இவர்களது அணி அமைப்பு 4-3-3ஆக இருக்கும்.

# ரி.என்.ஏ புலிகளைப் பின்பற்றக் கூடாது

– என்.சத்தியமூர்த்தி கட்டுரையிலிருந்து.



**கை** தட்டுவதற்கு இரண்டு கரங்கள் தேவை, அதே போலத்தான் போராடுவதற்கும், இலங்கை அரசாங்கம் மற்றும் தமிழர்கள் ஆகிய இரு தரப்பினரும் கடந்த காலங்களில் போதுமானளவு செய்துள்ளார்கள். யுத்தத்துக்கு பின்னான ஐந்து வருட காலமும் மிகவும் அபாரமான வெற்றி இடம்பெற்றிருக்க வேண்டும், ஆனால் இன்னமும் காலம் கடந்துவிடவில்லை.

13 ஏ யினை நடைமுறைப் படுத்துவதில் தவறவிட்ட வாய்ப்புகள் பற்றி ஒருவரை ஒருவர் மீண்டும் பரஸ்பரம் குற்றம் சாட்டுவது, குறைந்த அளவில்கூட அனைத்து தமிழர்களுக்கும் மற்றும் மாகாணங்களுக்கும் நல்லதை செய்யப் போவதில்லை.

மாறாக இந்தக் கட்டத்தில் நேரகாலத்தோடு உடனடியாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை இன்னமும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் ரி.என்.ஏ பங்குவற்றுவதை சம்மதிக்க வைக்கும், அங்கு திரும்பவும் அது பொலிஸ் அதிகாரங்களுக்காக போராட முடியும். கடந்த சில வருடங்களாக மத்தியினால் மேற்கொள்ளப்பட்ட நிராகரிப்புகள் மற்றும் தமிழ்த் தேசியவாதிகளின் தூண்டுதல்கள் என்பனவற்றால் அவர்கள் பாதிக்கப்பட்டு வந்துள்ளார்கள், ஐக்கிய இலங்கைக்குள் ஒரு அரசியல் தீர்வை நடைமுறைப் படுத்துவதற்காக அவர்கள் கயிற்றின் மேல் நடப்பது போன்ற நிலையில் தவித்து வருகிறார்கள்.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் ரி.என்.ஏ தனது உள்ளார்ந்த பலம் மற்றும் ஜனநாயகக் கோரிக்கைகளை வெளிப்படுத்துவதற்காக இணைகிறதோ அல்லது இல்லையோ அரசாங்கமும் கூட பாராளுமன்றத் தெரிவுக் குழு, மற்றும் பாராளுமன்றத்தில் பொலிஸ் அதிகாரங்கள் சம்பந்தமான தனது தரப்பு விடயங்களை விவாதிக்க வேண்டும்.

பொலிஸ் அதிகாரங்களுக்காக போருக்கு பிந்தைய நிலைப்பாட்டினை பற்றிக் கொண்டிருக்கும் அதே வேளையில் கூட, மத்தி இடையிடையே மாகாணங்களுக்கு போக்குவரத்து மற்றும் ஏனைய சிறு வடிவங்களில் வழங்கக்கூடிய காவல்துறை அதிகாரப் பரவலாக்கத்தைப் பற்றிப் பேசி வருகிறது.

ரி.என்.ஏ மற்றும் வட மாகாணசபை என்பனவும் இதனுடன் சேர்ந்து பங்காற்றினால் தமிழர்கள் பெற முடியாமலிருப்பதைக்கூட பெற்றுவிட இயலும், சில நேரங்களில் சந்தேகமான ஒலியுடன் இசைக்கும் பாடலை நிறுத்தி அனைவரும் சேர்ந்து தனியான ஒரு பாடலைப் பாடலாம்.

இந்தியா அல்லது சர்வதேச சமூகம் உட்பட யாராவது தலையீடு செய்ய வேண்டும் என்பதற்கும் வழியில்லை, தமிழ் தேசியவாத குழுக்கள் அடங்கிய ரி.என்.ஏ மற்றும் வட மாகாணசபை என்பன புற உறுப்புகள் மூலம் நன்னடத்தைக்கு உத்தரவாதம் வழங்க முடியும்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு அரசியல் தீர்வு காண்பதற்கு ரி.என்.ஏ கடமைப்பட்டுள்ளது. ரி.என்.ஏயின் நிர்வாகத்தின் கீழுள்ள வட மாகாணசபை பொலிஸ் அதிகாரத்தை கொண்டிருக்கும்போது, அவர்கள் திடமான உறுதியுடன் செயல்பட்டாலும், உள்நாட்டிலும் மற்றும் தொலை தூரத்திலும் அவர்கள் மத்தியில் உள்ள பிரிவினைவாத சக்திகள் இருப்பதால் அதற்கு எதிராக அவர்கள் அதிகாரமற்றவர்களாகவே இருப்பார்கள்.

பொலிஸ் அதிகாரம் இல்லாவிட்டால் சிங்கள மக்கள் - இலங்கை தேசம் மற்றும் அரசாங்கம் என்பன கூட்டுச் சதி மேற்கொள்வதாக அவர்கள் மீது சந்தேகம் கொள்ள எந்தக் காரணமும் இருக்காது. ரி.என்.ஏ மற்றும் தமிழர்களுக்கு பின்துணை வழங்கும் இந்தியா மற்றும் சர்வதேச பின்துணையாளர்களுக்கும் இது உண்மையாக இருக்கும்.

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர்களுக்கு தங்கள் செல்வாக்கை பயன்படுத்தி ரி.என்.ஏயிலுள்ள தங்கள் சொந்த அங்கத்தவர்களை தெரிவு செய்ய முடியும் - அது உள்ளக ரீதியில் பிளவுபட்ட ஒரு தோற்றத்தை அதிகரித்துக் காட்டும். நாடளாவிய ரீதியில் பரந்துபட்ட ஜனாதிபதி தேர்தலில் அப்படி இருக்காது. 2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில், மர்மமான மறையில் எல்.ரீ.ரீ.ஈ யினால் திணிக்கப்பட்ட தேர்தல் புறக்கணிப்பு தமிழர்கள் மதிப்பு மிக்கவர்களா அல்லது இல்லையா என்பதை வெளிப்படுத்தியது.

2010 ஜனாதிபதி தேர்தலில் ரி.என்.ஏயின் தோல்வி முயற்சி, தெற்கில் அவர்களது கள யதார்த்தம் எவ்வாறு வெட்டுப்பட்டுப் போனது என்பதை வெளிக்காட்டுகிறது. அப்போது ஆட்சியில் இருந்த ஜனாதிபதி ராஜபக்ஷ தேர்தலுக்கு பின்னான ஒரு அரசியல் தீர்வு சலுகைகளைக் காட்டி அவர்களை வசியப்படுத்த முயற்சித்த போதும், அவர்கள் தோல்வியடைந்த சரத் பொன்சேகாவுக்கு வாக்களித்தார்கள். சிங்கள வாக்காளர்கள் ஜனாதிபதி தேர்தலை மட்டுமல்லாது ரி.என்.ஏயின் தெரிவைப் பற்றியும் கூடச் சிந்தித்தார்கள்.

அந்த வழியில் கடந்த தசாப்தங்களில் அனைத்து தமிழர்களின் முயற்சியும் மூலோபாயத்தை மையப் படுத்தாமல் தந்திரோபாயத்தால் இயக்கப் படுவதாகவே உள்ளது. அதில் அவர்களிடம் ஒரு மூலோபாயம் இருந்தாலும் எல்.ரீ.ரீ.ஈ அவை அனைத்தையும் தவறாக மாற்றி முடிவில் தந்திரோபாயத்தை, மூலோபாயத்திலும் மற்றும் மூலோபாயத்தை, தந்திரோபாயத்திலும் இழந்தது. தமிழின் பெயராலும் மற்றும் தமிழர்களின் பெயராலும் சொல்லப் படுவது ரி.என்.ஏ அதை மீண்டும் செய்யக் கூடாது என்று.

அல்லாமலும் தமிழர்களால் அதை தாங்கிக் கொள்ள முடியாத ஒன்றும் கூட. அவர்கள் நிலைமைகளையும் மற்றும் தீர்வுகளையும் தேடும் நோக்கில் செயல்பட வேண்டும், அதுவும்கூட காலத்தின் சோதனைக்கு ஏற்பத்தான் நிற்க முடியும்.



[சிறுவர் கதை]

## சண்டையிடுவது யாருக்கு சாதகம்?

**ப**றவைகளைப் பிடிப்பதற்காக ஒரு வேடன் வலை விரித்து வைத்திருந்தான். அந்த வலையில் இரண்டு பறவைகள் சிக்கிக் கொண்டன. சிறிது நேரத்திற்கெல்லாம் வேடன் தூரத்தில் வருவதை இரண்டு பறவைகளும் பார்த்தன.

உடனே இரண்டு பறவைகளும் கலந்து பேசின. உடனே வலையைத் தூக்கிக் கொண்டு ஆகாயத்தில் பறக்க ஆரம்பித்தன.

இதைக் கண்ட வேடன் அந்த வலையைப் பின் தொடர்ந்து ஓட ஆரம்பித்தான்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த முனிவர் ஒருவர் வேடனைப் பார்த்து, “எதற்காக வீணாக அந்தப் பறவையின் பின்னால் ஓடுகிறாய்! அவை இனி உனக்கு அகப்படாது” என்றார்.

அதற்கு வேடன், “அப்படியில்லை சுவாமி, இந்தப் பறவைகள் இப்போது ஒற்றுமையாக இருக்கின்றன. எனவே வலையைத் தூக்கிக் கொண்டு பறக்கின்றன. ஆனால்,

இன்னும் சிறிது நேரத்தில் அவைகளுக்கிடையில் ஒற்றுமை குறைந்து, சண்டை வந்து விடும். அப்பொழுது அந்த வலையுடன் இந்தப் பறவைகளும் சேர்ந்து கீழே விழுந்து விடும். அதை எதிர்பார்த்துத்தான், நான் பின்னால் ஓடுகிறேன்” என்றான்.

பறந்து கொண்டிருந்த பறவைகளுக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இரண்டு பறவைகளும் வலையைத் தூக்கிக் கொண்டு பறந்ததால் களைத்துப் போய்விட்டன.

“கிழக்கே ஒரு பெரிய ஆலமரம் இருக்கிறது. அங்கு என் நண்பர்கள் இருக்கிறார்கள். அங்கு பறந்து சென்றால் நாம் தப்பித்துக் கொள்ளலாம்” என்றது ஒரு பறவை.

“அந்த மரம் வேண்டாம். மேற்கே ஒரு மரம் இருக்கிறது. அங்கேதான் என் நண்பர்கள் இருப்பார்கள், நாம் அந்த மரத்திற்குச் செல்லலாம்” என்றது மற்றொரு பறவை.

இரண்டு பறவைகளும் தாங்கள் விரும்பிய இடத்திற்கே செல்ல வேண்டும் என்று சண்டையிட்டதால், அவைகளின் பறக்கும் வேகம் குறையத் தொடங்கியது. வலையும் கீழே இறங்கியது. வலை கீழே இறங்கியதும், பறவைகளின் இறக்கைகள் வலையில் சிக்கிக் கொண்டன. அதன் பிறகு இரண்டு பறவைகளாலும் பறக்க முடியவில்லை.

சிறிது நேரத்தில் வலையுடன் இரண்டு பறவைகளும் கீழே விழுந்தன.

ஒற்றுமையின்மை காரணமாக அந்த இரண்டு பறவைகளும் வேடனிடம் சிக்கிக் கொண்டன.



## மனிதர்களைப் போலவே

- கங்காரு கைகளால் சண்டை போடும்.
- யானை குறட்டைவிட்டு தூங்கும்.
- பெங்குவின் பறவை நடந்து செல்லும்.
- குரங்கு பேன் பார்க்கும்.
- குவாரின் பறவை மல்லாந்து தூங்கும்.
- சிங்கம் குடும்பம் குடும்பமாய் வாழும்.
- உகாரி குரங்கு கைகட்டி நடக்கும்.

# தமிழ் சினிமாவில் புரட்சி?

- யுவகிருஷ்ணா -

"என்னமோ ஏதோ" என்று பயந்துவிடாதீர்கள். இவ்வாண்டின் தொடக்கத்தில் இருந்து தமிழில் வெளியாகியிருக்கும் திரைப்படங்களின் எண்ணிக்கை நான்கே மாதங்களில் செஞ்சரி போட்டு விட்டது. வதவதவென வாராவாரம் வெள்ளிக்கிழமைக்கு ஆறு, எட்டு, பத்து என்கிற எண்ணிக்கைகளில் படங்கள் வெளியாவது புரட்சியா அல்லது வீழ்ச்சியா?

தமிழில் வருடத்துக்கு எத்தனை திரைப்படங்கள் வெளிவரும்?

நேரடி தமிழ்ப்படங்கள் தவிர்த்து இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஆங்கிலம் என்று மற்ற மொழிகளில் இருந்து மொழிமாற்றம் செய்யப்பட்ட படங்களையும் சேர்த்து ஆண்டுக்கு நூற்றி முப்பதிலிருந்து நூற்றி ஐம்பது படங்கள் வரை வெளியிடப்படுகின்றன. இது கடந்த பத்து ஆண்டுகளின் சராசரி.

ஆனால் இந்த ஆண்டின் முதல் அரையாண்டிலேயே இந்த எண்ணிக்கையை தமிழ் சினிமா கடக்கப் போகிறது. ஜனவரி முதல் ஏப்ரல் வரை முதல் நான்கு மாதங்களில் மொத்தம் நூற்றி எட்டு புதிய படங்கள் அரங்குகளில் திரையிடப் பட்டிருக்கின்றன. இவற்றில் டப்பிங் படங்களை கழித்துவிட்டால் நேரடி தமிழ்த் திரைப்படங்களின் எண்ணிக்கையே எண்பதை தொடுகிறது.

இந்த அசாத்தியமான எண்ணிக்கை தமிழ் சினிமா தொழில்ரீதியாக ஆரோக்கியமாக இருப்பதை காட்டுகிறதா அல்லது வீக்கத்தின் வெளிப்பாடா என்பதுதான் கேள்வி.

இவ்வாண்டு வசூல்ரீதியாக வெற்றியடைந்த திரைப்படங்களின் எண்ணிக்கையை விரல்விட்டு எண்ணுவதற்கு ஒரு கை மட்டுமே போதும். அதிலேயே கூட ஒன்றோ இரண்டோ விரல்கள் மிச்சமிருக்கக் கூடும்.

அவ்வப்போது பவர் ஸ்டார் மாதிரி திடீர் ஆட்கள் தோன்றி ஒட்டுமொத்த சூழலையும் பகடிக்கு உள் ளா[illegible]கிறார்கள். படு மொக்கையாக எடுக்கப்படும் "பவர் ஸ்டார்" வகை படங்கள் ஆளே இல்லாத தியேட்டர்களில் அனாயசமாக நூறு நாள், இரு நூறு நாள் ஓட்டப்படுகிறது. பணத்தை தண்ணீராக செலவழித்து ஒருநாள் கூட உருப்படியாக ஓட வக்கில்லாத தங்கள் படங்களுக்கு நூறு நாள், இருநூறு நாள் போஸ்டர் ஒட்டி, வெற்றிவிழா கொண்டாடி சினிமா இண்டஸ்ட்ரியையே பகடிக்குள்ளாக்குகிறார்கள். முன்பு ஜே.கே. ரித்தீஷ், இப்போது பவர்ஸ்டார் என்று இந்த திடீர் சினிமாக்காரர்களால் கலகலத்துப் போயிருக்கிறது கோடம்பாக்கம்.

திரைப்படங்கள் அதிகமாக தயாரிக்கப்படுவதற்கு தொழில்நுட்ப வளர்ச்சி பிரதானமான காரணமாக இருக்கிறது. முன்பு நெகட்டிவ் பிலிம்களில் படம் பிடிப்பது படத்தின் பட்ஜெட்டில் பெரிய இடத்தை அடைத்துக் கொண்டிருந்தது. வெறும் நான்கு நிமிடம் படம் பிடிக்கவே தோராயமாக பிலிம் செலவு பதின்மூன்றாயிரம் ரூபாய் ஆகும். இதற்கு பிரகாசமான லைட்டிங் வசதி ஏற்படுத்த வேண்டும். அ[illegible]ின் வாடகை. அவற்றை இயக்க ஜெனரேட்டர் இயக்கி மின்சாரம். இதற்கெல்லாம் மிகப்பெரிய யூனிட்டே வேலை பார்க்கும். அவர்களுக்கு உணவு, சம்பளம், பேட்டா என்று பட்ஜெட் எல்லா வகையிலும் எகிறும். ரெட், 5d போன்ற டிஜிட்டல் கமராக்கள் புழக்கத்துக்கு வந்த பிறகு இவ்வகையிலான பெரும் செலவு மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. இப்போது ஒரே ஒரு கமெராமேனே மாபெரும் யூனிட்டுக்கு சமம்.

படப்பிடிப்பில் செய்யப்படும் தவறுகளை கூட பிற்பாடு எடிட்டிங்கிலேயே சரிசெய்து கொள்ளலாம். மீண்டும் படம் பிடிக்க வேண்டிய நிலை இல்லை. லைட்டிங் குறைபாடுகளை சீர் செய்யலாம். வண்ணங்களை நினைத்த மாதிரி மேம்படுத்தலாம். ப்ளூமேட் முறையில் வெளிநாட்டுக்கு போகாமலேயே உள்ளூரிலேயே காட்சிகளையும், பாடல்களையும் படம்பிடித்து, பின்னணியை மாற்றி வெளி நாட்டில் எடுத்த காட்சிகளை மாதிரிகூட அசலாக காட்டமுடியும். கிட்டத்தட்ட எல்லாமே சாத்தியம்.



"அரை நூற்றாண்டுக்கும் மேலாக சினிமாவை மட்டுமே தொழிலாக எடுத்துக் கொண்டவர்கள்தான் இத்துறையில் புழங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால் சமீபமாக வேறு துறையில் ஈடுபடுபவர்களும் பங்களிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். "பார்ட் டைம்" தொழிலாக சினிமாவையும் சேர்த்துக் கொள்கிறார்கள். சமூகத்தில் சினிமாவை கேவலமாக நினைத்துக் கொண்டிருந்த காலம் மாறிவிட்டது. லாபம் ஈட்டக்கூடிய, சம்பாதிப்பதற்கு தகுதியான தொழிற்துறையாக தமிழ் சினிமா வளர்ந்திருப்பதான நம்பிக்கையை ஏற்படுத்தியிருப்பதாகவே இந்த போக்கை நாம் எடுத்துக் கொள்ளலாம். படங்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதற்கு இதுவும் ஒரு காரணம்." என்கிறார் தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத் தலைவர் கேயார்.

நவீன தொழில்நுட்பம், சமீபமாக இத்துறைக்கு கிடைத்துவரும் ஏராளமான மனிதவளம், தொழிலாக அங்கீகரித்து சினிமாவில் கொட்டப்படும் கோடிக்கணக்கான முதலீடு போன்ற அம்சங்கள்தான் திரைப்படங்களின் திடீர் எண்ணிக்கை அதிகரிப்புக்கு பிரதானமான காரணங்கள். இது ஆரோக்கியமான திசைக்கு தமிழ் சினிமாவை அழைத்துச் செல்லாமல், எதிர்திசையில் படுவேகமாக ஓடி அழித்துக் கொண்டிருக்கிறது என்கிற முரண்தான் வேதனையான விஷயம்.

வெள்ளிக்கிழமை காலையில் படம் வெளியிடப்படுகிறது. அன்று மாலையே வெற்றி பெற்றுவிட்டதாக அறிவித்து "சக்ஸஸ் மீட்" நடத்துகிறார்கள். அடுத்த இரண்டு நாட்களுக்கு எப்படி வெற்றியடைந்தோம் என்று படக்குழுவினர், பாரபட்சமின்றி எல்லா சனல்களிலும் பேட்டி கொடுக்கிறார்கள். திங்கள் காலை வரலாறு காணாத வெற்றியென்று போஸ்டர் ஒட்டுகிறார்கள். சினிமாக்காரர்கள் தங்களை தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்களா அல்லது மக்களை ஏமாற்றுகிறார்களா என்று புரியவில்லை.

திரைப்படத் தயாரிப்புக்கு செய்யப்படும் செலவுக்கு இணையாக விளம்பரங்களுக்கும் செலவு செய்கிறார்கள். சுமாரான அல்லது மோசமான படத்தை விளம்பரம் மூலமாக வெற்றியடையச் செய்ய முடியுமென்று நம்புகிறார்கள்.

சமீபத்தில் கவிஞர் வைரமுத்து சினிமாவின் எதிர்காலம் குறித்து தன்னுடைய கருத்தை சொன்னார். "இந்த நூற்றாண்டின் இறுதியில் திரைத்துறையில் மாற்றம் வரும். அப்போது சினிமா திரையரங்குகளை தாண்டி நேரடியாக மக்களிடம் வரும். வினியோகஸ்தர்களின் தேவை தீர்ந்துவிடும். குறைந்த முதலீட்டில் நிறைய படங்கள் வரும். வீட்டுக்கு வீடு செய்தித்தாள் வீசி செல்லப்படுவதை போல, புதுப்பட டிவிடிக்கள் வீசப்படும்.குதியுள் ளது தப்பிப் பிழைக்கும். காலம் மாறும். கலை மேம்படும்". கவிஞர் அல்லவா? அபாரமான கற்பனையில் இத்துறையின் எதிர்காலம் குறித்த சித்திரத்தை நம் மனதில் ஏற்றுகிறார்.

---

## த.ஜெயசீலனின் எழுதாத ஒரு கவிதை

த.ஜெயசீலன் யாழ்ப்பாணத்தின் முன்னணிக் கவிஞர்களில் ஒருவர். 1990களில் கம்பன் விழாக்களில் இளங்கவியாக அரங்கேறிய ஜெயசீலன், அந்த நாட்களிலேயே தன்னுடைய கவிதைகளாலும், கவிதை வாசிப்பினாலும் எல்லோரையும் வியப்பிலாழ்த்தினார். அப்போது கம்பன் கவியரங்குகளில் இரண்டு ஜெயசீலன்கள் கவிதை வாசித்தனர். ஒருவர் த.ஜெயசீலன் மற்றவர் ஜெ.கி.ஜெயசீலன். த.ஜெயசீலனைவிடச் சற்று மூத்தவர். ஆனாலும் த.ஜெயசீலன் தன்னைவிட மூத்த புகழ்பெற்ற கவிஞர்களுடன் சரி சமமாக நின்று அரங்குகளில் கவிதைச் சமராடினார். ச.வே.பஞ்சாட்சரம், சோ.பத்மநாதன், இ.முருகையன், கல்வயல் வே.குமாராசாமி, நாக. சிவசிதம்பரம், சு.வில்வரெத்தினம் என்று புகழ்பெற்ற கவிஞர்களின் மத்தியில் இளங்கவியாகப் புகுந்து வளர்ந்தார். த.ஜெயசீலனுக்கான ஊக்கத்தையும் தாகத்தையும் தந்தது கம்பன் கழகமே.

கம்பன் கழகக் கவியரங்கத்தை ஒரு தளமாகப் பயன்படுத்திக் கொண்டு மேலெழுந்த த.ஜெயசீலன், இதழ்களிலும் எழுதத் தொடங்கினார். பல்கலைக்கழக மாணவனாகப் படித்துக் கொண்டிருந்த வேளையிலேயே, ஜெயசீலனின் முதலாவது கவிதை நூல் "கனவுகளின் எல்லை" வெளிவந்தது. அந்த முதல் தொகுதி பரவலான கவனத்தையும் பெற்றது.

ஜெயசீலனின் கவிதைகள் மரபு வழிப்பட்டவை என்ற போதும் அவர் வழமையான கவிஞர்களைப் போலன்றி சற்று வேறுபட்ட தொனியில், வடிவ அமைப்பில் எழுதினார். இத்தகைய உத்தியை முன்னர் மகாகவி, இ.முருகையன், எம்.ஏ.நு᾿.மான், கல்வயல் வே.குமாரசாமி போன்றவர்கள் கையாண்டனர். பின்னர்






புதுவை இரத்தினதுரை இதை இன்னொரு வகையில் கையாண்டார். ஜெயசீலன் இவை எல்லாவற்றையும் உள்வாங்கிக்கொண்டு, புதிய கவிதைகளை எழுதினார். புதிய முறையில் எழுதினார். அப்படி எழுதப்பட்ட கவிதைகளின் புதிய தொகுதியாக "எழுதாத ஒரு கவிதை' என்ற பெயரில் வந்துள்ளது.

நல்லூர் அருண் பதிப்பகம் வெளியிட்டிருக்கும் இந்தத் தொகுதியில் வாழ்வுடன் இணைந்த/ கலந்த அத்தனை விடயங்களையும் நாம் காணலாம். எத்தனையோ கவிதைகளை எழுதியிருந்தாலும் எழுதாத ஒரு கவிதையே முக்கியமான, முதன்மையான கவிதையாக ஒரு கவிஞனின் மனதில் இருக்கும் என்பதை இந்தத் தொகுதியின் தலைப்புக் கவிதை அழகாகச் சொல்கிறது. இன்னும் களைகளைக் களைவதன் மூலமே பயிரைப் பாதுகாக்கலாம், பயன்பெறலாம் என்பதை "களைகளை" என்ற கவிதை மிகச் சிறப்பாக இருக்கிறது.

"காதல் மழை நனைவீர்" என்ற கவிதையில் ஜெயசீலன் கூற முனைகின்ற பொருள் முக்கியமானது. சுயநல வட்டத்துள், குறுகிய மன எல்லைக்குள் கட்டுப்பட்டுச் சுழலாமல், பரந்த உலகத்தில், சமூக நேயத்துடன், மானுட நேசிப்புடன் உருவாகுவீர், சமூகம் மீது காதல் கொள்வீர், அந்த மழையில் நனைவீர் என்று எல்லை விரிக்கிறார். இதுதான் ஒரு கவிஞரின் அழகும் சிறப்பும் எல்லை கடந்து பரந்த தளத்தில் விரிதல்.

"மழைச்சாட்சி" என்ற கவிதை பாரதியின் தீ காற்று போன்ற கவிதைகளை நினைவூட்டும் இயல்புடனுள்ளது.

இவை மட்டுமன்றி சக மனிதர்களைப் பற்றிய கரிசனையோடு எழுதப்பட்ட பல கவிதைகளும் இந்த நூலில் உண்டு. "முதுமையின் வலி" இவற்றில் ஒன்று. ஒரு முதியவரின் முதுமை நிலையை எடுத்துரைக்கிறது.

இப்படி பல தளங்களில் தன்னுடைய கவிதைப் பார்வையை விரித்திருக்கும் த.ஜெயசீலன் மக்களுக்குச் சேவையாற்றும் ஓர் உயர் அதிகாரியாக பிரதேச செயலராக உள்ளார். இது ஜெயசீலனின் சமூகக் கரிசனையை மேலும் தூண்டுகின்றது என நினைக்கிறேன். ஜெயசீலனின் இந்தக் கரிசனை கவிதைகளை, இலக்கியத்தை மேலும் செழுமையாக்கி மானுட நேயப் பண்புடன் இயங்க வைக்கும் என்ற நம்பிக்கை பிறக்கிறது.

ஜெயசீலன் இதைச் சாத்தியமாக்குவார். அந்த நம்பிக்கையின் சாட்சியமே "எழுதாத ஒரு கவிதை". ஜெயசீலன் எழுதாத ஒரு கவிதை நிச்சயம் அவரால் எழுதப்படும். அதற்கான அடையாளங்களை நீங்கள் இதில் காணலாம்.

**எழுதாத ஒரு கவிதை**
**த.ஜெயசீலன்**
**வெளியீடு - அருண் பதிப்பகம், நல்லூர்.**
**விலை 300.00**

**- வெள்ளைக் கிருஷ்ணன்**

**பிளேட்டோ, கனவு காணும் இலட்சிய அரசில் ஆண்களுக்குச் சமமாக பெண்களும் பொதுப்பணியில் ஈடுபட வேண்டும் என்கிறார். சமமான கல்வி பெறாவிட்டால் பெண்களால் சமமாக சமுதாயத் தொண்டுகள் செய்ய இயலாது. மக்கள் தொகையில் ஏறத்தாழ பாதி அளவுள்ள பெண்களை பொதுப் பணிகளில் இருந்து விலக்கிவைப்பது அறியாமை மட்டுமன்று அதனால் சமுதாயத்திற்கு பேரிழப்பும் ஏற்படுகின்றது. ஆண் பெண் இருபாலாருக்கிடையே இயல்பான திறமைகளில் வேறுபாடு இல்லை என்கிறார்.**

# சிறந்த அரசியலைக் கட்டியெழுப்புவோம்

சிறந்த அரசியல் அமைப்பானது ஒரு சிறந்த நாட்டின் உருவாக்கத்திற்கு அடித்தளமாகும். இந்த வகையில் மேலை நாட்டவருடைய முதலாம் அரசியல் சிந்தனையாளர் என மதிக்கப்படும் பிளேட்டோவின் அரசியற் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு இன்றைய சூழ்நிலையில் சிறந்த அரசியலை எவ்வாறு கட்டியெழுப்பலாம் என்பதனை நோக்குவோம்.



பிளேட்டோ ஏறத்தாழ 36 உரையாடல்கள் எழுதியுள்ளார். இவ் உரையாடல்கள் தொடக்க கால உரையாடல்கள், பிற்பட்ட கால உரையாடல்கள், அரசியல் தத்துவங்கள் என்றவாறாக வகையீடு செய்யப்பட்டுள்ளன. இவரது குடியரசு, அரசியல் அறிஞன், சட்டங்கள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

இவருடைய அரசியல் சிந்தனைகளை எண்ணிப் பார்ப்பதற்கு தற்காலத்திலும் வியப்பினைத் தருகின்றது. பிளேட்டோவின் உயர்ந்த அரசியற் தத்துவங்களை வெளிப்படுத்தும் நூல்களில் குடியரசு சிறப்பிடம் பெறுகிறது. பல புரட்சிகளை உள்ளடக்கியிருப்பதால் பிளேட்டோவின் குடியரசு என்ற நூலை மட்டும் வைத்துக்கொண்டு உலகில் உள்ள மற்ற எல்லா நூல்களையும் எரித்துவிடலாம் என்றார் எமர்ஸன் என்ற தத்துவஞானி.

எக்காலத்தவருக்கும் எத்துறையினருக்கும் கற்றுப் பயன் பெறக்கூடிய பல கருத்துக்களை உள்ளடக்கியது இந்நூல். இவருடைய குருவான சோக்கிரட்டீஸின் கோட்பாடுகளான "அறிவுடையோரே ஆளுதல் வேண்டும்", "அறிவுடமையே பண்பும் இன்பமும் ஆகும்" என்ற கருத்தாக்கமும் பிளேட்டோ மனதில் ஆழமாகப் பதிந்திருந்தது.

நிலையான அரசியல் சமூக சீர்திருத்தங்களை கல்வியின் மூலமாகவே காணமுடியும். அத்துடன் நடைமுறையில் அவலங்கள் இல்லாத அமைதியான சமூகத்தையும் நிறைவான நல்லரசையும் கட்டியெழுப்பவேண்டுமாயின் அதனைக் கல்வியின் மூலமே ஏற்படுத்திக் கொள்ள முடியும். சுரண்டல் பிரிவினை போன்றவையின்றி மக்கள் அனைவரும் நட்புறவுடன் மகிழ்ந்து வாழும் நல்ல சமுதாயத்தையும் தன்னலம் சிறிதுமின்றி மக்களுக்காகவே செயற்படும் ஒரு நிறைவான அரசாட்சியையும் தன் கற்பனை உலகின் குறிக்கோளாக பிளேட்டோவும் கண்டுகொண்டார்.

குடியரசு என்ற நூலில் நான்கு பிரதான வினாக்களுக்கு விடை காணுவதன் ஊடாக சிறந்த அரசைக் கட்டியெழுப்ப முனைகிறார். அதாவது நல்ல மனிதனின் பண்புகள் எவை? ஓர் இலட்சிய சமுதாயம் எவ்வாறு அமைதல் வேண்டும்? இலட்சிய சமுதாயத்தை உருவாக்குவதில் கல்வியின் பங்கு யாது? ஆட்சி செய்வோரின் பண்புகள் எவை? என்பனவாகும்.

பிளேட்டோவின் இந்த கற்பனையான இலட்சிய அரசு ஆனது அது தொடர்பான நீதி, பொருளாதாரம், சமுதாய அமைப்பு, அரச அமைப்பு, அரசாள்வோரின் பண்புகள், கல்வித்திட்டம்,




**கல்வியானது அறிவுசார் கருத்துக்களை ஆன்மாவினுள் திணிக்காமல் அதனுள் உறையும் நற்பண்புகளை வெளிப்பாடடையச் செய்யவேண்டும்.**

பெண்கல்வி, பொதுவுடமை சமுதாயம், ஆட்சி வகைகள், கலை, தனிமனித இயல்பு போன்ற பல்வேறு கருத்துக்களையும் ஆராய்கின்றது.

"அறிவுடையோரே ஆளுதல் வேண்டும்" என்ற மையக்கருத்தினைக் கொண்டு அரசியல் கருத்துக்களை கட்டி எழுப்புகிறார் பிளேட்டோ. அதாவது ஆட்சிப்பீடத்தில் அமர்வதற்கு அறிவியலாளன் தான் பொருத்தமானவன். செருப்பு அறுந்தால், கதவு பழுதானால், நோய் வந்தால் சம்பந்தப்பட்ட மனிதர்களிடம் செல்லும் பொது ஆட்சிப்பொறுப்பை மட்டும் எந்தத் தகுதியும் இல்லாதவரிடம் ஒப்படைப்பது சரியானதா? என்று கேள்வி கேட்டு ஆட்சி செய்பவர்களுக்கு சில தகுதிகளையும் வகுத்தார்.

அதாவது "பத்து வயது வரை சுதந்திரமாகவும் அதற்குப் பின் கட்டாயப்படுத்தலின்றி பத்து வருடம் விருப்பமாக கல்வி பயின்றும் அதன் பின் தத்துவஞானம் அறிய சுற்றுப் பயணம் செய்து மக்கள் வாழ்வை நேரடியாக அறிந்தும் இப்படியாக 50 வருட வாழ்வை படித்தவனே ஆட்சி செய்யத் தகுதி படைத்தவன். அவன் திருமணம் முடிக்கமாட்டான், அவனுக்காக மற்றவர்கள் உழைப்பார்கள், அவன் மற்றவர்களுக்காக உழைப்பான். இப்படிப்பட்ட சுயநலமற்றவனே தலைமைக்குத் தகுதியானவன்" என பிளேட்டோ கூறுகிறார்.

அறிவு நாட்டம் மட்டுமின்றி அவர்களிடம் உடல்வலிமையும் ஒருங்கே காணப்படவேண்டும் என பிளேட்டோ எதிர்பார்த்தார். பகைவர்களை வெல்லவும் தம் மக்களை காக்கவும் தகுதியுடையவர்களே ஆட்சிப்பீடத்தில் அமர வேண்டும் என்கிறது குடியரசு. அறிவாற்றல் இல்லாத உடல் வலிமையும் உடல் வலிமை இல்லாத அறிவாற்றலையும் பிளேட்டோ விரும்பவில்லை.

இதனையே "தத்துவ ஞானியர் கடந்த கால வரலாறு அறிந்தவர்களாகவும் நிகழ்கால அனுபவம் உடையவர்களாகவும் எதிர்காலத்தை சரியாக அனுமானிக்கும் ஆற்றல் உடையவர்களாகவும் இருப்பவர்கள். அவர்கள் பகுத்தறிவை தம் வழிகாட்டியாகவும் உண்மையை தம் உயிராகவும் கொண்டு செயற்படுபவர். அறிவென்பது நற்பண்புகளின் தொகுப்பு" என்று சோக்கிரட் டீசின் வாழ்வை நினைவிற் கொண்டு தத்துவ ஞானிகளுக்கு பிளேட்டோ இலக்கணம் வகுத்தார்.

அரசாள்வோராகவோ சமுதாயக் காப்பாளர்களாகவோ யாரும் பிறப்பதில்லை. அவர்கள் அவ்வாறு உருவாக்கப்படுகிறார்கள். திட்டமிடப்பட்ட கல்வி முறையினால் மாத்திரமே இது இயலும் என வலுவாக நம்பினார். ஆதலினால் தன்னுடைய இலட்சிய அரசினை உருவாக்குவதற்காக சிறந்த கல்வித்திட்டம் ஒன்றை வகுத்தார்.

எல்லோரும் சமன் என்ற கருத்தை கல்வியையும் அறிவாற்றலையும் பொறுத்தவரையில் பிளேட்டோ மறுக்கிறார். அவரவர் ஆற்றலுக்கு ஏற்ப கல்வி பெறப்படுவதனாலும் பணிகள் பங்கிடப்படுவதனாலும் சமுதாய அமைப்பு முழுமையடைகின்றது. கல்வியானது அறிவுசார் கருத்துக்களை ஆன்மாவினுள் திணிக்காமல் அதனுள் உறையும் நற்பண்புகளை வெளிப்பாடடையச் செய்யவேண்டும். இவ்வாறாக குடியரசின் கல்வித்திட்டமானது மெய்யியலாளர்களை ஆள்வோராக உருவாக்குவதையும் காவலர்களை நியமிப்பதையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. எனவே கல்வி அறிவை நிறைவு செய்யாத எவரும் ஆட்சியாளராக இருக்கமுடியாது.

ஆண், பெண் இருபாலாருக்கும் சமமான கல்வி தரவேண்டியது அரசின் கடமையாகும். பிளேட்டோ, கனவு காணும் இலட்சிய அரசில் ஆண்களுக்குச் சமமாக பெண்களும் பொதுப்பணியில் ஈடுபட வேண்டும் என்கிறார். சமமான கல்வி பெறாவிட்டால் பெண்களால் சமமாக சமுதாய தொண்டுகள் செய்ய இயலாது. மக்கள் தொகையில் ஏறத்தாழ பாதி அளவுள்ள பெண்களை பொதுப் பணிகளில் இருந்து விலக்கிவைப்பது அறியாமை மட்டுமன்று அதனால் சமுதாயத்திற்கு பேரிழப்பும் ஏற்படுகின்றது. ஆண் பெண் இருபாலாருக்கிடையே இயல்பான திறமைகளில் வேறுபாடு இல்லை என்கிறார்.

ஆள்வோருக்கு பொது உடமைவாழ்கை முறையை (கம்யூனிசத்தை) பரிந்துரைத்தார். நாட்டைக் காக்கும் பொறுப்பில்உள்ளவர்கள் தங்கள் கடமையைச் சரிவர நிறைவேற்றி அதில் வழுவாது இருக்கவேண்டும் என்கிறார். பொருள் தேடவேண்டிய அவசியம் குடும்பப் பொறுப்பு என்பன இவர்களுக்கு இருக்கக்கூடாது இவ்வாறு இருந்தால் இவர்கள் நாட்டினை சுயநலக்காடாக மாற்றி விடுவார்கள் என்பதற்காகவே அரசியலில் கம்யூனிசத்தை பரிந்துரைத்தார்.

மக்களை எண்ணிக்கை அடிப்படையிலும் ஆளுமை தரத்தின் அடிப்படையிலும் பிளேட்டோ கீழ்வரும் பிரமிட் வடிவில் அமைக்கிறார்.




பிரமிட்டின் அடித்தளத்தில் இருக்கும் பெரும்பான்மையான ஊழியர் வர்க்கத்தை சேர்ந்தவர்கள் தமக்கென சொத்துக்களை வைத்திருக்க முடியும். எனினும் சுயமாக சிந்திக்கவோ செயற்படவோ தெரியாத இவர்கள் மேற்தளத்திலுள்ள ஏனைய இரு வர்க்கத்தினருக்கும் அடிபணிந்து செயற்படுவார்கள். இரண்டாவது தளத்திலிருக்கும் போர் வீரர்கள் விதிகளுக்கு கீழ்ப்படிந்து நடப்பதற்கு பயிற்றுவிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு பசி ஏனைய உடற் தேவைகள் அறிவு ஆகியவற்றை காட்டிலும் துணிவு முன்னுரிமை ஆகின்றது. பிரமிட்டின் உச்சியில் இருக்கும் ஆள்வோர்கள் நன்மை தீமை விருப்பு வெறுப்பு ஆகியவற்றின் நடுநிலையில் நின்று செயற்படுபவர்கள்.

பிளேட்டோ ஆள்வோரை தலைக்கும் போர் வீரர்களை நெஞ்சுக்கும் ஊழியர்களை வயிற்றுக்கும் ஒப்பிடுகின்றார். ஆள்வோர் அறிவு நாட்டம் உடையவர்களாகவும், போர்வீரர்கள் வீர நாட்டம் உடையவர்களாகவும், ஊழியர்கள் பசி முதலான ஏனைய சுக போகங்களில் நாட்டம் உடையவர்களாகவும் காணப்படுகின்றனர். இந்தவகையில் மூன்று வர்க்கத்தினரும் ஒருங்கிணைந்து செயற்படும் போது இலட்சிய அரசும் இலட்சிய சமுதாயமும் உருவாகின்றது.

சமுதாய நீதி நெறியை அடிப்படையாகக் கொண்டு அதற்கு இலக்கணமாக தனிமனித நீதி நெறியை அமைக்க் வேண்டும் என்றார். இவருடைய இலட்சிய குடியரசின் உயர்நாடியாக இருப்பது நீதிநெறி ஆகும். அரசியல் யாப்பானது நீதிநெறிக்கு அச்சாணியாக அமையவேண்டும் தனிமனித வாழ்விலும் அரசியல் அமைப்பிலும் நீதி நெறியை நிலவச்செய்வது ஆள்வோரின் கடமை என்கிறார். இவர் தனது சட்டங்கள் என்ற நூலில் முடியாட்சித் தத்துவமும் குடியாட்சித் தத்துவமும் கலந்த அரசியல் நடைமுறைக்கு சிறந்த அமைப்பு. இவ் அமைப்பில் உரிமைக்கும் அறிவிற்கும் ஒன்று சேர இடமுண்டு எனக் கூறியவையும் கவனத்திற்குரியதே.

பிளேட்டோவின் அரசியல் சிந்தனைகள் றூசோ, கெகல், மாக்ஸ் போன்றவர்களின் அரசியல் தத்துவங்களிற்கு அடிப்படையாகியது. இந்த வகையில் ஆட்சியாளர்களிற்கு கிடைத்த அரும் பொக்கிசமாகும்.

**பா. தர்சிகா**
மெய்யியற்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# மீள்குடியேற்றத்தின் வெற்றிக்கு காத்திரமானது

# அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பே

## வடமாகாண சபை உறுப்பினர் தவநாதன் தெரிவிப்பு



மீள்குடியேற்றம் வெற்றிகரமாக நிகழ்வதற்கும் மக்களின் வாழ்நிலைகள் துரித கதியில் மீளக்கட்டியெழுப்பப்படுவதற்கும் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புகள் மிகவும் காத்திரமானவையாக அமைந்திருந்தன. என வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கோரக்கன்கட்டு மக்களுக்கு விவசாய உபகரணங்களை வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவுஸ்ரேலிய பல்மேரா நிறுவனத்தின் நிதியுதவியுடன் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனமான உயிர்ஒளி (போலோ) நிறுவனத்தினால் கோரக்கன்கட்டு கிராமத்தைச்சேர்ந்த சுமார் 25 பயனாளிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்கும் திட்டத்திற்கமைவாக முதற்கட்டமாக கடந்த வியாழக்கிழமை பத்துப்பயனாளிகளுக்கு ஒவ்வொன்றும் சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரங்கள் உள்ளிட்ட விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன. இவற்றை வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை. தவநாதன் வழங்கிவைத்தார்.

காலை 11 மணிக்கு கோரக்கன்கட்டு பொதுநோக்கு மண்டபத்தில் உயிர்ஒளி நிறுவனத்தின் நிறுவுனர் அருட்தந்தை பிரபாகரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில். அந்நிறுவனத்தின் தலைவர் ஜெயகணேஸ் மற்றும் நிர்வாகிகளும், கிராம அலுவலர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கோரக்கன்கட்டு கிராம பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் மக்களின் வாழ்நிலை மேம்பாடு கருதி பல்வேறு வாழ்வாதார உதவித் திட்டங்கள் நடை முறைப்படுத்தப்பட்டுள்ளன. அவை அரசாங்கத்தின் நிதியுதவியுடனும் மற்றும் வெளிநாடுகளில் வாழும் கொடையாளிகளின் நிதியுதவியுடனும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அவற்றினூடாக மக்கள் நூறுவிகித பயனை எட்டாது போயினும் குறிப்பிடத் தக்க மேம்பாட்டை எட்டியிருக்கின்றனர். அத்தோடு மீள்குடியேற்றம் வெற்றிகரமாக நிகழ்வதற்கும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புகள் மிகவும் காத்திரமானவையாக அமைந்திருந்தன அத்தோடு உள்ளூரில் வாழ்கின்றவர்களின் நிறுவன மயப்பட்ட செயற்பாடுகளும் துயரங்களிலிருந்து மீளத் துடிக்கும் மக்களுக்கு கைகொடுத்துதவும் என்பதற்கு இந்த உயிர்ஒளி நிறுவனத்தினரின் செயற்பாடு சிறந்த எடுத்துக்காட்டாகும். அத்தோடு இந்நிறுவனத்தினர் கோரக்கன்கட்டு எனும் மிகவும் பின்தங்கிய கிராமத்தை தெரிவுசெய்து வாழ்வாதார உதவிகளை வழங்கியுள்ளமையானது இன்றைய காலத்தின் தேவையை உணர்ந்து செயற்படும் அவர்களின் வினைத்திறன் மிக்க செயற்பாட்டை வெளிக்காட்டுகின்றது எனக்குறிப்பிட்டார்.

மேலும் உதவிகளைப் பெறும் பயனாளிகள், பெற்றுக் கொள்ளும் திட்டங்களை சரியாகப்பயன்படுத்தி முன்னேற முயற்சிக்க வேண்டும் அப்போதுதான் அடுத்த கட்டங்களில் ஏனைய பயனாளிகளுக்கு உதவிகளை வழங்கக்கூடிய வாய்ப்புக்கள் உருவாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதுமட்டுமன்றி கோரக்கன்கட்டு கிராம மக்களின் தேவைகள் குறித்தும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் மக்களுடன் கலந்துரையாடினார்.

# திருட்டு

பளை-திரியாய் அம்மன் ஆலய உண்டியல் உடைக்கப்பட்டு அதில் இருந்த பணம் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

கடந்த எட்டாம் திகதி இடம் பெற்ற இந்தத் திருட்டுச் சம்பவத்தின் சூத்திரதாரி என்று சந்தேகிக்கப்படும் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஏற்கனவே இச்சம்பவம் தொடர்பாக பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. குறிப்பிடத்தக்கது.

(37)

# கோழித்திருட்டுக்கள் அச்சுவேலியில் அதிகரிப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பகுதியில் கோழித் திருட்டுக்கள் அதிகரித்துக் காணப்படுவதாக பொதுமக்களால் தெரிவிக்கப்படுகிறது.

கோழிக் கூடுகளில் உள்ள கோழிகளை திருடர்கள் இரகசியமாக பிடித்துச்செல்வதாகவும், இந்த விடயம் மறுநாள் காலையில் கோழிக்கூட்டைப் பார்க்கும்போதே கோழிகள் திருட்டுப்போயுள்ளமை தெரியவருவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் பகல்வேளைகளிலும் வளர்ப்புக்கோழிகளை சாதுரியமாகப் பிடிப்பதாகவும் தெரிவிக்கின்றனர். இதனால் தமக்கு வருமான இழப்பு ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே கோழி வளர்ப்பில் மிகுந்த கவனத்துடன் செயற்பட்டாலே கோழிகளைக் காப்பாற்ற முடியும். இல்லையேல் இவ்வாறு தொடர்ந்தும் தமது கோழிகள் திருட்டுப்போகும் நிலை தொடர்ந்த வண்ணமே இருக்கும் என கோழி வளர்ப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

(85)

# பளையில் பனை மரங்கள் அழிப்பு ஆறு பேர் மீது வழக்கு



(பளை)

அனுமதியின்றி பனை மரங்களை வெட்டிய ஒரு குழுவினர் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது.

பளைப்பகுதியில் இவ்வாறு சட்ட விரோதமாக பனை மரங்கள் வெட்டப்பட்டுள்ளது. கடந்த எட்டாம், ஒன்பதாம் திகதிகளில் பல பனை மரங்கள் வெட்டப்பட்டிருக்கிறது.

இச்சம்பவத்துடன் நேரடித்தொடர்புடைய ஆறு பேரை பளை பொலிஸார் ஏற்கனவே கைது செய்துள்ளனர். இவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர். (37)

# பதிவிறக்கப் பெட்டகம்

பிறப்பால் தெலுங்கராக இருந்தாலும் இன்று சமகால தமிழிலக்கிய வாசிப்பினால் நான் முழுமையாக தமிழராக உணர்கிறேன். நாம் எந்த மொழியில் சிந்திக்கிறோமோ அதுதானே நம் தாய்மொழியாக இருக்க முடியும் என்னால் தமிழில்தான் சிந்திக்கமுடிகிறது கோபம் வந்தாலும் அழுகைவந்தாலும் தமிழில்தான் எதிர்வினையாற்ற முடிகிறது எனவே எனக்கு தமிழ் தான் தாய்மொழி.

ரகுவரன் தன்னுடைய ஒவ்வொரு பாத்திரங்களுக்காகவும் நினைத்துப்பார்க்க முடியாதளவுக்கு மெனக்கெடுவார். துள்ளித் திரிந்த காலம் படத்தில் வருகிற அந்த ட்ரைவர் பாத்திரத்திற்காக பத்து நாட்கள் சென்னையின் கோடையிலும் ஸ்வெட்டர் மாட்டிக் கொண்டு சுற்றினார். இளம் வயதிலேயே நீரிழிவு நோயாலும் அல்சராலும் பாதிக்கப்பட்டிருந்த ரகுவரன், ஒரு காட்சியை படமாக்கி முடிக்கும் வரை சாப்பிடவே மாட்டார். நடுவில் உணவு இடைவேளை வந்தாலும் சாப்பிடாமல் காத்திருப்பார்.

ஏன் இப்படி என்று விசாரித்தால் "சாப்பிட்டா மந்தமாகிடும் அப்புறம் தொடர்ச்சியா முந்தைய நடிப்பையே தொடர முடியாது" என்று சொல்லிவிட்டு டீயும் சிகரெட்டுமாக உட்கார்ந்துவிடுவார் இந்த தமிழின் ஆகச்சிறந்த குணச்சித்திர நடிகர்.

– ரோகிணி

'தூங்காதே தம்பி தூங்காதே' பாடல் முதலில் கண்ணதாசன் எழுதியதாம். பாடல் சரியாக வரவில்லை என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் திருத்தியதன் வடிவமே திரையில் வந்ததாம்.

'காடு விளைஞ்சென்ன மச்சான்' பாடல், ஒரு பொங்கல் விழாவுக்காக, குழந்தைகள் பாடுவதற்காகப் பட்டுக்கோட்டையாரால் எழுதப்பட்டதாம். பிறகு 'நாடோடி மன்னன்' படத்தில் பயன்படுத்தப்பட்டு புகழ்பெற்றது.

"மாரியம்மா, முத்துமாரியம்மா, உன்னைத் தேடிவந்தோம் ஒரு காரியம்மா", மற்றும் பட்டுக்கோட்டையாரின் கடைசிப் பாடலான 'பாகப்பிரிவினை'யில் இடம்பெற்ற "பிள்ளையாரு கோயிலிலே" இரண்டும்தான் பட்டுக்கோட்டையாரால் எழுதப்பட்ட சாமிப பாடல்கள் என்று நினைத்திருந்தேன். ஆனால் 'தில்லை அம்பல நடராசா' பாடலும் அவரால் எழுதப்பட்டது என்பது ஆச்சர்யமான தகவல்தான்.

அவர் மேட்டிமைக் குடும்பத்தில் பிறந்தவர், மிகச்சிறிய நில உடைமையாளரும்கூட. ஆனாலும் தொடர்ச்சியாக விவசாயக் கூலிகளான தாழ்த்தப்பட்டோர் மற்றும் தொழிலாளர்கள் குறித்தே சிந்தித்தும் பாடல்களில் பதிவும் செய்துவந்தார். ஒருபுறம் பெரியாரியக்கம், இன்னொருபுறம் கம்யூனிஸ்ட் கட்சி என பொற்காலத்தில் வாழ்ந்த பேறு பெற்றவர். தோழமை உறவுகளும் லட்சியவாதமுமே பட்டுக்கோட்டையாரின் பாடல்களை வார்த்தெடுத்தன. கருத்தியலோடு நின்றுவிடாமல் நாட்டுப்புறப் பாடல்களின் அழகும் ஓசைநயமும் இன்றைக்கும் ரசித்துக் கேட்கவைக்கும் ஆற்றலை அவர் பாடல்களுக்கு வழங்கியிருக்கின்றன.

இன்றைக்கும் எம்.ஜி.ஆர். பிறந்தநாள் என்றால் அ.தி.மு.க. சார்பில் பெரும்பாலும் பட்டுக்கோட்டையாரின் பாடல்களே ஒலிக்கவிடப்படுகின்றன. [சமயங்களில் 'மெதுவா மெதுவாத் தொடலாமா..உன் மேனியிலே கை படலாமா?' போன்ற 'கொள்கை விளக்க கோரிக்கைப் பாடல்களும்' ஒலிபரப்பப்படுவதுண்டு]. எம்.ஜி.ஆரின் பிம்ப உருவாக்கத்துக்கு அவரது பாடல்கள் பெரிதும் உதவியிருந்தாலும் வாலி போன்றவர்களைப்போல, வெறுமனே புகழ்ச்சிப் பாடல்களை எழுதுவதோ, எம்.ஜி.ஆரின் பிம்ப உருவாக்கத்துக்கு உதவுவதோ அவரது நோக்கமாக இருந்திருககாது. தனது பொதுவுடைமைக் கனவுகளையும் சமத்துவ வேடகையையுமே அவர் பாடல்களில் பகிர்ந்துகொண்டார்.

அதேபோல் தமிழர்களால் 'தத்துவப் பாடல்கள்' என்று ரசிக்கப்படுபவை எல்லாம் வாழ்வின் நிலையாமையை சொல்லும் பாடல்களே. கண்ணதாசன் 'வீடு வரை உறவு', 'போனால் போகட்டும் போடா' எழுதியதைப் போல பட்டுக்கோட்டையாரும் 'குட்டி ஆடு தப்பிவந்தா குள்ள நரிக்குச் சொந்தம்... சட்டப்படி மாட்டிக்கிட்டா எட்டடிதான் சொந்தம்' போன்ற பாடல்களை எழுதியிருக்கிறார். ஆனால் கண்ணதாசனின் பாடல்களில் தொனிப்பவை எல்லாம் உறவுகள் குறித்த ஏமாற்றவுணர்வும் விரக்தியும் வெற்று வேதாந்த மனநிலையும்தான். ஆனால் பட்டுக்கோட்டையின் நிலையாமைப் பாடல்களில் இருந்ததோ, "வாழ்க்கை நிலையானதில்லை. பொருளையும் அதிகாரத்தையும் குவிக்க ஆசைப்படாதே. சமதர்மத்தையும் சமத்துவத்தையும் உணர்ந்துகொள்" என்கிற அறவுணர்வை வலியுறுத்துபவை.

பட்டுக்கோட்டை இறக்கும்போது அவரது வயது 29தான். 29 வயதில் 17 வேலைகள் பார்த்திருக்கிறார். அவர் திரைப்படங்களில் பாடல்கள் எழுதிய காலகட்டமும் ஏழாண்டுகள்தான். கடைசி நான்கு ஆண்டுகள்தான் உச்சத்தில் இருந்தார். ஆனாலும் தமிழரின் கலைவாழ்வில் முக்கியமான ஆளுமையாக பதிந்த கவிஞன்.

– சுகுணா திவாகர்

# விசாரணைக்குழுவை அனுமதித்தால் நாடாளுமன்ற முடிவை மீற முடியாது

## அமைச்சர் டளஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

ஐ.நா.சபையின் சர்வதேச விசாரணைக்குழுவினை இலங்கைக்குள் அனுமதிக்க கூடாது என்பது தொடர்பாக நாடாளுமன்றத்தினால் எடுக்கப்படும் தீர்மானத்தை மீறி எவராலும் எதனையும் பலவந்தமாக செயற்படுத்த முடியாதென இளைஞர் விவகார அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இத்தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அனைத்துக் கட்சிகளும் தயங்காமலும் பின்வாங்காமலும் ஒத்துழைக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஐ.நாவின் சர்வதேச விசாரணைகளை இலங்கை எதிர்க்கவில்லையென சுட்டிக் காட்டிய அமைச்சர் டளஸ் அழகப் பெரும, இந்தக் குழுவினால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் உண்மையில்லை என்பதற்காகவே இதனை இலங்கைக்குள் அனுமதிக்க கூடாது என்ற உறுதிப்பாட்டில் அரசாங்கம் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கையில் இறுதிக்கட்ட மனிதாபிமான நடவடிக்கைகளின் போது மீறப்பட்டதாக குற்றஞ் சாட்டப்படும் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் ஆராயும் பொருட்டு இலங்கைக்கு விசாரணைக் குழுவொன்றை அனுப்பி வைக்க விருப்பதானது தேசிய பிரச்சினையேயொழிய தனிப்பட்ட கட்சி விவகாரமில்லை என்பதனை அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளும் புரிந்து செயற்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் தமது செயற்திறனையும் பலத்தையும் உறுதிப்படுத்தும் நோக்கில் தனித்து நின்று வெவ்வேறு நோக்கங்களுக்காக செயற்படாது தேசிய ரீதியாக தீர்வு காணப்பட வேண்டியது அவசியமெனவும் வலியுறுத்தினார்.

இது கட்சிகளுக்கிடைப்பட்ட விவகாரமல்ல என்பதனால் நாட்டு மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள தமது கட்சிகளின் பெயர்கள் மற்றும் பிரதேசவாதத்தை மறந்து இலங்கையர்களென்ற நிலைப்பாட்டுடன் நாடாளுமன்றத்தில் இதற்கான தீர்மானத்தினை வெற்றிகரமாக நிறைவேற்ற முனவர வேண்டியது கட்டாயமெனவும் அமைச்சர் கூறினார்.




## ஏன் இந்த புறக்கணிப்பு

யுத்த காலத்தில் மிகவும் மோசமாக பாதிப்புக்குள்ளாகிய எமது பிரதேசத்தில் உள்ள உடுத்துறை மகாவித்தியாலயம் இப்போது தான் மெல்ல மெல்ல அபிவிருத்தியடைந்து வருகிறது. அதிஷ்ரவசமாக எமது இந்தப் பாடசாலையை ஆயிரம் பாடசாலைத்திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டதனால் பல்வேறு அபிவிருத்திச்செயற்பாடுகள் இங்கே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இன்னமும் மேற்கொள்ளப்பட்டும் வருகிறது.

அந்தவகையில் எங்கள் பகுதி மாணவர்களின் க்ல்விக்கான வசதிகளை மேலும் அதிகரிப்பதற்காக இப்பாடசாலைக்கான பௌதீக வளங்கள் இப்போது அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. கல்விக்கான உபகரணங்கள் மற்றும் கணனித்தொகுதிகள் என்பனவும் பாடசாலைக்கு கிடைத்திருக்கின்றன. இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை இந்தப் பாடசாலையில் அக்கறையுடைய அனைவரும் வரவேற்கின்றனர்.

எனினும் நான் இங்கு குறிப்பட விரும்புவது என்னவெனில் இந்தப் பாடசாலைக்கு காவலாளி ஒருவரை நியமிக்க கல்வித் திணைக்களம் இதுவரை எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பது மிகவும் கவலையளிப்பதாக உள்ளது. இந்த விடயத்தில் வலயக்கல்வி அலுவலகமும் சரி, மாகாணகல்வி அமைச்சும் சரி எந்த முயற்சியும் எடுத்ததாகத் தெரிவியவில்லை.

இதே தரத்தில் உள்ள ஏனைய பாடசாலைகளுக்கு ஏற்கனவே காவலாளிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். ஆனால் எமது பாடசாலை மட்டும் காவலாளி எவரும் இல்லாமல் பாதுகாப்பற்ற சூழலில் காணப்படுகிறது. இந்தப் பிரச்சினைக்கு காலதாமதம் இன்றி தீர்வு காணப்பட்ட வேண்டியுள்ளது. இந்த விடயத்தில் விரைந்து செயற்படக்கூடிய அதிகாரம் மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளருக்கு தாராளமாகவே உண்டு. எனவே இந்த விவகாரத்தை அவரின் மேலான கவனத்துக்கு சமர்ப்பணம் செய்கிறேன் எமது பாடசாலையின் மேல் உள்ள அக்கறையின் பேரால்.

எஸ்.சிவசேகரம்,
உடுத்துறை.

# வட மேல்மாகாண சபையில் புதிய அறிவகங்கள் திறப்பு

(கொழும்பு)

வடமேல் மாகாணத்தின் புத்தள மற்றும் குருணாகல ஆகிய மாவட்டங்களில் புதிதாக 11 அறிவகங்கள் தொலைத்தொடர் மற்றும் தொழிநுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவினால் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளன எனத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் (ICTA) தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சிந்தனைக்கேற்ப கிராமிய மக்களுக்கும் தகவல் தொழில்நுட்பத்தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள ஆயிரம் அறிவகங்கள் திட்டத்தின் கீழ் இவ்வறிவகங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

இவ்வருட இறுதிக்குள் ஆயிரம் அறிவகங்கள் திட்டம் பூர்த்தியாக்கப்படும் என நம்பிக்கை தெரிவித்தது.வடமேல் மாகாணத்தில் 82 அறிவகங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. நாடு முழுவதும் 790 அறிவகங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் அந்நிறுவனம் மேலும் தெரிவித்தது.

# ஐ.நா.விசாரணையை ஏன் எதிர்க்க வேண்டும்?

## கணைதொடுக்கிறது ஐ.தே.க.



(கொழும்பு)

மறைப்பதற்கு எதுவும் இல்லையென்றால் எதற்காக சர்வதேச சுயாதீன விசாரணைகளை அரசாங்கம் எதிர்க்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் யுத்தக் குற்றச் செயல் விசாரணை தொடர்பில் அரசாங்கம் நாடாளுமன்றில் தீர்மானம் நிறைவேற்ற உள்ளது. இந்தத் தீர்மானத்தில் சில திருத்தங்கள் பரிந்துரை செய்யப்பட உள்ளதாகவும் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டால் மட்டுமே நாடாளுமன்ற விவாதத்தில் பங்கேற்க முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கப் படையினர் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சியும் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

எனவே சர்வதேச யுத்தக் குற்றச் செயல் விசாரணைகளின் போது எதனையும் மறைக்க வேண்டிய அவசியம் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். விசாரணைகளை நடாத்த வேண்டாம் எனக் கோர வேண்டிய அவசியம் என்ன என ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

சாவதேச விசாரணைகளை நடத்தக் கூடாது என வலியுறுத்துவதன் மூலம், அரசாங்கம் எதனையோ மறைக்க முயற்சிக்கின்றது என்ற கருதுகோளை சர்வதேச சமூகம் ஏற்படுத்திக்கொள்ளும் என அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் இறைமை, படைவீரர்கள், பௌதிக ஒருமைப்பாடு ஆகியவற்றை பாதுகாப்பதே எமது கடமை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சர்வதேச ரீதியில் நாட்டுக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சித்த அரசியல் வாதிகளை பாதுகாக்க வேண்டிய எவ்வித அவசியமும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தொழிற்சங்கப் போட்டி மலையகத்தில் உச்சம்

(கொழும்பு)

தமது தொழிற்சங்கங்களில் இருந்து வெளியேறும் தோட்ட தொழிலாளர்கள் மீது ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் மற்றும் ஹல்து முல்லை பிரதேசசபை உறுப்பினர் அசோக்குமார் ஆகியோர் தாக்குதல் நடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சிங்கள இணையத்தளம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறது.

தமது இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இருந்து விலகி அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தில் (ஜே.வி.பி.தொழிற்சங்கம்) இணைந்தவர்கள் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அகில இலங்கை தோட்டத்தொழிலாளர் சங்கத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை யூரி என்ற பெருந்தோட்டத்தில் வசிக்கும் தொழிலாளர்களுக்கும் அச்சுறுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக சந்திரசேகரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

மாற்று தொழிற்சங்கம் ஒன்றின் கடிதத்தலைப்பில் இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அதில் தமது தொழிற்சங்கத்தை விட்டு விலகினால் வெள்ளை வேனைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளதாக சந்திரசேகரன் குறிப்பிட்டுள்ளார்.

# பெரதேனியா மருத்துவமனையில் உள்ளக முரண்பாடு உச்சம்

(கொழும்பு)

பெரதேனியா போதனா வைத்தியசாலையில் தாதியர்களுக்கும், குடும்ப சுகாதார அதிகாரிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாட்டை தீர்ப்பதற்கு காவற்துறையினரும் தலையிட்டுள்ளனர்.

வைத்தியசாலையின் பணிப்பாளர் ஜயபந்து ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார்.

பெரதேனியா காவற்துறை நிலையத்தின் பொறுப்பதிகாரி இந்தப் பிரச்சினையில் தலையீட்டு தீர்வினை வழங்க நடவடிக்கை எடுத்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மகப்பேற்று பயிற்சிகள் தொடர்பில் அவர்களுக்கு இடையில் இந்த முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெடிபொருட்கள் கடத்தியவர் கைது திருமலையில் சம்பவம்

(திருகோணமலை)

திருகோணமலையில் இருந்து லொறியொன்றில் 10 கிலோகிராம் வெடிபொருட்களை கடத்திய அந்த லொறியின் சாரதியை பொலிஸார், அநுராதபுரம் மணிக்கூட்டு கோபுரம் அருகில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

நொச்சியாகம பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த சாரதியே கைது செய்யப்பட்டுள்ளார். அவரே அந்தலொறியின் உரிமையாளர் என்றும் தெரியவந்துள்ளது.

சாரதியின் இருக்கைக்கு கீழ் பாதுகாப்பாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 500 டெட்டினேட்டர்கள் மற்றும் 40 மீற்றர் பியூஸ்கோட் ஆகியனவே மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் தெரிவித்தனர்.

# விழிப்புலனற்றோர் சங்கத்தின் 'வேனில்' சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் வேனில் காலாண்டு சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நல்லூர் பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் வி.கனகசபை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆசியுரை வழங்கவுள்ளார்.

காலாண்டு சஞ்சிகையை ஓய்வுநிலை ஆசிரியர் பி.சந்திரசேகரம் வெளியீட்டு வைக்க முதற்பிரதியை ஆர்.ஜி.வர்த்தக நிலைய உரிமையாளர் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

ஏற்புரையை இதழாசிரியர் வழங்குவார். தொடர்ந்து கலைநிகழ்வு கள் இடம்பெறவுள்ளதுடன் சிறப்புப் பிரதிகள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (23)

19) பின்வரும் கோவையைப் பார்க்க.

5 // 3 = 1#1

இங்கு = குறியீடானது சமனைக் கருதுகின்றது நியம கணிதச் செய்கைகளுக்கு //, = என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கேற்ப

// என்ற குறியீடானது எதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.
(1) கூட்டல் (2) கழித்தல் (3) வகுத்தல்

20) # என்ற குறியீடானது எதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.
(1) கழித்தல் (2) பெருக்கல் (3) கூட்டல்

21) மதுவுக்கு ஒவ்வொரு சனியும், ஞாயிறும் லீவு கிடைக்கும், ரதுவுக்கு ஒன்றுவிட்ட ஒரு சாள் லீவு கிடைக்கும். இன்று சனிக்கிழமை. இருவருக்கும் லீவு கிடைத்துள்ளது எனின், பின்வரும் கூற்றுக்களில் மிகச் சரியானது.
(1) அடுத்த ஞாயிறு இருவருக்கும் லீவு கிடைக்கும்
(2) அடுத்த சனி இருவருக்கும் லீவு கிடைக்கும்
(3) இன்னும் ஏழு நாட்களில் இருவருக்கும் லீவு கிடைக்கும்

22) ஐந்து மனிதர்கள் ஒரே இடத்திலிருந்து புறப்பட்டு ஐந்து மணித்தியாலங்கள் நடந்து 25 Km தூரம் சென்றனர். எனில் ஒரு மணித்தியாலத்தில் ஒரு மனிதன் சென்ற தூரம் எவ்வளவு?
(1) 5 Km (2) 4 Km (3) 1 Km

23) 8 m நீளமும் 1m உயரமும் உள்ள ஒரு சுவருக்கு பூச 1 லீற்றர் பூச்சு தேவைப்படுகிறது. எனின் 4 m நீளமும் 4 m அகலமும் உள்ள ஒரு சுவருக்கு பூச எத்தனை லீற்றர் பூச்சு தேவை?
(1) 8 லீற்றர் (2) 4 லீற்றர் (3) 2 லீற்றர்

24) முகம் பார்க்கும் கண்ணாடியில் கடிகாரம் தோன்றும் விதம் உருவில் காணப்படுகிறது. இக் கடிகாரத்தின் உண்மை நேரம் என்ன?
(1) 2.55 (2) 3.05 (3) 9.05



பின்வரும் உரையாடலை வாசிக்க.

மாணவர் A :- 2008 ஆம் ஆண்டு ஒலிம்பிக்போட்டி எந்த நாட்டில் நடைபெற்றது தெரியுமா?
மாணவன் B :- தெரியுமே. சீனாவில் தான்.
மாணவன் E :- சீனா ஒலிம்பிக் போட்டிகளைப் பார்த்து உலகமே வியந்து போய் விட்டதாம்.
மாணவன் C :- என்ன காரணம்
மாணவன் D :- சீனர்கள் நவீன முறையில் வடிவமைத்த மைதானங்கள் தான்.
மாணவன் A :- இல்லை. சீனர்களின் கடுமையான உழைப்புத்தான்.
மாணவன் C :- சீனாவின் நவீன தொழிநுட்பவளர்ச்சியும் ஒரு காரணந்தான்.

25. இவ் உரையாடலில் எத்தனை மாணவர்கள் பங்கு பற்றி உள்ளனர்.
(1) நான்கு (2) ஏழு (3) ஐந்து

26. இவ் உரையாடல் எக் கருப்பொருளை மையமாக கொண்டு இடம் பெற்றுள்ளது.
(1) ஒலிம்பிக் போட்டிகள் (2) நவீன தொழிநுட்பம் (3) சீனர்களின் உழைப்பு

இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



**01 முதல் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. பின்வரும் பாடலில் விவரிக்கப் பட்டுள்ள பறவையைத் தெரிவு செய்க.
வெள்ளை நிறத்தை உடையது
குளத்தின் கரையில் நிற்பது
நீண்ட சொண்டு உடையது
ஒற்றைக் காலில் நின்றுமே
பெரிய மீன் வரம் கேட்பது




02. கவிதையில் குறிப்பிடப்பட்ட பழம் என்ன?
முக்கனிகளில் ஒருவன்
முளைத்திட ஒரு வித்துண்டு
தனிப்பழம் இவன் ஆவான்
தாங்கள் விரும்பும் பழம் ஆவான்




03. தரப்பட்டுள்ள அடைப்புகளில் உள்ள உருக்களைப் பார்க்க ஒவ்வோர் உருவுக்கும் ஆங்கில எழுத்துக்கள் இடப்பட்டுள்ளது




உதாரணத்தை அவதானித்து தொடர்பினை விளக்கி விடையைத் தெரிவு செய்க.
AH
(1) BF, EC, DG (2) DF, BC, EG (3) EC, BG, DF

**பின்வரும் பாடலை வாசித்து 4, 5 ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.**

"மாறும் சுற்றுச் சூழலிலே
மாசுகள் செய்து கெடுக்காமல்
போற்றும் பொதுச் சொத்து அழிக்காமல்
பேணிக் காப்பது ஒழுக்கம் என்போம்"

04. நாம் அழிக்காமல் போற்ற வேண்டியது
(1) பொதுச் சொத்து (2) ஒழுக்கம் (3) சூழல்

05. சூழல் என்பது
(1) ஊர் (2) மனிதர் (3) சுற்றாடல்

06) அடாது செய்பவர் படாதுபடுவர்" என்பதன் கருத்து.
(1) நன்மை செய்பவர் துன்பம் அனுபவிப்பர்
(2) சிறுவயதுப் பழக்கம் பெரியவர் ஆனாலும் மாறாது
(3) அநியாயம் செய்தால் துன்பம் நேரிடும்

07) மிகவும் குழப்படியான கமலன் கல்வியில் பின்னடைவான ஒரு மாணவன். இப்போது புதிதாக வந்த கபிலன் மிகவும் கெட்டிக்காரன். இப்போது கமலனும் கபிலனும் நண்பர்கள் மட்டுமல்ல கமலனில் முன்னரை விட சிறியமாறுதல்களும் காணப்படுகிறது.
இந் நிலையை நன்கு வெளிப்படுத்தும் கூற்று.

(1) பூவோடு சேர்ந்த நாரும் மணம் வீசும்
(2) குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்
(3) பழகப்பழக பாலும் புளிக்கும்

08) கீழே தரப்பட்டுள்ள மூன்று படிமுறைகளின் கீழ் கட்டடம்ஒன்று கட்டத்திட்டமிடப்பட்டது

| படிமுறை | எடுக்கும் காலம் |
|---|---|
| 1 | நான்கு ஆண்டுகள் |
| 2 | படிமுறை ஒன்றின் 1 மடங்கு |
| 3 | படிமுறை 1 இன் 1/2 மடங்கு |

கட்டடம் 2006 ஆம் ஆண்டு கட்டத் தொடங்கப்பட்டது. இக் கட்டடத்தின் இரண்டாவது படிமுறை எத்தனையாம் ஆண்டு நிறைவு பெறும்.
(1) 2018 (2) 2020 (3) 2014

09. பின்வரும் உருவை அவதானித்து வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.



10. உருவில் தரப்பட்டுள்ள வடிவத்தைப் பெறுவதற்கு நான்காக மடிக்கப்பட்ட கடதாசித்துண்டை சரியாக வெட்டவேண்டிய விதத்தை தெரிவு செய்க.



(1) (2) (3)



11. கீழே தரப்பட்டுள்ள உரு இரண்டு கடதாசிக் கீற்றுக்களை மடித்து அமைக்கப்பட்டுள்ளது. அதனை அமைக்கப்பயன்படுத்திய இரண்டு கடதாசிக்கீற்றுக்களையும் காட்டுக. விடையைத் தெரிவு செய்க.



I. II.

12. எதிரே உள்ள கனவுருவின் கிடைப்படம் பின்வருவனவற்றுள் எது?



(1) (2) (3)

**பின்வரும் கோட்டுப் படங்களின் உதவியுடன் 13 ஆம் 14 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

| | |
|---|---|
| பென்சில் 1<br>பேனா 1<br>அடிமட்டம் 1 | ரூபா<br>35/= |

| | |
|---|---|
| பென்சில் 2<br>பேனா 2<br>அடிமட்டம் 1 | ரூபா<br>60/= |

| | |
|---|---|
| புத்தகம் 1<br>அடிமட்டம் 1 | ரூபா<br>40/= |

13. இரண்டு புத்தகங்களின் விலை யாது?
(1) ரூபா 60 (2) ரூபா 30 (3) ரூபா 20

14. ஒரு பென்சிலினதும் பேனாவினதும் விலை யாது?
(1) ரூபா 12.50 (2) ரூபா 25.00 (3) ரூபா 10.00

**வாணி பெண் பிள்ளை, வாணியின் அண்ணாவிற்கு மூன்று பெண் சகோதரிகளும் இரண்டு ஆண் சகோதரர்களும் உள்ளனர்.**

15. வாணிக்கு எத்தனை பெண் சகோதரிகள் உள்ளனர்?
(1) 1 (2) 3 (3) 2
16. வாணிக்கு எத்தனை ஆண் சகோதரர் உள்ளனர்?
(1) 1 (2) 3 (3) 4

ஆரம்பக்கல்வி மாணவர்களுக்காக யுனிசெப் நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட தள உருக்கள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு குறியீடுகள் மூலம் காட்டப்பட்டுள்ளன.

குறைவு ▷ கூட
கூட ◁ குறைய

| | |
|---|---|
| வட்டம் ▷ சதுரம் | |
| வட்டம் ◁ முக்கோணம் | |

17. இதற்கேற்ப தள உருக்களில் அதிக எண்ணிக்கையில் உள்ளது
(1) வட்டம் (2) முக்கோணம் (3) சதுரம்

18. இத்தள உருக்களை கூடியதில் இருந்து குறைந்தது வரை ஒழுங்கு படுத்தும் போது கிடைக்கும் சரியான விடை.
(1) வட்டம், சதுரம், முக்கோணம்
(2) சதுரம், வட்டம், முக்கோணம்
(3) முக்கோணம், சதுரம், வட்டம்

# குடிநீர் விநியோகத்துக்கு முட்டுக்கட்டை யாழ். மக்களுக்கு செய்யும் பெரும் துரோகம்

## மாகாண எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



இரணைமடுக்குளத்திலிருந்து யாழ். குடாநாட்டிற்கான நீர் வழங்கல் திட்டத்தினை நடைபெற விடாமற் தடுப்பது எமது மக்களுக்கு இழைக்கப்படும் பெருந் தீங்கான செயலாகும் என ஈ.பி.டி.பி.யின் வடக்குமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா தெரிவித்துள்ளார்.

யாழ்.முகாமைத்துவ நிலையத்தில் நடைபெற்ற வீட்டுத்திட்டங்களும் வீட்டுப் பாவனைக்குரிய விடயங்களும் எனற தலைப்பினாலான கலந்துரையாடலில் கலந்துகொண்டு சுத்தமான நீர் வழஙகல் தொடர்பாக உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இத்திட்டம் 2014 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்படவிருந்தும் இத்திட்டத்தின் செயற்றிட்ட அறிக்கையில் இத்திட்டம் அமுல்படுத்தப்படும் போது மீண்டும் ஒரு முறை வடக்குமாகாண சபையின் ஒப்புதல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளதன் அடிப்படையில் தற்போது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட வடக்குமாகாண சபை இதற்கான ஒப்புதலை வழங்கவேண்டியுள்ளது.

வடக்குமாகாண முதலமைச்சரும் அவரைச் சார்ந்த குழுவினரும் இவ்வருடம் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிடப் பிரதிநிதிகளைச் சந்தித்து இத்திட்டம் தொடர்பாக மாற்றுத் திட்டங்களை பரிசீலிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்தமை காரணமாகவும், வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவரினால் 06.05.2014 திகதியிடப்பட்ட கடிதம் மூலம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிர்வாக இயக்குனருக்கு வடக்கு மாகாண சபை 28.04.2014 அமர்வின் போது ஏற்றுக் கொளளப்பட்ட தீர்மானமாக 1) இரணைமடுக் குளத்தைப் புனரமைப்பதைத் தனியான ஓர் திட்டமாகவும் 2) யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கான குடிநீர் விநியோகத்தை இரணைமடுவுடன் இணைக்காது தனியான ஓர் திட்டமாகவும் 3) குடாநாட்டின் கழிவகற்றும் வடிகாலமைப்புத் தேவைகளைத் தனியான ஒரு திட்டமாகவும் நிறைவேற்ற வேண்டுமெனவும் அத்துடன் குடாநாட்டிலுள்ள நீர் வளத்தை முகாமைத்துவம் செய்து பூர்த்தி செய்ய வேண்டுமெனவும் அறிவித்ததன் விளைவாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாமல் முடங்கிப் போயுள்ளது.

இவ்வாறான இவர்களின் நடவடிக்கையினால், இத்திட்டத்திற்கான கடனை வழங்குபவர்களில் ஒருவரான AFD என்ற பிரான்ஸ் நிறுவனம் தான் வழங்க இருந்த அமெரிக்க டொலர் 48 மில்லியனிற்கான கடன் உதவியை தெற்கிலுள்ள வேறு திட்டங்களிற்கு மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படட்டு வருவதாகத் தெரிகின்றது. இவ்வாறாக எமககுக் கிடைக்கப் பெற்ற வாய்ப்புகளை பயன்படுத்தத் தெரியாத வலுத்திறனற்றவர்களை எமது மக்கள் வடக்கு மாகாண சபையை நிர்வகிப்பதற்குத் தெரிவு செய்துள்ளார்கள்.

நான் இளைஞனாக இருந்த போது 1972 இல் என்று நினைக்கின்றேன். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க யாழ்ப்பாண வளாகத்தை அமைப்பதற்கான பிரகடனத்தைச் செய்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தபோது எமக்கு வளாகம் வேண்டாம் முழுமையான பல்கலைக்கழகமே வேண்டுமென்று எதிர்த்தது மட்டுமல்ல அவ் எதிர்ப்பினைக் காட்டுவதற்காக கைலாச பிள்ளையார் கோயிலின் முன் சத்தியாக்கிரகம் செய்தார்கள்.

அதில் நானும் பங்குபற்றியிருந்தேன். இப்போதுதான் தெரிகின்றது அது ஓர் மடமையான செயலென்று. அப்போது அவ்வளாகம் அமைப்பதனைத் தடுத்திருந்தால் இன்று இருப்பதைப் போன்ற ஓர் முழுமையான பல்கலைக்கழகத்தைப் பெற்றிருக்க முடியாது.

கிடைப்பவற்றினை முதலில் பெற்றுக் கொண்டு அதன் பின் நிறைவு செய்ய வேண்டிய மிகுதி விடயங்களை இட்டு செயற்படுவதே சிறப்பான அரசியல் சாணக்கியம் என்று அவரது பேச்சில் மேலும் குறிப்பிட்டார்.

# தொழிற் பயிற்சிக் கற்கை நெறி விண்ணப்பிக்க வாய்ப்பு

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது காரைநகர் மற்றும் கைதடி தொழிற்பயிற்சி நிலையங்களில் காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), மரவேலை தொழில் நுட்பவியலாளர் (தளபாடம்), கட்டட நிர்மாண உதவியாளர் (மேசனறி), வீட்டு மின் இணைப்பாளர் (வயறிங்) ஆகிய கற்கைநெறிகளை இலவசமாக ஆரம்பிக்கவுள்ளது.

இவ்வனைத்து கற்கைநெறிகளும் தேசிய தொழில் தகைமை சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

இக்கற்கைநெறிகள் கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம் 1 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் அல்லது காரைநகர் தொழிற்பயிற்சி நிலையம், வலைந்தலை, கைதடி தொழிற்பயிற்சி நிலையம், கைதடி என்னும் இடங்களில் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு சபையின் உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார்.

# கரவெட்டி பிரதேச செயலக கலை இலக்கிய போட்டி முடிவுகள்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டியில் வெற்றி பெற்ற மாண்வர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு

**கவிதைப் போட்டி**

க.சங்குலக்ஸ்மி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இ.உமா - சா.கௌரிசா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

**கட்டுரைப் போட்டி**

த.மதுமிதா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), இ.புஸ்பமதி (ஸ்ரீ பரமானந்தா அறநெறி பாடசாலை), சி.சுகன்யா (நெல்லியடி மத்திய கல்லூரி).

**கவிதைப் பாடல்**

ம.கிருஷாந்தி, ச.துமிலுஷா த.பிரிந்திகா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

**பாடல் நயத்தல் போட்டி**

இ.உமா,ச.சகானா கு.மிதுர்சினி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

*(தொடரும்)*

(18)

# கம்பன் விழா-2014

## இறுதிநாள் நிகழ்வுகள் இன்று



### காலை 9 மணி நல்லூர் கம்பன் கோட்டம்

**மங்கள விளக்கேற்றல்**
திரு.த.கந்தசாமி
(அதிபர், பெஷன் ஹவுஸ்)

**கடவுள் வாழ்த்து**
திருமதி அ.சுகன்யா

**தலைமையுரை**
பேராசிரியர் மா.சின்னத்தம்பி
(கல்வித்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

**தொடக்கவுரை**
திரு.அ.கைலாயபிள்ளை
(அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**கவி அரங்கம்**

**தலைவர்**
திரு.சி.சிவகுமார்

**பொருள்**
**"கம்பன் காட்டும் எண்ணினால் கவிதை பாட எண்ணினால்..."**
'ஒன்றே என்னின் ....' ச.மணிமாறன்
'வெற்றிதான் இரண்டும்...' த.ஜெயசீலன்
'மூன்று கவடாய்...' த.சிவசங்கர்
'நால் திசைப் பரவை...' ஸ்ரீ.பிரசாந்தன்

**உரை அரங்கம்**

**தலைவர்**
கம்பவாரிதி இ.ஜெயராஜ்

**பொருள்**
**"வள்ளுவநெறியில் கம்பநாடன்"**
இல்லறவியல் - தி.வேல்நம்பி
துறவறவியல் - வி.அசோக்குமாரன்
ஊழியல் - மா.இராமலிங்கம்

### மாலை 4.30 மணி நல்லூர் துர்க்கா மணிமண்டபம்

**மங்கள இசை**
திரு.வி.சித்தார்த்தன்
திரு.வி.பிரதித்தன் குழுவினர்

**மங்கள விளக்கேற்றல்**
தேசமான்ய லயன் த.பாலசுந்தரம்

**கடவுள் வாழ்த்து**
திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன்

**தலைமையுரை**
திரு.சுந்தரம் அருமைநாயகம்
(அரச அதிபர், யாழ்ப்பாணம்)

**தொடக்கவுரை**
மாண்புமிகு டக்ளஸ் தேவானந்தா
(பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்)

**நிறைவுரை**
திரு.ந.வித்தியாதரன்
(ஊடகவியலாளர்)

**வழக்காடு மன்றம்**

**நீதியரசர்:**
கம்பவாரிதி இ.ஜெயராஜ்

**வழக்கு:**
**"குற்றக்கூண்டில் கும்பகர்ணன்"**

**தொடுப்போர்:**
வி.அசோக்குமாரன்
இரா.செல்வவடிவேல்

**மறுப்போர்:**
மா.இராமலிங்கம்
ரி.ரெங்கராஜா

# ஆந்திராவில் அனல் பறக்கும் வெயில்

## ஒரே நாளில் 160 பேர் உயிரிழப்பு

ஆந்திராவில் வெயில் கொடுமையைத் தாங்க முடியாமல் ஒரே நாளில் 160 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

ஆந்திரா மாநிலத்தில் கடுமையாக வெயில் கொளுத்துவதால் மக்கள் வீட்டினுள்ளேயே முடங்கி கிடக்கின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் கிழக்கு கோதாவரியில் 34 பேரும், விஜயநகரத்தில் 16 பேரும், மேற்கு கோதாவரியில் 12 பேரும், விசாகப்பட்டினத்தில் 8 பேரும், கிருஷ்ணா மாவட்டத்தில் 9 பேரும் மற்றும் ஸ்ரீகாகுளத்தில் 40 பேரும் உள்ளிட்ட 160 பேரும் ஒரே நாளில் பலியாகியுள்ளனர்.



இதில் பெரும்பாலாக முதியவர்கள் மற்றும் குழந்தைகள் உயிரிழந்துள்ளனர். மேலும் அனல்காற்றுக்காரணமாக அதிக வியர்வை வெளியேறுவதால், மூச்சுத்திணறல் ஏற்பட்டு உயிரிழப்பு நேர்ந்ததாகக்கூறப்படுகிறது.

இதுகுறித்து வானிலை ஆய்வாளர்கள் கூறுகையில், ராஜஸதானில் இருந்து வீசும் தரைக் காற்றால் அனல் அடிப்பதாகவும், தென்மேற்கு பருவக்காற்று தமிழ்நாட்டுடன் நிற்பதாலும் வெயில் அதிகமாக இருக்கிறது எனக் கூறியுள்ளனர்.

இந்த வெயில் இன்னும் 2 நாள் நீடிக்கும் என தெரிவித்துள்ளனர்.

# விண்வெளிப்பயணத்துக்கு 60 இலட்சம் ரூபா கட்டணம்

(பீஜிங்)



விண்வெளியில் பயணம் செய்வதில் பொதுமக்கள் மிகுந்த ஆர்வத்தில் உள்ளனர். அதைப் பயன்படுத்தி சில தனியார் நிறுவனங்கள் விண்வெளி பயணத்தக்கு ஏற்பாடு செய்து வருகின்றன. அதன்படி நெதர்லாந்தைச் சேர்ந்த ஒரு நிறுவனம் ஆன்-லைனில் விண்வெளி பயணத்துக்கான அறிவிப்பை வெளியிட்டது.

அதன்படி, விண்வெளியில் பயணம் செய்ய விரும்புபவர்கள் 125 கிலோ எடைக்கு குறைவாக இருக்க வேண்டும். மேலும் விண்வெளியில் 5 முதல் 6 நிமிடம் மட்டுமே பயணம் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு 60 இலட்சம் ரூபா எனக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதை பொருப்படுத்தாத சீன பணக்காரர்கள் 305 பேர் விணவெளி பயணத்துக்கு டிக்கெட் முன்பதிவு செய்தனர்.

விண்வெளியில் ஒரு தடவை 2 பேர் மட்டுமே விண்கலத்தில் பயணம் மேற்கொள்ள முடியும். அதற்குமுன்னதாக அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

# போதையில் வாகனம் ஓட்டிய பெண்ணுக்கு 55 வருட சிறை



(லொஸ் ஏஞ்சல்ஸ்)

அமெரிக்காவில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரை சேர்ந்தவர் ஷெரிலின் வில்கின்ஸ் (வயது53). இவர் தொழில் ரிதீயான ஆலோசகர் ஆவார்.

கடந்த 2012ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் திகதி லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் இருந்து புறநகர் பகுதிக்கு கார் ஓட்டிச் சென்றார். அப்போது, அவர் குடிபோதையில் இருந்தார். அதிவேகமாக கார் ஓட்டிச் சென்ற அவர் வீதியில் நடந்து சென்ற பிலிப் மொரெனோ என்பவர் மீது பயங்கரமாக மோதினார். இதனால் அவர் உயிரிழந்தார்.

அதைத் தொடர்ந்து அவர் மீது நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. அப்போது தான் மது குடிக்கவில்லை. சிறிதளவு வோட்கா மற்றும் தக்காளிச்சாறு மட்டுமே குடித்திருந்ததாக வாதம் செய்தார்.

அதை நீதிமன்றம் ஏற்கவில்லை. முடிவில் அவருக்கு 55 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

# இந்தியா–பாகிஸ்தான் இடையே புதிய அத்தியாயம் தொடங்கும்

## நவாஸ் ஷெரீபுக்கு மோடி பதில்



இந்தியா-பாகிஸ்தான் இடையேயான மோதல் மற்றும் வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் இருதரப்பு உறவில் புதிய அத்தியாயத்தை தொடங்க முனைப்புடன் இருப்பதாக, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீபுக்கு பிரதமர் நரேநதிர மோடி கடிதம் எழுதியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடிக்கு கடந்த ஜூன் 2ஆம் திகதி நவாஷ் ஷெரீபுக்கு கடிதம் எழுதியிருந்தார். அதற்குப் பதில் அளித்து மோடி எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது,

இந்தியா-பாகிஸ்தான் இடையேயான உறவானது அமைதி, நட்பினால் வரையறுக்கப்பட்டது. இரு நாடுகளின் ஒத்துழைப்பு நமது இளைஞர்களுக்கு பல புதிய வாய்ப்புக்களைத் தரும். நமது மக்களின் எதிர்காலம் அதன் மூலம் பாதுகாக்கப்படும். நமது பிராந்தியம் முழுவதும் வளர்ச்சியை துரிதப்படுத்த வேண்டும்.

அண்மையில், கராச்சியில் தீவிரவாதிகள் நிகழ்த்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் கண்டனத்துக்குரியது. அந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மோதல்கள் மற்றும் வன்முறையற்ற சூழ்நிலைகளை உருவாக்க உங்களுடனும், உங்களது அரசுடனும் இணைந்து பணியாற்ற முனைப்புடன் இருககிறேன். இந்தியா-பாகிஸ்தான் இடையேயான இருதரப்பு உறவில் புதிய அத்தியாயத்தை நாம் தொடங்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மோடியை இழிவுபருத்திய மாணவர்கள் மீது வழக்கு

கேரளாவில் கல்லூரியின் புத்தகத்தில் மோடி பற்றி அவதூறான வாசகங்களை வெளியிட்ட மாணவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதனால் பெரும் சர்ச்சை ஏற்பட்டதுடன், கைது செய்யப்பட்ட இந்த மாணவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டிருநதது.இதன்பின் இவர்கள் பிணையில் வெளியே வந்துள்ளனர்.

இந்நிலையில் மீண்டும் ஒரு கல்லூரியின் புத்தகத்திலும் மோடியை இழிவுபடுத்தும் விதம தவறான வாசகங்களை குருவாயூரில் உள்ள ஸ்ரீகிருஷணன் கல்லூரியில் வெளியிட்டுள்ளனர்.

அதில் கிராஸ் வேர்டு பஸில் என்ற வார்த்தை விளையாட்டு புதிரில் நரேந்திர மோடியின் வெளித்தோற்றம் பற்றி ஆட்சேபகரமான, வெறுக்கத்தக்க வார்த்தைகளைப் பயன்படுத்தி உள்ளனர்.

இதை அறிந்த பாரதய ஜனதாக் கட்சியினரும், கட்சியின் இளைஞர் அணியும் கல்லூரி முதல்வர் மற்றும் சம்பந்தப்பட்ட மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இத்தகவல் அறிந்த பொலிசார் விசாரணை நடத்தி, கல்லூரி முதல்வர் மற்றும் 11 மாணவர்களை கைது செய்து, அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

## பல்லியை பிரசவித்த பெண் இந்தோனேஷியாவில் சம்பவம்

இந்தோனேஷியாவில் பெண்மணி ஒருவர் பல்லியை பிரசவிததுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தோனேஷியாவில் உள்ள மிகவும் பின்தங்கிய கிராமமான ஈனண்டாவைச் சேர்ந்த டெபி நியுபடொனிஸ் (வயது31) என்ற பெண கர்ப்பம் தரித்துள்ளார்.

இந்நிலையில், 8 மாதகாலமானதால் அப்பெண்ணுக்கு பிரசவலி ஏற்பட்டுள்ளது, இதனைத் தொடர்ந்து, அக்கிராமத்தை சேர்ந்த மருத்துவப்பெண் ஒருவர் அவருக்கு பிரசவம் பார்த்ததில், அவருக்கு புல்லி பிறந்துள்ளது.

எட்டு மாத கர்ப்பிணியான இப்பெண் பல்லியை பிரசவித்த செய்தியை அறிந்த மருத்துவ அதிகாரிகள் அது தொடர்பில் ஆராயவதற்காக குழுவொன்றை அந்தக் கிராமத்திற்கு அனுப்பியுள்ளனர்.

பெண்ணொருவர் பல்லியை பிரசவிப்பது என்பது மூடத்தனமான கதை என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இதற்காக அவர்கள் தர்க்க ரீதியான விளக்கங்களை கோரியுள்ளனர்.

## உலகச் செய்திகள்

# விலையுயர்ந்த நீலநிற வைரம் தென்னாபிரிக்காவில் கண்டுபிடிப்பு



உலகிலேயே விலையுயர்ந்த் நீல நிற வைரம் தென்னாபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தென்னாப்ரிக்காவின் குழினென் (Cullinan) சுரங்கத்தில் பெட்ரா வைரம் என்ற நிறுவனத்தால் 122.52 கரட் நீல நிற வைரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டில் 507 கரட் வெள்ளை நிற வைரம் 20 மில்லிய யூரோக்களுக்கு விற்பனை செய்யப்பட்டது, ஆனால் இந்த வைரம் அதைவிட அதிகமான விலையில் விற்பனையாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிறுவனம், சில மாதங்களுக்கு முன் 29.6 காரட் நீல நிற வைரத்தை 14 மில்லியன் யூரோக்களுக்கு விற்பனை செய்துள்ளது. இதற்கிடையில் இந்த வைரம் கிடைத்துள்ளதால் சந்தோஷத்தில் மிதக்கின்றனர்.

வெள்ளை நிற வைரத்தை விட நீல நிற வைரம் விலைமதிப்பானது என்பதால் இந்த வைரம முந்தைய உலக சாதனையை முறியடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இராணுவ விமானம் தகர்ப்பு

(கிவ்)



ரஷ்யா பிரிவினைவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் உக்ரைன் நாட்டின் இராணுவ விமானத்தை சுட்டு வீழ்த்தி உள்ளனர். இதில் பாதுகாப்புப் படை வீரர்கள் பலர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. பெரிய அளவிலான மிஷின்கன்னை பயன்படுத்தி இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. ரஷ்யாவின் எல்லைப் பகுதியான லுகன்ஸ்க் பகுதியில் இந்தத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

# எமது உண்மையான வரலாறுகளை பின்னோக்கிப் பார்க்க வேண்டியுள்ளது




எமது வரலாறுகளை மூடிமறைப்பது அல்லது மறந்து விடுவது பலருக்கு வாடிக்கையாக இருக்கலாம். ஒரு பொய்யை மீண்டும், மீண்டும் கூறும் போது அதுவே நாளடைவில் உண்மை யாகிப் போகும் என்ற நிலைப்பாட்டிலும் பலர் இருந்து வருகின்ற சூழ்நிலையில் நாம் எமது உண்மையான வரலாறுகளைப் பின்னோக்கிப் பார்க்க வேண்டியுள்ளது என பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபி விருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரி வித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாய பீடம் நேற்று கிளிநொச்சி அறிவியல் நகரில் திறந்து வைக்கப்பட்டது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகமானது ஆரம்பத்தில் ஒரு வளாகமாக பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க வினது ஆட்சிக்காலத்தில் கல்வி அமைச்சராக இருந்த அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் அவர் களால் ஆரம்பிக்கப்பட்டபோது அப்போதைய தமிழ் அரசியல் தலைமைகள் அதற்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்தன. பல்கலைக் கழகமே வேண்டும் வளாகம் தேவையில்லை என அன்று அத்தலைமைகள் கூறி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

அந்த தலைமைகளின் எச்ச சொச்சங்கள் இன் றும் இருக்கின்றன.

அன்று கறுப்புக் கொடி காட்டி தமிழ்த் தலை மைகள் காட்டிய எதிர்ப்பையும் மீறி யாழ்ப்பாணத் தில் வளாகம் அமைக்கப்பட்டு இன்று அது பல் கலைக் கழகமாக பல்வேறு வசதிகளை உள்ளடக் கியதாகக் காணப்படுகிறது.

அன்றைய அத் தலைமைகளின் எதிர்ப்புகளின் முன்பாக வளாகம் நிறுவப்படாது விட்டிருப்பின் இன்று இந்த பல்கலைக்கழகமே எமக்குக் கிடைத்திருக்காது.

இதேபோன்றுதான் இத்தலைமைகள் அரசியல் தீர்வு உட்பட அனைத்து விடயங்களையும் எதிர்ப் பதிலேயே தங்களது காலத்தை செலவிட்டு வருகின்றன.

கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்தவும் மேலும் சந்தர்ப்பங்களை உரு வாக்கிக் கொள்வதற்கும் நாம் முன்வர வேண்டும்.

அனைத்தையும் எதிர்த்து, எதிர்த்தே இத் தமிழ் தலைமைகள் எமது மக்களை எதுவுமே அற்ற சமூகமாக பின்தங்கிய நிலைக்குக் கொண்டு வந்து விட்டன.

தங்களது சுயலாப அரசியலை முன்வைத்து மக்களது பிரச்சினைகளைத் தீர்க்க விடாமல் அப்பிரச்சினைகளை தீராப்பிரச்சினைகளாகக் காட்டி, அதன் மூலம் தங்களது அரசியல் இருப்பை இவர்கள் தக்க வைத்துக் கொள்ள முயல்கின்றனர்.

இவ்வாறான நிலைப்பாட்டிலிருந்து விடுபட்டு, எமது மக்களது பிரச்சினைகளைத் தேவைகளை உணர்ந்து அவற்றைத் தீர்ப்பதற்கு இவர்கள் முன் வருவதாக இல்லை.

இதனை எமது மக்கள் தெளிவாக உணர்ந்து, சரியான திசையை நோக்கிப் பயணிக்க முன்வர வேண்டும் என அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா மேலும் தெரிவித்தார்.

இவ்விவசாய பீட வளாகத்தை மீள பல்கலைக் கழகப் பயன்பாட்டுக்கு பெற்றுத் தந்தமைக்காக வும், யாழ்.பல்கலைக்கழகத்திற்கு பொறியியல் பீடமொன்றை உருவாக்கித் தந்தமைக்காகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விற்கு அனை வரும் தங்களது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

இதன்போது இலங்கையில் 17 பல்கலைக் கழகங்கள் இருக்கும் நிலையில் நான்கு பொறியி யல் பீடங்களும் மூன்று மருத்துவ பீடங்களும் இருப்பதாகத் தெரிவித்த உயர்கல்வியமைச்சர் எஸ்.பி திசாநாயக்க, பொறியியல் பீடமும், மருத் துவ பீடமும் அமைந்ததொரு பல்கலைக் கழகமாக யாழ்.பல்கலைக் கழகம் இருப்பதாகவும் இது மென்மேலும் வளர்ச்சி பெறும் என்றும் காலப் போக்கில் கிளிநொச்சியிலும் ஒரு பல்கலைக் கழகம் உருவாகலாம் என்றும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

### கூவர் கலையரங்கம்...

திறந்து வைத்தனர்.

இந்தக்கலைரங்கம் அமைந்துள்ள காணியை பல்கலைக்கழகத்திற்கு பெற்றுத்தந்தமைக்காக, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு யாழ். பல்கலைக்கழகம் சார்பில் நன்றியைத் தெரிவிப்ப தாக உபவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட் ணம் மற்றும் பீடாதிபதி பாலகுமார் ஆகியோர் தெரிவித்தனர்.

மருத்துவ பீடத்தின் முதலாவது பீடாதிபதி யான கூவர் அவர்களின் நினைவாக இந்தக் கலையரங்கம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணபிரதம செய லர்•திருமதி விஜயலக்சுமி ரமேஸ், ஈ.பி.டி.பி.யின் வடக்கு மாகாணசபை எதிர்க்கட்சித்தலைவர் தவராசா, பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

### 400இற்கு...

கோழிகளும் வெட்டப்பட்டன. அத்துடன் நூற் றுக்கும் மேற்பட்ட கோழிகள் உயிருடன் ஆலய நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்ன. நள்ளிரவில் இடம்பெற்ற பொங்கல் வழிபாடுகளைத் தொடர்ந்து அதிகாலையில் கடாக்கள் வெட்டும் நிகழ்வு ஆரம் பமாகியது. ஆலய வாயிலில் மிகவும் பாதுகாப் பான முறையில் அடைக்கப்பட்ட இடத்தில் பொது மக்கள் பார்வையிடா வண்ணம் இம்முறை கடாக் கள் வெட்டப்பட்டன. கடாக்கள் வெட்டும் இடத் தில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நின்று கடாக்களைப் பரிசோதித்து வெட்டுவதற்கு அனு மதித்தனர். ஒவ்வொரு கடாக்களும் பரிசோதிக்கப் பட்டே வெட்டுவதற்கு கொண்டுசெல்லப்பட்டன. ஓர் இடத்தில் ஒரு கடா வெட்டப்பட்டு அந்தக் கடா அகற்றப்பட்ட பின்னரே அடுத்த கடா வெட்ட அனுமதிக்கப்பட்டது. இதனால் அதிக நேர தாமதங்கள் ஏற்பட்டன. இம்முறையும் அதிக எண் ணிக்கையானவர்கள் பார்வையாளர்களாக கலந்து கொண்டனர். நள்ளிரவுக்கு முன்னரே ஆலய சுற்றாடலில் கடாக்களுடன் பொது மக்கள் கூடினார்கள். நேற்று முன்தினம் மாலை முதல் ஆலய சுற்றாடலில் நூற்றுக்கும் மேற்பட்ட பொலி ஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந் தனர்.

### காணாமற்...

அவரது பெற்றோர்கள் வவுனியா வைத்தியசா லையில் அனுமதித்துள்ளனர். மாணவனின் உடற் பகுதியில் அடி காயங்களோ துன்புறுத்தலுக்கான சான்றுகளோ இல்லை என வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி மு. அகிலேந்திரன் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொர்பில் மேலதிக விசாரணை களை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

### கொள்ளையர்...

வருவதாவது

சுதுமலை அம்மன்கோவில் திருவிழா விற்கென உயிரிழந்த பத்மாவதி என்பவர் கொழும்பிலிருந்து வருகைதந்து பதுளையைச் சேர்ந்த தெய்வானை என்பவரது வீட்டில் தங்கியிருந்துள்ளார். இந்த நிலையில் நேற்று அதிகாலை 2 மணியளவில் குறித்த வீட்டின் கூரைப்பகுதி ஊடாக உள்நு ழைந்த திருடர்கள் பத்மாவதியின் வாயை சலோ ரேப்பினால் ஒட்டியதுடன், அவரது கை,கால் களை கட்டிப்போட்டு அடித்துள்ளதுடன் மற்றைய பெண்ணையும் தாக்கியுள்ளனர்.

அத்துடன், அவர்கள் அளித்திருந்த சங்கிலி, காப்பு, மோதிரம் தோடு, ரொக்கப்பணம் தொலை பேசி, என்பவற்றை கொள்ளையிட்டு சென்றுள் ளனர்.

காயமடைந்த தெய்வானை மானிப்பாய் பொலி ஸாருக்கும், அம்புலன்ஸிற்கும், அம்புலன்ஸிற்கும் அறிவித்துள்ளார். இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் உயிரிழந்த பெண்ணின் சடலத்தை யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (பா,25)

# வாழைப்பழத்தின் விலை திடீரென அதிகரிப்பு

(சுன்னாகம்)

கடந்த சில நாட்களாக யாழ். குடாநாட்டுச் சந்தைகளில் வாழைப்பழத்தின் விலை அதிகரித்து காணப்படுகிறது.

கடந்த சில மாதங்களாக பத்து ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட கதலி வாழைப்பழம் தற்போது விவசாயிகளிடம் இருந்து 25-30ரூபாவரையில் வர்த்தகர்களால் கொள்வனவு செய்யப்படுவதுடன் இதரை, கப்பல் வாழைப்பழங்களில் விலைகளும் தற்போது அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆலயங்கள் பலவும் கொடியேறிதிருவிழா நடைபெறுவதாலும், ஏனைய விழாக்களும் ஆரம்பமாகியமையே இதற்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (66)

# சர்வதேச விசாரணைகள் இலங்கை மீது ஆரம்பம்

## ஐ.நா.பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை தொடர்பான சர்வதேச விசாரணை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாக, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

த நியு இந்தியன் எக்ஸ்பிரஸ் இணையத்தளத்துக்கு தனது பெயரை குறிப்பிடாமல் குறித்த பேச்சாளர் இந்த தகவலை வழங்கி உள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கான 12 பேர் கொண்ட குழுவை மனித உரிமைகள் ஆணையாளர் நியமித்துள்ளார்.

அந்தக் குழுவின் இணைப்பாளராக போர்க்குற்றங்கள் தொடர்பில் 20 வருடகால அனுபவம் கொண்ட சென்ட்ரா பேய்டாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன் மூலம் 'ஏற்கனவே இலங்கை தொடர்பான இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாக மனித உரிமைகள் பேரவையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

### ஆங்கில...

தொடர்பில் இந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டை பிளவுபடுத்தக் கூடிய சொற்பதங்களை உள்ளடக்கி கொள் கைப் பிரகடனம் உருவாக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள் ளது.

இதேவேளை, கட்சியின் யாப்பு மற்றும் கொள்கைப் பிரடகனத் தில் திருத்தங்கள் செய்யப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் அரசியல் சாசனம் மீறப்படவில்லை எனவும், சமஸ்கிருத மொழியின் சொற்பதங்கள் தமிழிலில் மொழி பெயர்க்கப்பட்டு கொள்கைப் பிரகடனம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட் டுள்ளார். மனு மீதான விசாரணைகள் எதிர்வரும் ஜூலை மாதம் 15ஆம் திகதி மீள விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது

### விசாரணைக்குழுவின்...

றையும் நியமிக்க நவநீதம்பிள்ளை முடிவு செய்துள்ளார். எவ்வாறாயினும், இது ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணிய கத்தினால் மேற்கொள்ளப்படும் விசாரணையே. நிபுணர்களின் பங்கு உறுதிப்படுத்தப்பட்டதும் நவநீதம்பிள்ளை அதை இலங்கை அரசுக்கு அறிவிப்பார்.

இலங்கை விசாரணைக் குழு ஜூலை மாதம் ஜெனிவாவில் முதலாவது கூட்டத்தை நடத்தும். நவநீதம்பிள்ளையால் தெரிவு செய்யப்பட்ட நிபு ணர்களும் இதில் பங்கேற்பர். இந்த விசாரணைக் குழு 12 பேரைக் கொண்டதாக இருக்கும். இந்த விசாரணைக் குழுவின் இணைப்பாளர் சன்ட்ரா பெய்டாஸ், ஐ.நாவில் மனிதஉரிமை கள் குறித்த விசாரணைகளில் 20 ஆண்டு காலம் பணியாற் றிய, அனுபவம்மிக்க மூத்த உறுப்பினர். வழக்கமான நடைமுறைகளின் படி, இந்த விசாரணை தொடர்பான வாய்மூல மற்றும் விரிவான அறிக்கைகள் சமரப்பிக்கப்பட முன்னதாக, இலங்கை அரசின் கருத்தை வெளிப்படுத்த ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் பணி யகம் வாய்ப்பை வழங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

### இருபது...

ரூபாக்கள் இது வரை செலவு செய்யப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் காலை எட்டு மணிக்கு விவசாய பீடாதிபதி திருமதி சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் உயர் கல்வி அமைச்சர் எஸ்பி. திஸநாயக்க, பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார்,யாழ் பல்கலை கழத்தின் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் ஆகியோர் கிளி நொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள விவசாய பீட கட்டடத் தொகுதிகளை திறந்து வைத்து விவசாய பீடத்தின் நடவடிக்கை களை ஆரம்பித்து வைத்தனர்.

இதன் போது உயர் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ரனேபுர, அமைச்சின் திட்டப்பணிப்பாளர் அபோன்ஸ், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், வட மாகாண சபையின் பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி,கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதேச பிரதிப் பொலிஸ்மா அதிபர் திஸநாயக்க, மற்றும் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள்,பேராசிரியர் கள், கிளிநொச்சி மாவட்ட கல்விச் சமூகத்தினர்,மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (29)

# விசாரணைக்கு ஒத்துழையாமை;
# ஆழ்ந்த வருத்தத்தில் நவிப்பிள்ளை



(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற போரின் இறுதி ஏழு ஆண்டுகளிலும் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் பிரதானமான உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்க தனது பணியகத்தினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவுடன் ஒத்துழைக்கப் போவதில்லை என்று இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளதற்கு, ஐ.நா. மனிதஉரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஆழ்ந்த வருத்தம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் பேச்சாளர் ருபேட் கொல்வில் கூறுகையில்,

ஐ.நா. மனிதஉரிமை ஆணையாளர் பணியகத்தின் விசாரணைகளுக்கு ஒத்துழைக்குமாறு, ஐ.நா. மனிதஉரமைகள் பேரவையின் 25/1 தீர்மானம் இலங்கை அரசாங்கத்தைக் கோரியிருந்த போதிலும், அதனை மீறி, இந்த விசாரணைகளுக்கு ஒத்துழைக்கப் போவதில்லை என்று இலங்கை பிரதிநிதி கடந்த செவ்வாய்க்கிழமை அறிவித்தது ஐ.நா. மனிதஉரிமை ஆண்யாளரை ஆழ்ந்த கவலைக்குள்ளாக்கியுள்ளது.

ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையின் ஆணையின் பேரில், அரசாங்க ஒத்துழைப்பு இன்றி விசாரணை நடத்தப்பட்ட ஏனைய சூழ்நிலைகளில், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகம், நன்கு பரிசோதிக்கப்பட்ட முறைகளைக் கையாண்டது.

இலங்கை அரசாங்கத்துக்கு ஜூன் 5ஆம் நாள் ஐ.நா. மனித உரிமை ஆணயாளர் நவநீதம் பிள்ளை கடிதம் எழுதியிருந்தார்.

விசாரணைக் குழு மற்றும் அதன் செயல்முறைகள். குறித்து அதில் அவர் விபரித்திருந்தார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# எழுச்சி கண்ட கொலம்பியா கிரீசை தோற்கடித்தது



உலககிண்ண கால்பந்தாட்டப் போட்டியில் கிரீசை 3 கோல்கள் வித்தியாசத்தில் வென்றது கொலம்பியா

2014 உலக கோப்பை கால்பந்து போட்டியின் நான்காவது ஆட்டம் நேற்று பெலோ ஹாரி சோண்ட்டில் உள்ள எஸ்ட்டாடியோ மினிரவ் மைதானத்தில் நடைபெற்றது. "சி" பிரிவு போட்டியான இதில் கிரீஸ் அணியும் கொலம்பியா அணியும் மோதின.

ஆட்டத்தின் முற்பகுதி நேரம் வரை கொலம்பியா ஒரு கோல் அடித்து, கிரீஸ்சின் கணக்கை பூஜ்ஜியத்தை விட்டு உயராமல் பார்த்துக் கொண்டது. பரபரப்பான பிற்பகுதி ஆட்டத்திலும் எதிரணியை தலையெடுக்க முடியாமல் திணறடித்த கொலம்பியா, மூன்றுக்கு பூஜ்ஜியம் என்ற கோல் கணக்கில் கிரீஸை வீழ்த்தியது.

16 ஆண்டுகளுக்கு பிறகு உலக கோப்பை கால்பந்து போட்டியில் நுழைந்த கொலம்பியா இந்த வெற்றியின் மூலம் அடுத்த சுற்றுக்குள் நுழையும் தகுதியை பெற்றுள்ளது.

# மீனவர் பிரச்சினை குறித்து இலங்கையுடன் பேச்சு
## இந்தியா தெரிவிப்பு

(சென்னை)

தமிழக மீனவர் பிரச்சினை தொடர்பில் இலங்கை அரசுடன் பேசி வருவதாக இந்திய மத்திய வர்த்தகத்துறை இணை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மீனவர்கள் பிரச்சினையில் தொடர்ந்தும் இந்திய அரசு அக்கறை காட்டி வருவதாகவும், அவர் தெரிவித்தார். சென்னையில் பா.ஜ.க. தலைமை அலுவலகமான கமலாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.



மேலும் இவ்விவகாரத்தில் இலங்கை அரசுடன் தொடர்ந்து பேச்சு நடத்தி வருவதாகவும் அவர் இதன்போது விளக்கமளித்ததாக தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# இந்திய மீனவர் படகுகளை விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்
## கடற்றொழில் அமைச்சு தெரிவிப்பு

நீதிமன்றம் உத்தரவிட்டால் மட்டுமே இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிக்க முடியுமென கடற்றொழில் அமைச்சின் தமிழ் ஊடக ஒருங்கிணைப்பாளர் சதாசிவம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது நீதிமன்றின் உத்தரவிற்கு அமையவே இந்திய மீனவர்களின் படகுகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

படகுகளை விடுவிப்பது தொடர்பான நடவடிக்கைகள் நீதிமன்ற உத்தரவிற்கு அமையவே முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சக்கரம் கழன்று விழுந்தது பயிற்சி விமானம் தரையிறக்கம்





(கொழும்பு)

இலங்கை விமானப் படையினரின் பயிற்சி விமானம் இயந்திரக் கோளாறு காரணமாக இரதமலானை விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டதாக விமானப் படையினர் அறிவித்துள்ளனர்.

தனியார் செஸ்னா வகை பயிற்சி விமானமே அவசரமாக தரையிறக்கம் செய்யப்பட்டது.

விமானத்தின் சக்கரங்களில் ஒன்று மில்லேனியா ( Millenia) பகுதியில் உள்ள தெற்கு அதிவேகப் பாதையில் மீட்கப்பட்டதாக விமானப்படையினர் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் பயிற்சி விமானி ஒருவர் படுகாயமடைந்துள்ளதாகவும் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விமானம் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டதாக விமானப் படையினர் குறிப்பிட்டனர்.

# மருத்துவபீட பயிற்சிக் கூட அடிக்கல் நாட்டப்பட்டது

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பயிற்சி கூடத்திற்கான அடிக்கல்லினை உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோரால் தரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் ரோசிரியர் அரசரட்ணம் தலைமையில் நேற்று இந் நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்.போதான வைத்திய சாலைக்கு அருகாமையில் உள்ள காணியிலேயே யாழ்.பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கான (Clinical Department) பயிற்சி கூடத்திற்கான பெயர்ப பலகை திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.



இந்நிகழ்வில் பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி பாலகுமான் மற்றும் யாழ்.போதான வைத்தியசாலை மருத்துவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# நடமாடும் கருக்கலைப்பு வண்டியுடன் போலி வைத்தியர் உட்பட மூவர் கைது

(கொழும்பு)

முச்சக்கரவண்டியில் நடமாடும் கருக்கலைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதாக கூறப்படும் போலி வைத்தியர் மற்றும் அவருடைய உதவியாளரை மாத்தளையில் வைத்து நேற்றுக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பெண் பொலிஸ் கான்ஸ்டபிளின் போலியான கருவை கலைப்பதற்காக பொலிஸ் கான்ஸ்டபிளுடன் சென்றே இவ்விருவரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.



20 ரூபா பெறுமதியான மருந்தில் முச்சக்கரவண்டிக்குள்ளேயே கருவை கலைப்பதாகவும் அதற்காக 18 ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக முச்சக்கரவண்டியின் கட்டணமும் அவர்களுக்கு செலுத்தவேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் இருவரும், கண்டி, மாத்தளை, குருநாகல் உள்ளிட்ட பிரதேசங்களில் ஆகக்குறைந்தது 200 கருக்களை இவ் வைத்தியர் கலைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


## விளம்பரம் சேகரிப்பாளர் தேவை

விளம்பரம் சேகரிப்பதில் முன் அனுபவமும் துடிப்புடன் பணியாற்றக்கூடிய செயற்றிறன் மிக்க இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

தகமையுடையோர் அலுவலக நேரத்தில் சுய விபரக் கோவையுடன் சமுகமளிக்கவும்.

**ஆளணி முகாமையாளர்,**
**தினமுரசு**
**இல.373, பிரதான வீதி**
**யாழ்ப்பாணம்**


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூன் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.